UNIVERSAL LIBRARY
OU_208071
UNIVERSAL LIBRARY

சுயசரிதை

வ. உ. சி.

# சுய சரிதை

வ. உ. சி.

முல்லைப் பதிப்பகர்
மயிலாப்பூர் : சென்னை-4

முதற் பதிப்பு 1946          விலை ரூ. 3  8  0
முல்லைப் பதிப்பகம்—மயிலாப்பூர்—சென்னை 4.

# நூலைப்பற்றி

முற்றிலும் அகவற்பாவால் அமைந்த எனது தந்தையாரின் இந்தச் ‘சுயசரிதம்’ பல ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்றதாகும்.

இதன் முதற்பகுதி தந்தையவர்களுடன் நெருங்கிப் பழகியவரும் பிற்காலத்தில் “லோகோபகாரி” பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவருமான பரலி. சு. நெல்லையப்பர் வேண்டுகோளுக்கு இணங்கி எனது தந்தையார் கோவைச் சிறைக் கோட்டத்தில் ‘காருண்ய அரசாங்கத்தின் கௌரவ விருந்தினராக’ இருந்தபோது அவ்வப்போது துண்டுத் துணுக்குகளாக எழுதியனுப்பியதன் கோவையாகும். இது இன்றைக்கு சுமார் முப்பத்தாறு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டது.

சுயசரிதத்தின் பிற்பகுதி எனது தந்தையார் சிறைக் கோட்டத்தினின்று வெளிவந்த பின்னர், முன்னர் “காந்தி” பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவரும் இப்பொழுது “தினசரி” பத்திரிகையின் ஆசிரியராகத் திகழ்பவருமான திரு. தெ. ச. சொக்கலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதப்பட்டதாகும்.

தலைப்புகள் எல்லாம் என்னால் தற்போது கொடுக்கப் பட்டவை தான்.

எல்லோருக்கும் விளங்கக்கூடிய இனிய எளிய தெளிய தமிழ்ப் பாவில் அமைந்துள்ள இச்சரிதத்தைத் தமிழ் நாட்டார் விரும்பி ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

வணக்கம்.

வ. உ. சி. சுப்பிரமணியம்,
“தினமணி” உதவி ஆசிரியர்.

சென்னை.
‘சிதம்பரவாரம்.’
(18-11-'46)

# பதிப்புரை

**ஓட்டம் நாங்கள் எடுக்கவென்றே கப்பல் ஓட்டினாய் — பொருள் ஈட்டினாய்!** — கேட்டவன்: ஒரு ஐ. ஸி. எஸ். கலெக்டர். வெள்ளையன்.

**பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை போகவோ?—நாங்கள்—சாகவோ?**—பதிலளித்தவன்: தமிழன், தேசபக்தன், வ. உ. சிதம்பரம் பிள்ளை.

இது முப்பது வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம்.

"வெள்ளையனே வெளியே போ" என்று நாம் இன்று கூவுகிறோம். தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை இதே குரலை முப்பது ஆண்டுகளுக்கு முன் எழுப்பினார்.

அவர் தீர்க்கதரிசியான தேசபக்தர்.

சாவகத்திலும், சுவர்ண பூமியிலும் சென்று தமிழ்க் கொடி நாட்டிய பண்டைப் பெருமைகளைப் பேசி காலத்தைக் கரைத்த வர்க்கமல்ல அவர். கொள்ளை போகும் சொத்துக்களைத் தடுக்க, வெள்ளையனை எதிர்த்துக் கப்பல் ஓட்டியவர். பிறநாட்டார் 'நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து நம் அருள் வேண்ட வேண்டும்' என்று கனாக்கண்டவர். அவருடைய சுதேசிக் கப்பல் வியாபாரத்துக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல; வெள்ளையனை நாடு கடத்த, வெளியேற்ற, அவன் ஆதிக்கத்தைக் கப்பலேற்றப் படைத்த சாதனம், அது.

கப்பலோட்டிய தமிழர், அவர்.

வங்கத்தில் எழுந்த புயலுக்கு நேராக, திருநெல்வேலியில் புரட்சித் தீயைக் கிளப்பிவிட்ட, தேசபக்தக் கனல் அவர். தேசத்தின் உரிமைக்காக, ஜாமீன் மறுக்கப்பட்டு, செக்கிழுக்கும் சி வகுப்புக் கைதியாகச் சிறை சென்றவர்.

மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ ?

என்று பாரதியார் கண்ணீர் விடும்படி கோவைச் சிறையில் கொடுமைக்காளான தியாக புருஷர் அவர்.

காகம் பறக்காத சீமையை ஆண்டு, 'வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னனென் காணிக்கு ஏது பணம் ?' என்று வெள்ளையனுக்குச் சவால் விடுத்த கட்டபொம்முவின் பாஞ்சைக் காற்று வீசும் வீர மண்ணில் பிறந்தவர், வ. உ. சி.

அவர் பிறவி வீரர்.

பூரண சுதந்திரத்தைப் பரம்பொருள் விசாரத்துடன் தேடித்திரியும் நமக்கு வ. உ. சி. வழிகாட்டும் தாரகை. இந்நூல் அவர் சரிதம்.

இந்தச் சுயசரிதையை நூலாசிரியர் திரு. பரலி நெல்லையப்பரின் வேண்டுகோளுக் கிணங்கி, எழுதியதாகத் தோற்றுவாய் கூறுகிறது. பரலி நெல்லையப்பரிடமிருந்து, நூலாசிரியரின் புத்திரர் நமக்கு வாங்கி உதவினார். பிதுர்வழி வேதம்போல, எங்கள்மூலம் இந்நூல் உங்களுக்குக் கிடைக்கிறது.

— முல்லை

# வ. உ. சிதம்பரம் பிள்ளை தற்சரிதம்.

## (தோற்றுவாய்.)

பூவுல கதனைப் பொருந்தி நின்று
தேவுல கதனிற் சிறந்த வுலகின்
நினைவொடு நிற்கும் *நெல்லை யப்பநீ
கனிவொடு கேட்டவென் கதைக்குறிப் பிஃதே:

## நாட்டுச் சிறப்பு.

ஏழ்பெருங் கடல்சூழ் ஏழ்பெருந் தீவினில்
வாழ்பெருந் தீவென மாண்டோர் உரைத்திடத்
திருமகள் என்றும் சித்தம் மகிழ்ந்தவள்
மருமகள் தன்னொடு மருவி உறையும்,
வாய்ந்தநன் மலைகளும் வருமிரு புனல்களும்,
ஆய்ந்தநன் னகர்களும் அழகிய வனங்களும்,
பெரும்பொருள் யாவும் பெட்பன பலவும்,
அரும்பொருள் யாவும் ஆலயம் பலவும்,
தக்க விளையுளும் தாழ்விலாச் செல்வரும்,
தக்கார் பலரும் தவத்தினர் பலரும்,
பொறைவருங் காலம் பொறுத்தும் இறைவற்
கிறைதனை எளிதில் இறுக்கும் குடிகளும்,
காவலும் நன்மையுங் கல்வியும் நிறைந்துள
† நாவலந் தீவெனும் நற்பெருங் கண்டத்துச்
சரதமு மின்பந் தழைக்கச் சுரந்திடும்
‡ பரதகண் டத்துப் பாரிய தேயத்து,

---

* நெல்லையப்பர்-சென்னை "லோகோபகாரி" மாஜி பத்திராதிபர் பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

† நாவலந்தீவு - ஆசியாக்கண்டம்.

‡ பரத கண்டம் - இந்திய தேசம்.

## நகர்ச் சிறப்பு.

வேண்டிய வெல்லாம் வேண்டியாங் களிக்கும்
பாண்டிய நாட்டிற் பண்டை நாளினில்
† அளகன் விருப்புடன் அமர்ந்தர சாண்டதென்
அளகையம் பதிஎனும் ஆதிப் பெயரினை
ஏட்டினிற் கொண்டதும் இந்த நாளினில்
ஒட்டப் பிடாரமென் றுரைக்கப் பெற்றதும்
அருந்திறன் நாட்டி ஆங்கில ரோடமர்
பொருந்திய கட்ட பொம்ம நாயகன்,
‡ பாஞ்சால மன்னன், பண்புடன் அமர்ந்த
பாஞ்சால நகர்மதில் பக்கத் துள்ளதும் ;
உலக நாயகி உவந்து வடக்கும்
சிலசிறு தேவர்கள் சிறந்து கிழக்கும்
குணமே புரியும் கணேசன் தெற்கும்
திருமால் உடனே சிவபிரான் மேற்கும்
வலனொடு நின்று நலனுறக் காப்பதும்
முதலிய பொருளெலாம் இதமுற அளிப்பதும்
பண்பினை இயற்றிப் பகையினை ஒழித்து
நண்பினை ஆக்கும் நல்லோர் நிறைந்ததும்
திறத்தினை வளர்த்துச் செல்வமிக ஈட்டி
அறத்தினைப் புரியும் அழகிய நகரிலே ;

---

† அளகன் - குபேரன்.

‡ பாஞ்சால மன்னன் - பாஞ்சால தேசத்தரசன் வழியிற் பிறந்தோன்.

## குடும்ப வரலாறு.

தாளால் வருவன தக்கார்க் கீந்து
வேளாண்மை புரியும் வேளாண் குலத்தில்
திருவும் அன்பும் சிறக்கப் பெற்றுத்
தருவும் பின்னிடத் தக்க வகையில்
செல்வமும் கல்வியும் திரட்டி அளித்த
கல்விச் சிதம்பரக் கவிஞன் பெற்ற
தக்க திறமையும் தகுதியும் வாய்ந்த
மக்களுள் மூத்தோன் வள்ளியப்பன்,
மேனாட் கொண்டவள் மேதினி நீங்க
மீனாட்சியம்மையை விரும்பி மணந்து,
குலத்தினை வளர்த்துக் குவலயம் நின்று
நலத்தினைப் புரிய நல்கினன் ஐவரை.
மூத்தோன் சிதம்பரம் முன்னூற் பொருள்களைக்
காத்தோன் என்னக் கரையில கற்றுத்
தகுதியும் வாய்மையும் தண்மையும் தாங்கி
மிகுதி களைய விளம்பும் வக்கிலாய்,
நீதி புரிந்து நீள்புகழ் செய்து,
ஆதி பகவன் அடியிணை சார்ந்து
நலத்தினைத் துய்க்க †நாலேழ் வயதில்
நிலத்தினைத் துறந்து நீங்கினன் மன்னோ!
பின்னவன் என்னைப் பெற்ற மன்னவன்,
முன்னவன் § நிலைதனில் முறைமையிற் சென்று

---

* தரு - கற்பகவிருட்சம.

‡ மேல்நாள் கொண்டவள் - முன்னாளில் மணந்த முதல் மனைவி.

§ நிலை - (வக்கில்) உத்தியோகம்.

† நாலேழ் - இருபத்தி எட்டு.

‡ நடுவினைப் புரிந்து நன்னிதி யீட்டிக்
கொடுவெனு முன்னங் கொடைபல வளித்துச்
சீரெலாங் கொண்டு திறத்துட னமர்ந்து
பாரிலென் அன்னை பரமாயி துணையா
உலக நாயகிக் கூழியம் செய்யும்
உலக நாத உத்தமப் பெயரினன்
மூன்றும் மகனென முறைமையின் வந்த
சான்றோன் குமாரசாமியென் போன்
நலமே புரிந்து நானிலம் வீட்டுச்
சிலநாள் தன்னிற் சிவபதம் அடைந்தனன்.
மற்றையர் இருவர் மங்கையர். அவர்நனி
கற்ற கணவரைக் கைப்பிடித் தேகி
ஒளியினை நிறுத்தி ஒண்ணிதி பெருக்கி
இளையாள் பெற்றனள் இருநன் மக்கள்.
முன்னவன் நல்லமுத்து சுவாமி ;
பின்னவன் சுப்பிரமணிய பிள்ளை.
இருவரும் நன்மக வீன்று முந்திய
ஒருவன் சென்றான் ; ஒருவன்வாழ் கின்றான்.
என்னொடு பிறந்தோர் எழுவ ராவர்.
மன்னிய தமக்கை வள்ளியம்மை
தங்கை யொருத்தி தரைவிட் டேகினள்.
இளையான் ஒருவன் என்னொடு சிலநாள்
பள்ளிக்கு வந்து படித்துப் பழகியென்
உள்ளம் வருந்திட உலகினை நீத்தனன்.
அவனுக் கிளையோன், அருமையொடு வளர்ந்தோன்,
எவனுக்கும் இளையான், ஈடில் குணத்தான்,

‡ நடுவு - நீதி.

* மீனாட்சி சுந்தரம் விரும்பி மகவொடு
தானாட்சி புரிந்து தகுதியொடு வாழ்கிறான்.
பெருமையும் கல்வியும் பேணுறும் தங்கையென்
அருமை மாலை யம்மை என்பவள்
சோம சுந்தரத் தூயோன் மனைவியாய்
நாமம் நிறுத்தி நன்கில் வாழ்கிறாள்,
கடைசியிற் பிறந்த கலியாண சுந்தரம்
தடையற ஆங்கிலம் தமிழொடு கற்றிடும்
நாளையில், என்பிதா நாளும் வருந்திட
நாளை முடித்தனன். நானிது காறும்
குடும்ப வரலாறு கூறினேன் சுருக்கி;
இடும்பை யுற்றவென் இயல்பினி மொழிவனே.

---

*மீனாட்சிசுந்தரம்-நூலாசிரியர் தம்பியான மீனாட்சி சுந்தரம் பிள்ளை. நூலாசிரியருக்கு ராஜநிந்தனை வழக்கில் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்றதைக் கேட்டு அதிர்ச்சியுற்று புத்தி தடுமாறிப் பித்தராகத் திரிந்து 1943-ம் ஆண்டு காலமானார்.

## பிறப்பும் கல்வியும்.

மாயிரு ஞாலம் வழங்கும் கொல்லம்
ஆயிரத்து நாற்பத் தெட்டாம் ஆண்டினில்,
அளகையர் பதியினில் ஆவணி அத்தத்தில்
வளமுள என்மனை மாண்புறப் பிறந்தேன்.
சின்னாள் முன்னர்த் திருக்குறு றலர்
மன்னிய என்பிதா மகிழ்வொடு வந்துயான்
பிறக்கு முன்னரென் பெரிய தந்தையை
இறக்கக் கொடுத்ததால் இடர்க்கட லாழ்ந்தவென்
பாட்டனும் பாட்டியும் பட்ட துயரினை
ஓட்டிடக் கருதி "உம்மகன் பெரும்புகழ்
பதம்பெற மீண்டும் பாரினிற் பிறந்துளன் ;
சிதம்பரம் என்று செப்பிடும்" என்ன,
மேலோன் பெயரால் விளம்பினர் என்னை.
மேலோன் என்றே மேன்மையொடு வளர்த்தனர்.
எளியேன் பிறந்தபின் இயன்றன பற்பல.
களியேன் கூறி காரணம் தற்புகழ்.
ஆறும் வயதினில் அறிவை வளர்த்திடும்
ஆறும் பள்ளியில் அமர்த்தினன் தந்தை.
விழையுநற் றமிழினைப் பழையநன் முறையில்
விழைதர எனக்கு விளம்பிய ஆசான்
பாண்டியன் ஒருவன் பண்புடன் வாழ்ந்த
* பாண்டிய புறத்தினிற் பழமையா நின்று
மிகநலம் புரியும் வேளாண் குலத்தில்
தகவொடு தோன்றிய சான்றோன்-பெரியோன் ;

---

* பாண்டியபுறம் - குறுக்குச்சாலை என்னும் ஊருக்கு அருகிலுள்ள ஒரு கிராமம்.

வாய்மை என்பதே வாக்கினிற் கொண்டோன் ;
தூய்மை என்பதே தொடர்ந்த சிந்தையோன் ;
ஒழுக்கம் பலவும் உடையாப் புனைந்தோன் ;
இழுக்கம் ஒன்றே என்றும் இல்லோன் ;
சாந்தம் பொறுமை தகுதியென் றிவற்றின்
வேந்தன் என்ன விளம்பத் தக்கோன் ;
விருந்தினர்க் கென்றும் விரும்பி அளிப்போன் ;
திருந்திய சொல்லும் செயலும் உடையோன் ;
செந்தமிழ் நூலெலாம் சிறக்கக் கற்றவை
தந்தமிழ் தெனக்கொளச் சாற்றும் திறலோன் ;
கருட தரிசனம் கண்டா லல்லது
பருகான் நீரும் பத்துநாள் என்னினும்,
வெண்ணீறும் *மணியும் மேவப் பெற்ற
தண்ணிய அழகிய சரீரம் கொண்டோன் ;
வயதோ நாற்பது வளரப் பெற்றோன் ;
பெயரோ வீரப் பெருமாள் அண்ணாவி,
அன்னோன் சிறந்த அடியிணை சார்ந்து
பன்னாட் கேட்கும் பாக்கியம் பெற்றிலேன்.
அறிவரிச் சுவடி, ஆத்தி சூடி
செறிவுறக் கேட்டுச் சிந்தையுட் கொண்டேன் ;
எண்ணின் சுவடி, எழுதும் சட்டம்
கண்ணுறக் கொண்டு கருத்தொடு பழகினேன்
உலக நீதி ஒழுக்க இயல்பு
பலமுறை கேட்டுப் பண்பொடு பயின்றேன்
கொன்றை வேந்தன், † குழியின் பெருக்கம்,
‡ வெற்றி வேற்கை. § வெண்பா மூதுரை

---

* மணி - உருத்திராக்கமணி.

† குழியின் பெருக்கம் - குழிப்பெருக்கம் எனும் கணித நூல்.

§ வெண்பா - நளவெண்பா.

‡ வென்றிவேற்கை - வெற்றிவேற்கை.

இயற்றிய ஆன்றோர் எண்ணிய பொருளுடன்
பயிற்றிய வண்ணம் பண்புறக் கேட்டேன்.
அந்நாள் இரவிலென் பொன்னகர்த் || தாலுகா
மன்னிய நல்லோன், மாநிற மேனியோன்,
அருட்டிறம் நிறைந்த அந்தணர் குலத்தோன்,
* கிருட்டினன் என்னும் கிழவன்-பெயரினோன்
ஆங்கிலம் எனக்கு அழகுறச் சொல்லினன்.
தாங்கிலே னாயினும் தகுதியிற் கேட்டதை
மனத்தினுட் செலுத்தி மறக்கா தொவ்வொரு
தினத்தினும் படித்துச் சிந்தித்து நின்றேன்.

---

|| தாலுகா - தாலுகா ஆபீஸ்.
* தாலுகா ஆபீஸ் கிருஷ்ணய்யர்.

## ஒருவருக்காக ஊருக்கெல்லாம் கல்வி !

நாலாறு திங்களில் நான்மறை யாளன்
வேலை முறைமையில் வேற்றூர் சென்றனன்.
உடனென் பிதாவாம் உத்தம சீலன்
திடனொடு சிலரைச் சேர்த்தென் னூரின்
மக்கள் யாவரும் மகிழ்ச்சியின் ஆங்கிலம்
தக்க இயலொடு சார்ந்துகற் றற்குக்
கலாசாலை அமைத்திடக் கருதி, அதற்கு
வலாரும் வலுநரும் மதித்திடத் தமிழுடன்
ஆங்கிலம் கற்றேற அறவினை வளர்த்தோன்
ஈங்கெவர் தமக்கும் இன்புற உணர்த்தும்
திறத்தினைக் கொண்டு சீர்பல எய்தி
அறத்தினை இயற்றி † அறம்வளர்த்த நாதனும்
எட்டய புரத்தில் இருந்த சீலனைத்
திட்டங் கட்டிச் சீக்கிரம் கொணர்ந்து
சிவபிரான் சந்நிதித் தெருவில் அவனுடை
அவமாக் கிடந்த அழகிய நிலத்திற்
கட்டிடம் ஒன்று கட்டுவித் ததிலொரு
பட்டப் பகற்குளே பள்ளியை அமைத்தனன்.
சிறுவர் யாவரும் சென்றதிற் சேர்ந்து
மறுவிற் கல்வியை மாசறக் கற்றேம்.
ஓரீர் ஆண்டில் ஒப்பிலான் அருளால்
ஈரிரு வகுப்பினை எளிதினிற் கடந்தேன் ;

---

† அறம்வளர்த்த நாதன் - அறம்வளர்த்த நாத பிள்ளை.

அடுத்த வகுப்பினை அமைத்திட எந்தை
அடுத்த *புதியம் புத்தூர் அமர்ந்த
ஆடம்ஸன் என்னும் ஆங்கிலப் பாதிரி
நாடு மதித்திட நல்ல கிறிஸ்தவ
மதத்தினை மிக்க வலத்தொடும் தக்க
பதத்தொடும் விதைத்திடும் பண்புடை யாளன்,
தன்னைக் கண்டு தகவொடு பேசி
என்னூர் மறுதினம் எய்திடச் செய்து,
‡ மதநூல் தவிர மற்றவை பயிற்றும்
விதமாப் பேசி வேலையை முடித்துப்
பள்ளிமேற் பார்வையை பண்பொடு கொடுத்தனன்
பள்ளியை ஏற்றவன் பக்கத் திருந்த
சுவாமி நாதத் தூயோன் தன்னை
அவாவி மேல்உபாத்தியா அமர்த்திச் சென்றனன்.
மேலோ னிடத்து விரும்பியான் கற்கையில்
சாலப் படித்த சண்முகம் பிள்ளையை
வருத்தித் தந்தனன். வகுப்பைந் தாறினில்
திருத்திய கற்றுத் தேறினேன் பரீட்சையே.
என்னூர் படிப்புக் கிறுதி யாயது;
என்னுடை † வயதன் றீரே ழாயது.
அருமந் திரத்தை அம்மைக் கருளிய
§ திருமந் திரநகர் சென்றேன்; தந்தை
உத்தம || உரோமன் காதலிக் சாலையில்

---

* புதியம் புத்தூர் - தட்டப்பாறை ஊருக்கு அருகிலுள்ள சிற்றூர்.

‡ மதநூல் - பைபிள் (Bible)

† வயது அன்று ஈரேழாயது—பதினான்கு வயதானது

§ திருமந்திர நகர்—தூற்றுக்குடி

|| உரோமன் காதலிக் சாலை (Roman Catholic School
(Xaviers High School)

‡ மத்திய பள்ளி வகுப்பினிற் சேர்த்தனன்.
§ மதுரநாயகம்எனும் மாணிறை புலவன்
சதுரமா எனக்குச் சாற்றின னாயினும்,
என்னுடை குறையால் இடறினேன் பரீட்சையில்.

‡ மத்திய பள்ளி வகுப்பு—மிடில் ஸ்கூல் கிளாஸ்.

§ மதுரநாயகம் பிள்ளை.

## பரீட்சையில் இடரல்: பள்ளி மாற்றம்.

பின்னர் அந்நகர் ‡‡ பிராட்டஸ்டண்டு
கலாசாலை தன்னிற் கற்றொரு வருடம்
சிலாக்கியம் பெற்றுத் தேறினேன் பரீட்சையில்,
மெற்றிரிக் குலேஷன் மேலாம் வகுப்பினிற்
கற்றிடத் திரும்பிக் காதலிக் பள்ளியை
அடைந்தேன். அந்நாள் அங்கினி தமர்ந்து
மடந்தனை ஆண்ட மாண் † கௌசானல்
அன்பினைப் பெற்ற அந்தணர் குலத்தோன்,
இன்புறக் கல்வியை அன்புடன் உணர்த்தி
* அபாத்திர மதனையும் அழகுறச் செய்யும்
உபாத்தி யாய உத்தமத் தொழிலோன்,
†† அண்ணாத் துரைஎனும் அழகிய பெயரோன்,
நண்ணா தாரையும் நண்ணிடச் செய்வோன்,
அருளும் திறனும் அமைதரப் பெற்றுத்
தெருளும் புகழும் சிறக்கச் செய்தோன்
தன்னிடம் என்னையென் தந்தை சேர்த்தனன்.
அன்னவன் என்னை அன்புடன் ஏற்று
மகனெனக் கருதி மனைமுன் இருத்தித்
'தகவொடு கல்'எனச் சாற்றினன்; யானும்
தந்தை அவனெனத் தாயவன் மனையெனச்
சிந்தையிற் கொண்டு திறத்துடன் அமர்ந்து

---

‡‡ Caldwell High School.

† கௌசானல்—ரெவரெண்டு பாதர் கௌசானல்.

* அபாத்திரம்—கற்கத் தகுதியிலான்.

†† அண்ணாத்துரை—அண்ணாத்துரை ஐயர்.

பகலினும் இரவினும் பள்ளியினும் இல்லினும்
'பகலவன்' எனஅவன் பண்புடன் அளித்த
கல்வியைப் பெற்றுக் களித்திடும் நாளையிற்
செல்வம் மிகுந்த திருநெல் வேலியின்
அருகினி லுள்ள அழகுறும் § இந்துப்
பெரியகலா சாலையைப் பேணி யடைந்து
சின்னாட் கற்றுத் திருமந் திரநகர்
மன்னா நின்று ‡ மறையவர் சார்ந்து
திருவடி தொழுது சேர்ந்தவன் பள்ளியை
மருவி நின்று வாசிக்க லானேன்.
மாலடி வணங்கும் மாமறை யாளன்,
நாலு முளமே நாளும் புனைவோன்,
கதியொடு நடப்போன் * கஸ்தூரிப் பெயரினோன்,
மதியுயர் கல்வியை மாசறக் கற்றோன்,
வல்லவை தன்னுள் வல்லவை சேரான்,
நல்லவை தன்னுள் நல்லவை சொல்வான்,
அறைந்தன யாவும் அண்ணாத் துரையோன்
திறந்தனை விளக்கிச செப்பிய யாவும்
கேட்டுக் கற்றேன் கிளர்ச்சியில் ஆங்கிலம்.
நாட்டினில் என்றும் நலந்தருந் தமிழைத்
தவறிலா துணர்ந்து தக்கோ னான
† சவரி ராயச் சான்றோன் உரைக்கக்
கேட்டுக் கற்றேன். கிட்டிய பரீட்சையில்
ஓட்டம் உற்றேன், ஊக்கம் விடாது

---

§ இந்துப் பெரிய கலாசாலை—ஹிந்துக் காலேஜைச் சேர்ந்த ஹைஸ்கூல்.

‡ மறையவர்—அண்ணாத்துரை ஐயர்.

* கஸ்தூரிப் பெயரினோன்—கஸ்தூரி ஐயங்கார்.

† சவரி ராயர்—திருச்சி செயின்டு ஜோசப் காலேஜ் தலைமைத் தமிழ் பண்டிதர் சவரி ராய பிள்ளை.

மருவரு டத்தினில் மற்றவ ரிடத்தும்,
குறுகிய மாலைக் கொண்டுளம் நின்றவன்
சென்றிட வேறூர் சேர்ந்தவன் நிலையை
நின்ற வெங்கு சாமி நேய
மறையவ னிடத்தும் வாய்ப்பக் கேட்டுக்
குறைவினை நிரப்பிக் கொண்டேன் வெற்றியை

## படிப்புக்கு முற்றுப் புள்ளி.

மேலாம் படிப்பினை விரும்பி அந்நகர்
† காலேஜ் என்னும் கல்லூரி தன்னை
அடையச் செய்தனன் அறிவுயர் தந்தை.
கடைவழி சென்றியான் காலம் கழித்தேன்.
அன்னது தெரிந்தவன் அடைந்து * மந்திரம்
என்னை என்னூர்க் கிழுத்துச் சென்று,
பலமதி கூறிப் பக்கத் திருத்திச்
சிலதினம் கழிக்கச் செய்தனன். அந்நாள் :

---

† காலேஜ்—கால்டுவெல் காலேஜ்.
* மந்திரம்—திருமந்திர நகர்.

## தாலுகா ஆபீஸ் குமாஸ்தா வேலை !

ஓதிப் பற்பல உயர்ந்து தாசிலாய்
நீதி புரிந்த ‡ நெல்லை யப்பன்
தருவித் தென்னைத் தாலுகா விடத்தினை
மருவிக் கிளார்க்கா வரைந்திடச் சொல்லினன்.
தந்தை அவன்சொல் தட்டமாட் டாமல்
அந்த வேலையில் அமர்ந்திடச் செய்தனன்.
சிலநாள் பார்த்ததைத் தீர்த்துப் பின்னர்,
நலமா வீட்டினை நண்ணி யிருந்தேன் !
தந்தை அடிக்கடி தக்கன சொல்லியென்
சிந்தையைத் திருப்பித் † திரிச்சிக் கேகி
நடுவினைத் திறக்கும் நன்னிலைக் கல்வியைக்
கடிதினிற் கல்லெனக் கட்டளை யிட்டனன்

‡ நெல்லையப்பன்—தாசில் நெல்லையப்ப பிள்ளை.

† திருச்சி—திருச்சிராப்பள்ளி.

* நடுவினை—நீதியை.

# சட்டப் படிப்பு.

எந்நகர் தன்னினும் ஏற்றம் மிகுந்த
அந்நகர் அடைந்தியான் ஆல்டார் வீதியைப்
பொருந்திச் சிலநாள், பொற்புறு வசந்தன்
திருந்திய தெருவினைச் சேர்ந்து சிலநாள்,
தங்கியங் கிருந்த † சட்ட வகுப்பினுட்
பொங்கிய உவகையிற் புகுந்தங் கமர்ந்த
கருணை நிறைந்த கணபதி யையர்,
அரிகர மய்யர் ஆதியோர் தம்பால்
சட்டம் பலவும் சரியாக் கேட்டு
விட்டவை சும்மா வீணைட் கழிக்கத்
துணிந்தேன். அந்நாள் தூயவென் தந்தை
அணிந்துரை எழுதி "ஐயா, நீ இது
பார்த்த வுடனே பயணப் பட்டுச்
சேர்த்தி என்னுயிர் சீக்கிரம்" என்றான்.
படித்ததும் அதனைப் பயணம் செய்து
முடித்து விடியு முன்னரென் தந்தையைக்
கண்டேன்; அவனெனைக் கட்டி முத்தினன்.
உண்டேன் அவனுடன்; உவந்தவண் தங்கிப்
படித்தேன்; வந்த பரீட்சையிற் றேறினேன்.
படித்தநாள் நிகழ்ந்தன பகர்வேன் இனியே.

† சட்ட வகுப்பு—Law class.

## கற்றவை: கண்டு களித்தவை.

ஓட்டப் பிடாரம் உற்றமுற் றினங்களிற்
பாட்டனொடு சென்று பாரத வாசகம்
குணிநல் அல்லிக் குளத்துச் சுப்பிர
மணிய பிள்ளை வாசிக்கக் கேட்டும்,
வீட்டினில் ஒவ்வொரு விடியற் காலையும்
பாட்டி மீனாள் பகர்ந்தநஞ் சொக்கரின்
திருவிளை யாடல் திருக்கதை யனேகம்.
ஒருவிளை யாடலா வுவந்துட் கொண்டும்,
பாட்டன் இரவினிற் படுக்கையிற் சொல்லிய
தேட்ட மிகுந்திடுஞ் சீருடை * இராகவன்
கதையினைக் கேட்டும், கணபதி யாலயம்
நிதமும் அவனொடு நியமமாச் சென்றும்,
† கட்டாரி முதலிய கடைத்தெரு வமர்ந்த
எட்டாப் பரத்தினை எய்திய துறவிகள்
இயம்பிய உரையும் இன்னிசைப் பாடலும்
நயம்படக் கேட்டும், நற்றொண்டு புரிந்தும்,
நல்லார் தம்மொடு நாளும் வீட்டினிற்
பல்லாங் குழியிற் பாண்டிபல வாடியும்,
சிறுவர் தம்மொடு சிறுவீடு கட்டி
அறுசுவை யுண்டி யருந்தியும் திரிந்தேன்.

---

* இராகவன் கதை—ராமாயணம்.

† கட்டாரி—கட்டாரிச் சாமியார் என்பவர்.

# தமிழ் நாட்டு விளையாட்டுகள்.

பிற்றைத் திங்களிற் பேணாது கல்வியை
மற்றைச் சிறுவரை மருவி, அவரொடு
சுவர்மேல் நடத்தல், தொன்மரம் ஏறுதல்,
கவண்கொடுங் கைகொடுங் கல்லெறி பழகுதல்,
கண்ணணியைப் பொத்திக் காட்டில் விடுதல்,
எண்ணணியைச் சுவாசம் இழக்காதி யம்பல்,
குதிவட் டாடுதல், கோலி தெறித்தல்,
குதிரைமீ தூர்தல், கோலேறி நடத்தல்
காற்றிரி எறிதல், கான்மாறி யோடுதல்
மேற்றிரி பந்தின் விளையாட்டுப் பற்பல.
சடுகுடு, கிளியந் தட்டு, பல்லி,
நெடுகடு மோட்டம், நீர்விளை யாட்டம்,
கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல்,
* தம்மினை அடக்கித் தலைகீழ் நடத்தல்,
கசரத்து, பஸ்கி, கலப்புறு குஸ்தி,
நிசத்துச் சண்டையில் நிற்கும் முறைகள்,
தாயம், சோவி, சதுரங்கம், சொக்கட்டான்,
காயிதச் சீட்டுக் கரந்திருந் தாடுதல்,
வெடிகொடு சுடுதல், வில்கொடு தெறித்தல்,
அடிபிடி சண்டை அளவில புரிந்தேன்.

---

* தம்—மூச்சு (Dum)

# சிதம்பரச் சிறுவனுக்குச் சங்கடம் !

இந்த நாளையில் என்சிறிய அத்தை
வந்தனள் கொழுநன் வான்செல என்னிலம்.
பெரிய அத்தை பெரு† முத்து சாமியை
உரிய மகனு வுடன்கொண் டேகினள்.
சின்ன‡ சுப் பையனைத் தினமும் ஊட்டி
என்னினும் அவாவி எழிலுற வளர்த்தேன்.
தமக்கையும் தாயும் சார்ந்தவர் தம்மொடு
நுமக்கிங் கென்னென நொடியினில் ஆயிரம்
சண்டை தொடுப்பர்; தடுத்ததை நிறுத்திப்
பண்டை யுரிமையைப் பகர்வேன்; அந்நாள்
மிகுசெல விட்டு விவாகம் நடாத்தித்
தகுதியில் 3 கணவனையென் தமக்கைக் களித்தென்
வீட்டுடன் இருக்க விளம்பினன் தந்தை. யான்
காட்டினிற் சென்றிடுங் கதியினை அடைந்தேன்.
பொறாமை மேற்கொடு புறத்திருந் துற்றவன்
அரும்பல பழிகளை ஆக்கிக் கூறுவன்.
தந்தை என்னைத் தாறுமா றாக
நிந்தை புரிந்து நினைத்தற் கரிதா
அடிப்பன்; மிதிப்பன். யானுடன் ஓட்டம்
பிடிப்பன். அவன் பின்றொடர்ந்து கொணர்வன்.

---

† முத்துசாமி—நல்ல முத்துசுவாமிப் பிள்ளை.

‡ சுப்பையன்—சுப்பிரமணிய பிள்ளை.

3 கணவன்—கணவனாகிய முத்துகுமாரசாமிப் பிள்ளை.

# துறவு கொண்ட சிதம்பரம்!

எண்ணிலாத் தடவை இப்படி நேர்ந்தன.
கண்ணிலா தொருநாள் கணக்கிலா தடித்தான்.
நினைந்தேன் துறவினை: நீக்கினேன் சிகையினை.
புனைந்தேன் கௌபீனம்; பொள்ளென நடந்தேன்.
நண்ணினேன் மதுரையை நாளிரண்டுக் குள்ளே.
எண்ணினேன் துறவினை இடையிற் றுறந்திட:
எழுதினேன் என்னூர் இட்டனொருவற்கு
விழுமிய காசி விசுவ நாதரைக்
கண்டு வணங்கக் கடிதினிற் செல்வதா.
கொண்டதும் அவனதைக் கொடுத்தனன் என்னைப்
பலவூர் தேடிப் பயன்படா துழந்து
நலமெலாம் விடுத்து நைவுறுந் தந்தைபால்.

## தோல்வியுற்ற துறவறம்.

பார்த்ததும் அவன்தான் பலவுற வினரைச்
சேர்த்துக் கொண்டு சேர்ந்தனன் மதுரை
வழியெதிர் சென்றேன் வந்தவர் கண்டிட.
வழிமறித் தென்னை வாரி யெடுத்தனர்
தந்தை அழுதனன் ; தக்கன கழறினன் ;
எந்தை சொக்கர் இணையடி தொழுதுபின்
வளநகர்ச் சிறப்பெலாம் மறுதினம் நோக்கி
அளகையம் பதியினை அடைந்தேன் அவருடன்.

## ‘கெட்டும் பட்டணம் சேர்.’

சின்னாட் சென்றிட ஜெலால்கான் என்னும்
பன்னாட் சிலம்பினைப் பயிற்றுவித் தவனை
அழைத்துக் கொண்டியான் அறியா தெவரும்
தழைத்து நிற்குந் தலைநக ராகிய
சென்னைப் பட்டினம் சென்றேன். அங்குவந்
தென்னுயிர் தந்தை எம்மையூர் கொணர்ந்தனன்.
திருமந் திரநகர் சேர்ந்து கற்கையில்
ஒருவன் சொல்லினை உவந்துட் கொண்டு
சென்னை மறுபடி சென்றேன்; எழுதியங்
கென்னைத் திருப்பினன் இணையிலென் தந்தை.
அளகையில் ‘கிளார்க்’கின் அலுவலை விட்டபின்
வளமெலாம் நிறைந்து மாண்பெலாம் எய்திச்
சீரினைக் கொண்ட திருவனந் தபுரம்
ஓரிர வுறங்கையில் ஒளித்துச் சென்றேன்.
பிதாவங் கெழுதிப் பின்னரும் திருப்பினன்.
சதாவும் இப்படித் தலம்பல சென்றும்
தந்தையின் வரவால் தக்கநன் முயற்சியால்
சிந்தை திரும்பத் திரும்பி வந்தும்
கெடுவன புரிந்தேன்; கிளர்ச்சியொடு நின்று
* நடுவினைப் புரிந்த நன்னிலை பகர்வனே.

---

* நடுவினை-வக்கீல் தொழில்.

# வக்கீல் தொழில் புரிந்தமை.

என்னுளம் மதிக்கும் ஏகுவின் வருடம்
தோன்னூற் றைந்தினிற் சொல்லிய பரீட்சையில்
தெளிந்ததற் குரிய சீட்டினைப் பெற்றுத்
தெளிந்தவர் தங்கும் திருமந் திரத்தில்
'சீவில்' 'கிரிமினல்' என்றே செப்பிடும்
தாவா வழக்கும் தண்டமும் புரியும்
இருதிறக் கோர்ட்டினும் இயல்பொடு சென்று
வருவிவ காரத்தை வலுக்கொடு நடாத்தி
ஒண்பொருள் இயற்றி ஒளியினைப் பெருக்கிப்
பண்பினைச் செய்து பயன்படும் நாளையில்
சிறியவர் வழிகளிற் சென்று திரிந்தேன்.
அறிவுயர் தந்தைஎற் கறைந்தனன்; இடித்தனன்.
ஒன்றினும் நல்வழி ஒன்றிட மாட்டேன்
என்றெனை என்னூர் ஏகிடச் செய்தே
அவனுள தண்டம் அளித்திடுங் கோர்ட்டில்
சிவணிஅத் தொழிலினைச் செய்திடச் செய்து
வாழ்க்கைத் துணையை மாண்புற அளித்து
வாழ்க்கையை ஒழுங்கில் வரும்படி செய்து
"பொருளும் குடியும் புகழொடு பெருக்கி
அருளும் தெருளும் ஆக்குக" என்றனன்.

## வக்கீல் தொழிலில் வல்லமை.

நீதித் தலத்தில் நிதம்வரும் கேஸ்களில்
பாதி எனக்குப் பலித்தத் தந்தையும்
பிதாவும் அறிவுயர் பெரிய தந்தையும்
உதார மொடுபுகழ் ஓங்கநின் றதனால்,
தெய்வநற் கிருபை சேர்ந்துநின் றதனால்,
செய்வதெதனையும் திருந்தயான் செய்ததால்,
எடுத்த கட்சியை இடையில் விடாது
தொடுத்து நடாத்தும் துணிவினைக் கொண்டதால்
வந்தவ ரிடத்து மதுர மாகவும்
சொந்தம தாகவும் சொல்லுரைத் ததனால்,
உடையும் தோற்றமும் உயரக் கொண்டதால்,
கொடையும் குணமும் குலவுறச் செய்ததால்,
கொண்டவன் எதிரியைக் குவலயம் கலங்கினும்
அண்டம் கலங்கினும் அணுக விடாததால்,
எளியவர் வழக்கினை ஏற்றிடா மற்பொருள்
களியொடு நடாத்திய கருணை யதனால்,
நீ பதியின் நெஞ்சம் திரும்பிட
ஓதி வழக்கினை உணரச் செய்ததால்,
கமிஷன் என்றிடும் கைக்கூலி கொடுத்தல்,
அமிசம் அன்றென அறவிடுத் ததனால்,
கொண்டவன் கட்சி குலைந்திடக் கண்டால்
அண்டி எதிரியை அணைத்துப் பேசி
இராஜி செய்தும், இடையில் நிறுத்தியும்
வராது தோல்வியை மனத்தொடு காத்துப்
பத்தினி லாறு சித்திய தாகவும்
ஒத்தன மூன்றும் * செத்த தோன்றுமாப்
பிடித்த வழக்கினை முடித்துநின் றதனால்,
அடுத்த வழக்கினர் தொடுத்து வந்தனர்.

---

* செத்தது-தோற்றது.

## போலீஸாரின் சூழ்ச்சி.

போலீஸ் என்னும் பொய்நிறை பேடியர்
தாலி இழந்திடத் தம்மூர் சென்றிட
விஞவெனும் கோல்கொடு வெருட்டி அடித்ததால்,
கஞவினும் எனையவர் கண்டுகொண் டிருந்து
துட்ட ‡ ஹேட் டாகிய சுப்பிர மணியனைச்
சுட்ட தாகத் தொடங்கிய வழக்கில்
எதிரிகள் என்னுடன் எண்ணிச் சதிதான்
புரிந்த தாகப் பொய்மிமோ || எழுதி
அன்னூர் தமக்குநான் ஆஜரா காமல்
பின்னே போயிடப் பேச்சுறுதி வேண்டினர்.
சமையம் அறிந்துயான் சரியெனக் கூறி
அமையம் வந்தபோ தாஜராய் நின்றேன்.
சாட்சியை உலைத்திடும் தகாச்செயல் செய்ததா
ஹேட்டொரு பிரியா தென்றொடு சிலர்மேல்
நடத்தினன். அவனை நஷ்டியெங் கட்குக்
கொடுத்திடத் தீர்ப்புக் கூறினன் * வைபர்ட்டு
சுட்ட வழக்குத் தொலைந்தது பொய்யென :
விட்டனன் ஹேட்டு வேலையை அவன்தான்.
அதற்குப் பின்னர் அடங்கினர் போலீஸார்.
எதற்கும் என்னை எதிர்த்திடத் துணிந்திலர்.

---

† விஞ-குறுக்கு விசாரணை.

‡ ஹேட்சுப்பிரமணியன்-ஹெட்கான்ஸ்டபிள் சுப்பிரமணியபிள்ளை

|| மிமோ-Memo.

* வைபர்ட்டு-தூற்றுக்குடி ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் லயோனல் வைபர்ட்டு.

# நீதிபதி (?) மீது வழக்கு.

† நீதி பதியாய் நின்றாரில் ‡ ஒருவன்
ஓதி உணர்ந்தும் உரைத்தும் பிறர்க்கு
அடங்குதல் இன்றி அகங்கரித்து நின்று
திடங்கொண் டவரையும் செல்வவான் களையும்
தண்டித் தழித்தலொடு தன்பெயர் சொல்லி
அண்டினோர் லஞ்சம் கொண்டிட நேர்ந்ததால்
அவன்கொண் டானென அவன்மேல் இருவரால்
துவன்றிய கேஸ்களில் துணைஅவர்க் களித்தேன்
பின் அவன் அடங்கிப் பெருமதி யுற்றான்.
பின்அக் கேஸ்களைப் பேணு தொழித்தேன்.
மனத்தொடு லஞ்சம் வாங்கிய ‖ இருவரைத்
தனத்திற் குறைக்கவும் தள்ளவும் செய்தேன்.
இச்செயல் எல்லாம் என்னுயர் தந்தையின்
இச்சைக் கெதிரா யிருந்துவந் தமையால்,
கருமந் திரண்டு கனிதர நின்றதால்,
திருமந் திரநகர் சேர்ந்தவண் தங்கிச்
சொல்லிய தொழிலைத் துணையற இயற்றி
எல்லை யிலாநிதி யீட்டினேன் ; ஈந்தேன்.
பிடித்த கட்சியின் பெயரும் விவரமும்
எடுத்திவண் உரைக்க இயலா தென்றால்.

---

† நீதிபதி-சப்மாஜிஸ்டிரேட்.

‡ ஒருவன்-மிஸ்டர் ஏகாம்பர மய்யர்.

‖ இருவர்-சம்பளம் குறைக்கப்பட்டு கிளார்க்காக 'ரெடியூஸ்' செய்யப்பட்டவர் மிஸ்டர் வாசுதேவ ராவ்: 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவர் மிஸ்டர் பஞ்சாபகேசய்யர். பி. ஏ. பி. எல்.

ஆதியில் ஒன்றும் அந்தத் தொன்றும்
ஓதி நிறுத்துவேன் உன்பொருட் டாக.
முடிமனில் என்னுடை முன்னோர் நாள்முதல்
அடிமை புரியும் அறிவினைக் கொண்ட
வேத நாயகர்எனும் மேம்படு பள்ளனை
ஏதமில் லாமலே எண்ணிலா வழக்கில் [னேன்.
அமிழ்த்தினர் போலிஸார் ; அனைத்தினும் திருப்பி
தமிழ்த்துறை உணர்ந்து † தம்பிரா னை
ஆறுமுகம் பிள்ளை ஆசாரி யொருவனைக்
கோறுதல் புரிந்ததாக் கொணர்ந்த வழக்கினில்
அவனைத் திருப்பினேன். அறத்தொடு நிற்குமென்
தவமனை மகவியல் சாற்றுவன் இனியே.

---

* முடிமன்-ஒட்டப்பிடாரத்திற் கருகிலுள்ள சிற்றூர்.

† ஆறுமுகத் தம்பிரான்-திருவாவடுதுறை மடத்தில் தம்பிரானாக இருந்து காலம் சென்றவர்.

## முதல் மனைவியார்

செந்தூர் நின்று சீரெலாம் திரட்டிச்
சொந்தமாக் கொண்ட சுப்பிர மணியன்
மகளாப் பிறந்து மாண்பெலாம் கொண்ட
மகராசி என்னும் வள்ளி யம்மையை
நன்மனை யறங்களை நன்கு வளர்த்திட
முன்மனை யாக மொய்ம்பொடு கொண்டேன்.
வளனூர் அந்நகர் மருவியான் மணந்ததும்
அளகையூர் அடைந்ததும் அதன்பின் நிகழ்ந்ததும்
முடிமன் மைத்துனன் முத்து சுவாமி
விளம்பிய * சரிதையுள் விரிவாக் காணலாம்
உதவியைக் கூறல் உயர்செயல் என்றும்,
இதமுடை யவர்குணம் இயம்பல்நன் றென்றும்
முன்னோர் உரைத்ததால் மொழிவேன் அவள்குணம்
பின்னோர் அவற்றைப் பேணுதற் பொருட்டே.
எனதொரு வடிவமும் எனக்குறு தொண்டுமே
கனவினும் நனவினும் கண்டவள் நின்றனள்.
என்னைப் பெற்றோர் என்னொடு பிறந்தோர்
என்னை நட்டோர் யாவருந் தன்னுடை
உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிரிலா மனத்தள் : தெய்வமே யனையள்
வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்.

---

* சரிதை-' வள்ளியம்மை சரித்திரம் ' என்னும் நூல்.

அறிவே வடிவமா அமைந்திவண் நின்று
செறிவுறும் இன்பம் சிறக்க அளிக்கும்
வள்ளிநா யகமொடும் மற்றும் மறைகளைத்
தெள்ளிய வுணர்ந்த திறத்தின ரொடும்யான்
பிரம நிலையினைப் பேசி விசாரணை
புரியுங் காலையில் புறத்தினில் நின்று
சொன்னவை யெல்லாந் துரிசறக் கேட்டுப்
பின்னவை யென்னொடு பெட்புறச் சொல்லுவள்.
பலருடன் அமர்ந்து பருகும் பொழுதப்
பலரும் அறியாப் பதத்திலும் மறைத்தும்
நானும் வள்ளி நாயகமும் நவில்வன
தானும் உணர்ந்து தனக்குள் நகுவள்.
சிவப்பொருள் உணர்ந்த † தேசிகன் ஒருவனென்
தவப்பய னால்இலம் தங்கப் பெற்றேன்.
ஊனக் கண்ணினை ஒழித்தவன் நின்றதால்
தானக் குறையினைத் தவிர்த்திட ஊட்டினள்.
குலத்தில் அன்னோன் குறைந்தவன் என்றென்
தலத்தினில் உள்ளோர் சாற்றினர் குற்றம்.

* வள்ளிநாயகம்-வள்ளிநாயக சுவாமியார்.

† தேசிகன்-விருதுநகர் ஸ்ரீ ராமய்யா தேசிகர்.

# மனை மந்திரி

கேட்டதும் அவ்வுரை கிழவோன் தன்னை
ஓட்டிடக் கருதியான் உரமில் லாமையால்
'அவளிடத் ' துரைத்திட அடுக்களை சென்றேன்.
அவளெனைக் கண்டதும் அறைந்திடு முன்யான்
"எல்லாம் உணர்ந்த என்னுயிர் நாத !
எல்லாம் கடவுளா யிருக்கக் கண்டும்,
உருவம் முதலிய ஒன்றிலும் பேதம்
மருவுத லிலாமை மலைபோல் கண்டும்,
கற்பனை யாகக் காணும் குலத்தின்
சொற்பிழை கொளலெனச் சொல்லிய தூய !
துறந்தவர் தமையும் தொடருமோ குலம்இவண்
இறந்தஅம் மொழியினை ஏற்றிடா தொழிப்போம்.
அன்றியும், இஃதெலாம் ஆதியில் நினைத்தே
ஒன்றிடா தமர்த்தி ஊழியம் புரிந்திடின்
பிழையென்றுர் உலகப் பேதைமை உணர்ந்தோர்.
பழமைபா ராட்டிப் பகுத்துப் பிரித்தல்
நன்றோ? நல்லோய்! நவிலுவார் நவிலுக !
என்றும் போலவன் இருக்கட்டும்." என்றனள்.
திருமந் திரநகர் சேர்ந்தபின் என்குல
குருவந் தனனெனக் கூறி அவற்குறும்
தட்சணை நிதியைத் தந்தனள் ; யானும்
பட்ச முடனவன் பக்கம் சென்றேன் :
செலவின் விவரம் தெரிய வினவினேன்.
பலவிவ காரம் பலத்தன, அவன் எனை
"சீடன் அலை "எனச் செப்பினான்-யானும்
வீடுடன் வந்தேன் ; விளம்பினேன். "அந்தோ !

பிறரும் நம்முறை பேசத் துணிவரே.
உறவினை விடுத்தல் ஒக்குமோ'' என்றனள்.
உற்றான் ஒருவன் ஒருநல் கட்சியோ
டுற்றான் : நல்கினான் : ஒளித்து வந்துபின்
"உரிய கமிஷனை உதவுக'' என்றான்.
புரிவ தறியாது பொள்ளெனச் சென்றுயான்
மங்கையை வினவினேன். மதியொடு பணிந்து " நும்
செங்கைப் பொருளைத் திருப்பிக் கட்சிபால்
கொடுக்க ; அவனைக் கொள்ளற்க'' என்றாள்
வடுக்கண் டொழிக்கும் மந்திரி யனையாள்.
இத்தகை அறிவினள் என்னரும் பிழைகளை.
எத்தகை உரியர் இயம்பினும் தன்னுடை
பொறிகளே காணினும் பொய்யெனும் பேதமை
செறிவுறக் கொண்டனள்; சிறப்புற நின்றனள்.
செய்ய என்தந்தை திட்டுவன் அடிக்கடி
செய்யா ததனால் சீர்சிறப் பவள்தாய்,
மனம் பொறுக்காது மாற்றுரை பகர்வேன் ;
அனம்போல் வந்தெனை ஆற்றியே நிற்பள்.
எண்ணிலா நண்பரை இழுத்துக் கொண்டுயான்
உண்ணச் செல்லுவேன் உரையாது முன்னர்.
அறுசுவை அடிசில் அன்பொடு படைப்பள்
சிறிதும் தாமதம் தெரிந்திலேன் என்றும்
பாடுவள் இன்புறப் பாதம் வருடுவள் ;
கூடுவள் கூடெனக் கூறிய பொழுதே
உடையோ நகையோ ஒன்றும் என்றும்
படைஎனக் கேட்டிலள் பண்பெலாஞ் செய்தனள்.
தொள்ளாயிரத்தில் சுவாமிநாயகமும்
" * கள்ளினும் இனிமையள் கனவாச் சென்றனள்''
எனவுரைத் திடவும், இரவினில் விழித்தவன்
மனஉ வப்புடனே மருந்தினை வழங்கவும்
நீங்கினள். "அவளினம் நீங்கிக் கொள்ளேன்.''
என்றேன். பிதா அவள் இளைய பாட்டன்
பேத்திமீ னாட்சியை வாழ்த்திஎற் களித்தான்
இருமகார் பெற்றேன். என்குணம் மொழிவனே.

---

* கள்-தேன்.

## குணத்தின் குன்றம்

மறுவிலா என்னுயர் மனத்தில் என்றும்
சிறுமையும் வெகுளியும் செறிவுறக் கொண்டேன்.
மதத்தினை யுடையார் மதத்தினை அடக்கி
இதத்தினைப் புரியும் இயல்பினை யுடையேன்:
பற்றுள்ள மென்னிடம் பார்த்தும் அறியேன்:
வெற்றுரை என்றும் விரும்பேன் கேட்கவும்:
அழுக்கா றென்றும் அறியேன் படிப்பினும்,
ஒழுக்கா றென்றும் உன்னுவேன் இழுக்கினும்
பொய்யுரை என்றும் புகலேன். ஆனால்
மெய்யுரை என்றும் விளம்பேன் பகைபால்
தவாவினை யெல்லாம் சாற்றுவேன் புரிவேன்;
அவாவினை யுற்றேன் அன்பினும் அறிவினும்
தொல்லை நூலினும் தொல்லை நெறியினும்:
‘ இல்லை ’ எனுஞ்சொல் எவர்க்கும் உரைத்திலேன்:
இனியவை கூறும் இயல்பினே னாயினும்
துனியது கொள்ளின் சொல்வேன் இன்னா:
தீவினை புரிதல் தீவினை யார்பால்
தூவினை என்றே சொல்வேன்; புரிவேன்.
உயிர்க்கொரு துன்பமும் உள்ளேன்; தீய
உயிர்க்கது புரிவேன் உயர்நெறிப் படுத்தவே.
அன்பினும் அருளினும் அளவு கடந்தேன்:
இன்பினும் மகிழ்வினும் இயல்பு கடந்தேன்;
அறத்தினை என்றும் ஆற்றுவேன்; சொல்வேன்:

* மதம்-அகங்காரம்-:யான்பெரியன் எனல்.

புறத்தினில் ஒன்றும் புகலேன்; கேளேன்;
சிந்தையைத் திருப்பிச் செலுத்துவேன் சிலதினம்:
சிந்தையின் திரும்பிச் செல்லுவேன் சிலதினம்:
பெருமித மின்மையே பெருமையெனக் கொள்வேன்:
அருமை யுடையவே ஆற்றுதல் புரிவேன்:
நீதியில் என்றும் நிலையுற நிற்பேன்:
ஆதி பகவனை அன்பொடு போற்றுவேன்.
மதகுல வேற்றுமை மனத்திலும் கொள்ளேன்:
நிதமும் அவையெலா நேரென மொழிவேன்:
தத்துவ நூலினும் தமிழுயர் நூலினும்
சித்தம் அமிழ்த்திச் சிந்தனை புரிவேன்.
புலவரும் உரையாப் பொற்புறு கவியின்
புலவரும் பொருள்களைப் பகர்வேன் நன்றெனா:
என்னுயர் குணமும் என்னுறு குற்றமும்
இன்னவை என்றியான் என்றும் உணர்வேன்:
சிறியவர் உரையினும் தெள்ளிய கண்டால்
அறிவெனக் கொள்வேன்; அவரைத் துதிப்பேன்:
பண்பும் ஆர்வமும் பலமுறச் செய்ததால்
நண்பின ராயினர் நானிலத் தறிந்தோர்.
இருபா லாரினும் எண்ணிலார் என்பால்
வருவர் இருப்பர் மருவிய மனத்தொடு.
மெய்ப்பொருள் உணர்ந்தோர், மேலறி வாளர்,
பொய்ப்பொருள் விடுத்தோர், புலவா ரிவரையான்
அவாவி நட்ட தன்றிமற் றனைவரும்
தவாதெனை நட்ட தன்மையைக் கண்டே
கேண்மை புரிந்தேன்; கிழவோன் ஆயினேன்:
ஆண்மையும் விடுத்தேன்; அடிமை யாயினேன்.
பழையராய் நின்றவர் பழைமையை மறந்து
பிழையையே இயற்றினும் பேணி அவரொடு
சொல்லிக் காட்டுவேன்; தொடர்ந்துமே விடிப்பேன்:
நல்லினல் மொழிவேன்; நட்பினை வளர்ப்பேன்:

சகல நண்பரும் தனித்தனி என்னுடை
அகலா உயிரென அகத்தினுட் கொள்வேன்.
திண்மைய ராயினும் சிறிதுநான் அறியா
வெண்மைய ராயினும் வேற்றுமை இன்றி
இயலும் உதவியை இன்பொடு புரிவேன்:
அயலென எண்ணேன் அன்பின் பெருக்கால்.

# மாண்பு நிறைந்த நண்பர்கள்

அஞ்சாமை, கல்வி, அடக்கம், கருணை
எஞ்சாமல் நிரம்பிய என்வள்ளி நாயகம்,
இலகுநம் தேயம் இன்புற வுழைக்குந்
* திலகன், †அரவிந்தன், ‡கப்பர்டே, மூஞ்சி
§ சீனிவாசன், பாரதி செப்பரும் பிறசிலர்
நானிவன் உணர்ச்சியால் நட்ட நண்பினர்.
உணர்ச்சி யொன்றும் உடன்பா டிலாது
புணர்ச்சி யொன்றால் பொருந்தினோர் அனேகர்.
பின்னாள் நெருங்கிப் பழகிய நண்பினர்
முன்னோன் ஒருவனும் மூவிரு பிறருமே.
அவருட் பெண்கள் இருவர்; மற்றையோர்
திருநெல் வேலிச் சிதம்பரம் பிள்ளை,
கந்த சாமிக் கவிராயர் || ஐயர்,
சொந்தச் சண்முக சுந்தரம் பிள்ளை.
பழகியார் நாயையும் பரிவொடு கொண்டியான்
விழைதர ஊட்டி மேலெலாம் தடவிப்
பக்கத் திருத்திப் பார்த்துளம் களிப்பேன்.
தக்கநண் பினர்செயல் சாற்றுவேன் ; அவரின்
உடையினைப் புனைவேன் ; ஊழியம் புரிவேன்:

---

|| ஐயர் - கந்தசாமி ஐயர் - தமிழ்ப்பண்டிதர்.
* திலகன் - பாலகங்காதர திலகர்.
† அரவிந்தன் - பகவான் அரவிந்தகோஷ்.
§ சீனிவாசன் - மண்டையன் ஸ்ரீனிவாஸாச்சாரியார்.
‡ கப்பர்டே - பம்பாய் தேசியத் தலைவர் கப்பர்தே.

நடையுடை கண்டு நயப்பேன் மகிழ்வேன்.
வள்ளிநா யகமீ எனும் மாணிறை துறவியால்
தெள்ளிய பற்பல சிறப்புறக் கேட்டேன் ;
உயிரெனும் ஒருத்தி உரிமைச் சரிதையை
செயிரென வைத்தல் தீயினில் இட்டேன்:
கைவல் லியப்படக் கருத்தொடு கற்றேன்
கைவல் லியமெனும் கருத்துயர் நூலும்
விசாரசா காமும் வேறொரு சிலவும்,
விசாரம் புரிந்து மெய்ப்பொருள் கண்டு
துன்பமும் இன்பமும் துலையெனக் காணும்
நன்பதம் தெரிந்தேன்; நன்கதில் நின்றிலேன்.

## சித்தம்பரத்தின் சிறந்த பத்திரிகை

விவேக பாநு விளங்குற எங்கும்
* "விவேக பாநு"வை வெளிவரச் செய்தேன்:
உண்முகம் நோக்கும் உபாயம் தெரிந்தேன்:
† சண்முகம் பிள்ளையின் தகுநட்பு உற்றேன்
சுருக்கி யுரைத்தலை, சொல்லுவ கேட்டலைப்
பெருக்கி அறிவுறும் பெற்றியைக் கொண்டேன்,
ஊழின் வலியால் உறுது துறவினைப்
பாழின் சிறுமைப் படுகடல் ஆழ்ந்தேன்:
சதாவும் பாணடி தழைக்கத் தொழுவேன்.
சுதேசியம் வளர்த்ததைச் சொல்லுவேன் இனியே.

* 'விவேகபாநு'-நூலாசிரியர் நடத்திய தமிழ் மாத சஞ்சிகை.
† சண்முகம் பிள்ளை-பாளையங்கோட்டை சண்முகம் பிள்ளை.

## சுதேசியம் வளர்த்தமை.

என்னுடற் பற்றினை இணையறக் கொண்டதால்,
என்னுடை மனைமுதல் இணைவுறக் கொண்டேன்;
புகழினில் விருப்பம் பொருந்திட நேர்ந்தேன்;
அகமதை அகற்றி அன்பினை வளர்த்தேன்:
சைவசித் தாந்த சபையினுட் புகுந்து
கைவரக் கொண்டேன் கருத்தினி துரைத்தலை:
மதுரைத் தமிழ்ச்சங்கம் மருவி நின்று
மதுரத் தமிழினை மனங்கொடு வளர்த்தேன்.
வாலிபர் சங்கம், மாண்பிரம சங்கம்
நாலைந்து மற்றவை நயத்தொடு சேர்ந்தேன்
பிரசங்கங் கேட்டேன்; பேசினேன் யானும்:
பிரசங்கி என்றொரு பெயரும் கொண்டேன்.
எத்திசைச் செய்தியும் எளிதினிற் றெரிந்திடப்
பத்திரிகை யொருசில பார்த்தேன் ; அவற்றால்
தெரிந்தநற் செய்திகள் செப்பினேன் பிறர்க்கு.
பரிந்துநன் கெவர்க்கும் படித்தன பகர்ந்தேன்:
முன்மனை மீது *முத்து சுவாமி
நன்மனங் கொண்டு நவின்ற வெண்பா
உணர்ந்தவை போல உரைக்க முயன்று
கொணர்ந்தேன் சிலகவி கூறிய வழியில்.
அன்பன் கந்த சுவாமி ஐயனும்
முன்பு சொன்ன முத்து சுவாமியும்
திருத்தி யவற்றைச் செப்பிடச் சந்தம்
பொருத்த மாகப் புகன்று சிலபின்

* நூலாசிரியர் மைத்துனர் முடிமன் முத்துசுவாமிப்பிள்ளை.

"பாநு"வில் விரும்பிப் பகர்ந்து விடுத்தேன்.
மாநிலம் கொண்டிட †வள்ளியும் உவந்திட
திருவள் ளுவரின் தெய்வமா மறையின்
பெருவளக் குறள்சில பேணிப் படித்தேன்:
நந்தாது விளங்கும் நற்சங்க நூல்களுள்
சிந்தா மணியும் சிலப்பதி காரமும்
மணிமே கலையும் மற்றுஞ் சிலவும்
துணிவோ டெடுத்துத் தொடங்கினேன் முடித்திலேன்
தொல்காப் பியமெனும் சொல்லுயர் நூலினை
நல்காப் பியமென நான்மனம் கொண்டு
முறைமையில் உரையொடு மொழியச் செய்து
நிறைவுறக் கேட்க நினைத்துச் சோளா
வந்தான் *சண்முக வாணனைக் கொண்டேன்;
தந்தான் ஒருசில தர்க்கம் புரிந்தே
உரையினைக் கேட்டேன்; ஒப்பக் கேட்டும்
புரையிலேன் என்றவன் போயினன் தன்னூர்.

---

† வள்ளி - சுவாமி வள்ளிநாயகம்.
* சோளவந்தான் அரசஞ் சண்முகனார்.

## உலகம் மாயையா...?

அன்பறி விங்ஙனம் ஆக்கியான் வருகையில்
என்பெரிய அத்தையோ டேகினேன் சென்னை.
† இராம கிருட்டிணு னந்தனைக் கண்டேன்.
"தராதலம் பரவிச் சாரும் சுதேசியக் [வும்,
கைத்தொழில் வளர்க்கவும், கைத்தொழில் கொள்ள
எத்தகை முயற்சி இயற்றினை" என்ருன்.
"கனவினை நிகர்த்துக் காணுமிவ் வுலகின்
நினைவினைக் கொண்டென்? நீள்வினை யாற்றியென்?
கீழ்கோ டுயர்ந்தென்? மேல்கோ டுயர்ந்தென்?
வாழ்வோ தாழ்வோ மாய்கையே!" என்றேன்.
"சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்
இதேஎன் கடைப்பிடி" என்றனன். அவனுரை
வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம்:
சித்தம் அதனைச் சிதையாது வைத்தது:
அடுத்தகார்த் திகையில் ‡ அருணம் செல்வழி
அடுத்தனர் இருவர் அருணிறை வங்கர்
மேகமும் மின்னலும் விழைதர வந்தபோல்.
பாக அவியினைப் பண்பொடு நல்கினேன்;
சுதேசியம் * வங்கம் தோன்றி வளர்வதன்
இதோப தேச இன்மழை பொழிந்தனர்.

---

† இராமகிருட்டிணுனந்தர்-விவேகானந்தர் மடத்தைச்சேர்ந்த ராம கிருஷ்ணனந்தர்.

‡ அருணம் - ஜப்பான் தேசம்.

* வங்கம் - வங்காள தேசம்.

## "வந்தேமாதரம்; வாழ்க, சுதேசியம்!"

நூற்றுக் கூடிகைத் தொழில்வளர் சங்கம்
சாற்றுதற் கரிய தரும சங்கம்
எனவிரண் டிலைகொண் டெழுந்ததவ் வித்து.
தினமச் செடியினை சிந்தைகொடு நோக்கி,
"வந்தே மாதரம்," "வாழ்க சுதேசியம்,"
"சொந்தத் தேசம் சுகம்பெற" என்னும்
† மனைதொறும் கண்ட மாண்புயர் சொற்களின்
வனையருங் கால்கள் வரிச்சிகள் கயிறொடு
வேலி பிடித்து வேறுளம் கொண்ட
போலிச் சுதேசியாம் பொய்யுரை மிருகம்
நெருங்கிட விடாது நினைவொடு காத்து,
நெருங்கிய நண்பரை நிதமும் சேர்த்து,
தர்க்க மென்னும் தருமவீர வெட்டியால்
வர்க்கப் பாத்தி வரிசையாச் செய்து,
ஜகத்தினை என்றும் தன்வசப் படுத்தும்
அகத்தின் கேணியின் அருளின் நீரை
நாவானுட் துலாவால் நாளும் இறைத்து,
'தா' எனும் இன்சொலின் தகளியால் வார்த்துப்
பலபல சங்கக் கிளையுடன் அச்செடி
வலிநிதம் பெற்றிட மதிகொடு வளர்த்தேன்.
வானில் ஒளிரும் மதியென விளங்கி
வானுறத் திசையுற வளர்ந்து பரந்து,
தபோதன ராகித் தாரணி அளிக்கும்

---

† மனைதொறும் - வீடுதோறும் (எழுதப்பட்டிருக்க)

*அபேதா னந்தன், பிரமா னந்தனும்
சீரிள வேனிலும், தென்றலும் வந்தன.
ஏருள இன்பமும் இலாபம் பலவும்
நலங்கள் பலவும் நல்கும் கனிதரும்
மலர்கள் மூன்று மலர்ந்துள தச்செடி.
அவைதாம் :
எங்கணும் புகழ்மணம் இன்புற வீசி
துங்கம் விரவிய சுகவொளி பரப்பிப்
பலபல சமையம் பலபல வருணம்
பலபல விடத்துப் பலபல விதத்துத்
தோற்றி நிற்பச் சொல்லரும் வடிவங்கள்
ஏற்றிவண் விளங்கும் இறைவன் குணத்தொடு
கருமம் புரிதரக் கனிதரும் நமது
" தரும சங்க நெசவு சாலை, "
நாடுசேர் " சுதேசிய நாவாய்ச் சங்கம், "
பாடுசேர் " சுதேசியப் பண்டக சாலை "
இவைதாம் உற்ற இடுக்கணும் களையும்
நவையறு பலன்களும் நானினி மொழிவனே:

---

* விவேகாநந்தர் மடத்தைச் சேர்ந்த அபேதானந்த ஸ்வாமியும், பாய் பரமானந்தரும்.

# கப்பல் கம்பெனிக்கு கஷ்டங்கள்.

"பூ"வென மொழிந்த மூவகைச் சங்கமும்
மேவிய பற்பல விளம்புதற் கரிய
இடுக்கணும் களைவும் இச்சிறு குறிப்பில்
தொடுக்கவும் இயலுமோ சொல்லரும் துணைவ!
ஆயினும் ஒருசில அறைவேன். அந்தோ!
பேயெனப் பற்பலர் பிதற்றி வந்த
"இலாபம் தருமோ இத்தொழில் இந்நாள்?
கலாபம் முன்னர்க் காகம் ஆடுதல்
போலாம் சுதேசியம்; புதுமை புதுமையா
நாலா விதத்தினில் நயக்குறும் † பிறமுன்"
எனும்பல மொழிகளால் நெசவாலைக்கு
முன்பணம் கொடுப்பதா மொழிந்த பலரின்
மன்னிதி யாவும் வாராது மறைந்தன;
நன்னய மொடுமுன் நல்கிய சிலர்தம்
பொருளினைக் கேட்டுப் 'பொள்'ளெனக் கொண்டனர்.
மதியினைக் கொண்டு வண்மையைப் பெருக்கி
என்னுயிர் நண்பனு யென்பல மொழிகளும்
உன்னரு மறையென உவப்பொடு கொள்ளும்
‡ குருநாதன் ஒருவனே கொண்டிலன்: அவன்'பின்
தருவேன்' என்றதைத் தந்திலன் மறப்பால்.

---

* 'பூ' வென மொழிதல்—பிறர், 'பூ' இவ்வளவுதானா? எனக் கேட்கும்படி அவ்வளவு சுலபமாகக் கூறிவிட்ட

† பிற-அன்னிய நாட்டுச்சாமான்

‡ குருநாதன்-வட்டுக் குருநாதய்யர், நெல்லைக் கலக வழக்கில் தண்டனையுற்ற ஹெட்கான்ஸ்டபிள்.

† நாவாய்ச் சங்க நன்மலர் அந்நாள்
"வாவா" என்றிட மனத்தொடு சென்றேன்.
மனையாள் தலையணை மந்திரம் ஜபித்தென்
தனைநீ றடிக்கடி தந்ததால் ‡ முன்மலர்
வாடா திருந்தது வளப்பமில் லதனைக்
கோடாகத் தாங்கிய § கோவில் பிள்ளைபால்
கடன்சிலர் வாங்கிக் கறையான் போலதன்
திடன்சிதை வுற்றிடச் செய்தனர். அந்நாள்
*மேற்றிசை யாரின் ††வெங்கனற் காற்று
நாற்றிசை சென்றென் னகரினுட் புகுந்து
செடியின் வேரெனத் திகழ்ந்த என்னை
நொடியின் பிரித்தது. நுண்ணறி வுடைய
‡‡கந்த சுவாமியும் கருணை §§வை குண்டமும்
தந்தனச் சாமியாற் சார்ந்தபேய் மொழியையும்
கறையான் அரிப்பையும் கடிதினிற் போக்கி
நிறைவான் மதியின் நலந்துாய்ம் கொடுத்து
நண்பர் பொருளின் நல்லெரு விட்டுக்
கண்பார்த் தென்றும் காக்க அம்மலர்
பெரிய இலாபப் பெருங்கனி நல்கும்
அரியநற் பிஞ்சினை அளித்துள திந்நாள்.
நாவாய் தருவித்து நாளும் நடாத்திக்
காவா நிற்பதாக் கழறிய **நல்ல

---

† நாவாய்ச சங்கம்-கப்பல் கம்பெனி.
‡ முன்மலர்-நெசவுச்சாலை.
§ உடையார்குளம் கோவில்பிள்ளை நாடார்
* மேற்றிசையார்-மேல்நாட்டினர்.
†† கொடுஞ் செயல்கள்.
‡‡ கந்தசாமி-தேசாபிமானத்தால் பெருவருவாயுமுள்ள போர்ட்டா பீஸ் உத்தியோகத்தை விடுத்துத் தேசத்திற்காக உழைத்த எஸ். கந்தசாமிப் பிள்ளை.
§§ வைகுண்டம்-வக்கீல் குமாஸ்தா வைகுண்டம் பிள்ளை.
** சிவபுரம் மிட்டாதார் சி. வ. நல்ல பெருமாள் பிள்ளை.

பெருமாள் பிள்ளைதன் பெருங்கடை நின்ற
வருவாய் பார்க்கும் மனவலி கொண்ட
‡ ஜோஸப் லூயிஸ் மோத்தா தன்னைப்
பாசப் பரப்பால் பம்பாய்க் கனுப்பினன்.
பெருமிரு மாதம் பேணி வுழைத்தவன்
தருவதாச் சொல்லிய "ஷாலமன்" கப்பலின்
சொந்தக் காரன் சொல்லினை மாறித்
தந்திடேன் என்று சாற்றிய தாக
வரைந்தான். ஐயோ ! வணிகர் பலரும்
கரைந்து மெலிந்து கண்டனர் என்னை.
"ஆதியைத் தொழுவோம் ; அவனருள் இலாமல்
ஏதிவண் நடப்ப" தென்றவர்க் குரைத்தேன்.
தொழுதனர் யாவரும் தாபிர மணியினை
விழுமிய மூல மெய்ப்பொருள் தொழுதியான்
தந்தி எழுதி "ஷாலமன்" காரற்
கந்தி பகலா அடித்துச் சிலநாள்
இலாப ஆசையை எழுப்பினேன் அவனுளம்
பலாவின் கனியின் பண்புறு சொல்லால்
ஏஜென் டொருவனை என்னகர் அனுப்பி
"வாசகப் படிநீ வரைந்துடன் படிக்கை
விரைவில் அனுப்"பென விளம்பினன் தந்தி.
தரைவழி வந்தனன் சாற்றிய ஏஜெண்டு.
அன்னோன் வந்ததும் ஆசை மிகுந்த
பொன்னோர் சிலரும் புகன்ற நல்ல
பெருமாள் பிள்ளையும் பின்கால் வாங்கினர்.

---

‡ புரோக்கர்-ஜே. எல். மோத்தா.

## 'நாவாய்ச் சங்கர் நன்ருய் நடக்குமா?'

" அருமாண் தொழிலிதென் றறிந்தோம் இந்நாள்,
எம்மால் ஆகா இத்தொழில்" என்றே.
அம்மா! அந்நாள் அவரைத் திருத்தயான்
அடைந்த துயரினை அறைய வொண்ணுது.
திடந்தனை விடாது தினமும் அவரிடம்
அன்புற மொழிந்தும், அச்சமுறப் பேசியும்,
பின்புறம் ஏசியும், பெருமதி சொல்லியும்
பலபல பகலும் பலபல இரவும்
ஜலபான மின்றிச் சரிப்படச் செய்து
பத்திரம் எழுதினேன்; பார்த்ததைச் சிலநாள்
சித்திரப் படுத்தித் திருத்திப் பின்னர்
இருதிறத் தாரும் இட்டனர் ஒப்பம்.
ஒருதர ஏஜண் டுவப்பொடு சென்றனன்
பின்னரும் நல்ல பெருமான் பம்பாய்க்
கென்னவோ சிலவுரை இயம்பினன் தந்தியில்.
அதனைக் கேட்டதும் அவ்விடத் துள்ளான்
எதனையும் முடிக்க இயலா தென்ருன்.
முன்போல் தந்தியில் மொழிந்தவன் உளத்தை
என்பே ருழைப்பால் இழுத்தேன். பின்னவன்
† பிரது மாலோடு பெரிய † தூசான்
தரமுயர் கப்பல் சாரும் கொழும்பு
சென்றவண் கப்பலைச் சீருறக் கொண்டு
நன்றுற நடாத்துக நாளும்." என்ருன்.
ஐந்தாம் நாளில் அழகுசால் கொழும்பில்

---

† கப்பலில் உள்ள முக்கிய வேலையாட்கள் இருவர்; கிறிஸ்தவர்.

தந்தனம் வளர்க்கும் தமிழ்வியா பாரிகள்
பிரதி மாலோடு பேசிய கப்பலின்
வரவு கண்டதா வந்தது தந்தி.
ஜோஸப் லூயிஸ் துரிதத்திற் சென்றவண்
வாசகம் புரட்டிட ; வந்தவன் மறுத்தான்.
பிள்ளையை அனுப்பெனப் பேசினன் லூயிஸ்.
பிள்ளைஅங் குற்றேன் ; பேசினேன் ஒருசொல் ;
சரியென ஒப்பினன் சார்ந்தங்கு நின்றவன்.
பெரியஅக் கப்பலைப் பெருமையொடு கொணர்ந்தேன்.

## கப்பல் கம்பெனிகளுக்குள் போட்டி.

தூற்றுக் குடியினைத் தொடும்பல சரக்கும்
ஏற்றினர் இறக்கினர் என்றும் இலாபம்
தருபவர் யாவரும் சார்ந்தெம் கப்பலை ;
வருபவர் செல்பவர் மனங்கொண் டேறினர்.
*பீயைஸன் கம்பேனி பெரிய ஏஜன்டு
தாயிலாச் சேய்போல் தவித்தனன் ; அன்றவன்
குறைத்தனன் கப்பலின் கூலிகள் யாவையும்;
இறைத்தனன் நிதியினை எதிர்ந்தவர் எவர்க்கும்
எந்த விதத்திலும் இளைத்ததும் என்முன்
சொந்த நிதியினைத் தோற்றதும் கண்டனன்.
இரண்டொரு தினங்களில் இருபதி னாயிரம்
திரண்டது லாபம் செப்பிய "ஷா"வுக்கு.
அப்படி யிருந்தும் அன்னியர் வலையில்
தப்பி விழுந்து தாழ்வுறு மதியால்
திடீரெனக் கொழும்பு சென்ற கப்பலை
விடியுமுன் அனுப்பினன் வேறொரு துறைமுகம்.
எல்லா வணிகரும் ஏற்றுதல் இறக்குதல்
இல்லா துழந்தனர் ; ஏக்கம் உற்றனர்.
அணுகிய தந்நாள் "ஆஷியாட்டிக் கப்பல்"
நணுகிய சரக்கெலாம் நயமுற ஏற்றினர்
பாக்கிய மிகுந்த † பக்கிரி முகம்மதை

---

* B. I. S. N. Company-வெள்ளைக் கப்பல் கம்பெனி.

† பக்கிரி முகம்மது-கப்பல் கம்பெனிக்கு துணிவுடன் முதலில் பொருள் தந்த பிரபல முஸ்லிம் வியாபாரி பக்கீர் முகம்மது ராவுத்தர்.

வாக்கின் வலியால் வசப்படச் செய்தியான்
வணிகர் பலரையும் வருத்தி அவணிலம்
துணிவொடு "சுதேசிய நாவாய்ச் சங்க"
நன்மலர் கண்டேன். நான்கில் ஒன்றுக்குப்
பொன்மலர் தருவதாப் புகன்றனன் பக்கிரி
பிறகு தாந்தாம் பெருந்தொகை தருவதா
அறைந்தனர் யாவரும் அளித்தனர் ஒப்பம்.
"கப்பல் ஒன்றனைக் கடிதில் வருத்"தென்று
செப்பிட உலகெலாம் செலுத்தினேன் நந்நியை
கொழும்பிருந் தொன்றனைக் கொணர்ந்தேன் [* 'சார்ட்டரி'ல்
எழும்பிய பணமெலாம் இழுத்ததக் கப்பல்.
பார்த்தான் கணக்கை ; பயந்தான் பக்கிரி.
ஆர்த்தான் ; இடித்தேன் அழுதான் ; படுத்தான்.
பெயரினை நல்கிப் பின்னரும் சிலதினம்
செயலினை முடித்தபின் திரும்பக் கொள்ளென்று
சங்கத்தை ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து
பங்கமறக் கடன்கொடு பம்பாய் சென்றேன்.
கனநாள் விழித்துக் "காலியா" "லாவோ"
தனநான் தருவதாச் சாற்றிக் கொணர்ந்தேன்
நாவாய் நடந்து நன்மணம் பரவவும்
† பேவாய் மொழியும் பீயைஸன் கம்பெனித்
திருடனும் சேர்ந்து தெரியாது மறைந்து
பொருடரு வாரின் பூவின் கிளையைக்
கொன்று கொண்டிடக் கூடிய வெல்லாம்
நின்று புரிந்தனர் நீளொரு வருடம்.

---

* சார்ட்டர்-Charter-வாடகைக்குக் கப்பலைப் பெறுவதற்கான பத்திரம்.

† பேவாய்மொழி-லாபம் தருமோ ? எனப் பயந்து கூறிய மொழிகள்.

தினத்தொரு சந்தித் தெருவினிற் சென்றியான்
மனத்தொடு பிரசங்க மந்திரம் சொல்லி
ஏழைகள் துணையாம் இன்மண் கொண்டு
"பாழாய்ப் போகப் பதரிடச் செய்த
பிசா"செனும் உரையொடு பிறவும் கூட்டி
அசைவின்மை யென்னும் * அக்கினி யிட்டும்,
மூலை முடுக்கி் மொய்யிரு ளகல
வேலை யாட்களின் விளக்கிட்டும் பேய்மொழியும்
இருடனும் அணுகாத் திறத்தொடும் காத்தேன்.

---

* பிணியுற்ற குழந்தைகள் பிணியினின்றும் நீங்கவேண்டி முச்சந்தி மண்ணெடுத்து வந்து மிளகாய் வற்றல் முதலியவற்றைக் கூட்டி அக்கினியில் இடும் தமிழ் நாட்டு வழக்கு ஈண்டுக் குறிக்கப்பட்டுளது.

## நம்மவர் இழைத்த அநீதிகள்.

† பொருடந்த சிற்சிலர் பொறாமைமேற் கொளீஇ
நம்மில் எளியன் நம்மிற் சிறியன்
தம்மினும் புகழினை நண்ணுதல் என்னே ?
அவனை ஒழித்தெலாம் ஆள்வேம்'' என்றே
எமனவர் போல என்மேல் வந்தனர்.
பண்டக சாலைப் பருவ மலரைக்
கொண்டு காவெனக் கூறினேன் என்னரும்
அறிவென உயிரென ஐம்பொறி யாமெனச்
செறிவொடு நிற்குமென் சிநேகித னான
வெங்கிட்ட ராம நாயகன் தன்பால்.
"இங்கெட்டி வந்ததென் ஈறிலா முயற்சியோய் !
எழுத்தொன் றெழுதினல் ஏற்கேனே'' என்றான்.
வழுத்தி அவன்குடி வாழ்க பெருகியெனப்
பண்டக சாலைப் பாத்தியம் கொடுத்தேன்.
கண்டெனக் கனிதரும் காய்காத் துளதின்று
எமனவர் நாவாய்க் கிருநிதி வேண்டும் ;
நுமருடன் சென்று கொணரும் நிதி''எனக்
கள்ளிக்கோட் டைக்கென்னை மெள்ள அனுப்பினர்.
மெல்ல அவருள வெளிச்சம் தெரிந்தேன்.
பின்னர் எமனவர் பேச்சால் எழுத்தால்
என்னை "அவண்போ ; இவண்போ ;'' என்றனர்.
இத்தகை யவருட னிருத்தல் என்னுயிர்
ஒத்தநா வாய்மலர்க் கூறும் என்று
வடதிசை பலநகர் மகிழ்வுடன் சென்று,
குடதிசை வந்து கூடினேன் என்னகர்.

---

† நெல்லை வக்கீல் குருசாமி ஐயர் முதலியோர்.

*

## கம்பெனியிலிருந்து ராஜினமா.

வேலையை விடும்படி விரும்பினர் எமனவர்
சாலவும் நன்றெனத் தந்தேன் எழுதி.
உடனென் னுடலா யுடனின் றுழைத்துத்
திடனுடன் நாவாய்ச் செவ்விதிற் காத்துத்
தன்பெயர் என்பின் தனையற் கீந்த
அன்பு நிறைந்த * ஆறு முகம்
† அருணு சலமுதல் அன்பர் பலரும்
"ஒருநாளும் அவனிலா துருப்படா நாவாய்"
என்றுரை கூறி எழுந்தனர் வெகுண்டு.
பின்றொடர்ந் தவரைப் பேணிக் கொணர்ந்தே.

---

* ஆறுமுகம்-சி. த. ஆறுமுகம் பிள்ளை.

† அருணசலம்-வியாபாரி அருணசலம் பிள்ளை.

# மீண்டும் கப்பல் கம்பெனியில்...!

"அவனையாம் நீக்கிலேம் : அவனே நீங்கினன் :
அவனைத் திருப்பி அழைத்துக் கொள்வோம்"
என்றெனை அழைத்து"நீ ஏஜண்ட்" டென்றார்.
நன்றெனு மொழிந்தேன் நாணம் விடுத்தே !
அவரில் ஒருவன், "ஆ ! ஆ !, அப்பெயர்
தவலரும் புகழைத் தருமே இன்னமும் ;
ஸூப்பரிண் டெண்டெனச் சொல்லுவோம்" என்றான்.
காப்பதெப் பெயரொடும் கடனெனக் கொண்டேன்.
திறத்துடன் * பீயைச் சேர்ந்தவர்த் திருப்பினேன்.
மறத்துடன் ஆள்வோர் வன்செயல் மொழிவனே.

* பீயைச் சேர்ந்தவர்-பி. ஐ. எஸ். என். கம்பெனியைச் சேர்ந்த வியாபாரிகள்.

## சர்க்கார் செய்த
## சாற்றொணாக் கொடுமைகள்.

கப்பல் மலரினைக் கண்டது மாள்வோர்
அப்பப்பா! இவனமக் கடும்பகை யென்று
மனத்தினுட் கொண்டனர்: வரைந்துமேல்
[அனுப்பினர்:
தினத்தொடும் என்செயல் தேடித் திரிந்தனர்.
தூற்றுக் குடியார் ஏற்றிடு மாறு
பலவிடம் பகர்ந்த பிரசங்கம் பலவும்,
திருநெல் வேலியிற் சேர்ந்த* மா காணப்
பெருமொரு கூட்டத்துப் பேசிய வொன்றும்,
பாளையங் கோட்டையிற் பகர்ந்த சிலவும்,
† காளையப் பர்முன் கழறிய சிலவும்,
மதுரையிற் கவியருள் வாணரைக் கூட்டி
நிதமொரு தலமா நிகழ்த்திய பலவும்,
பம்பாய் சென்றதும், பலநாள் நின்றதும்,
வெம்புதல் போன்று மிகுநோய் கொண்டு
வருந்திய என்முதல் மகனைப் பார்க்கத்
திருந்திய என்னுளம் திரும்பா ததுவும்,
கங்கை குளித்ததும். காசியில் நின்றதும்,
வங்கம் சென்றதும், வாலிபர்க் கண்டதும்,
மதுராஸ் பீச்சு, மார்க்கட் டிடங்களில்
சதுர மாகச் சாற்றிய பலவும்.
கூட லூரில் கூறியவும், ஆங்குக்

---

* மாகாணப் பெருமொரு கூட்டம்-மாகாண மகாநாடு.

† காளையப்பர் ரிஷப வாகனத்தையுடைய ஸ்ரீ நெல்லையப்பர்.

கூட்டுறவு சங்கத்தைக் கூடிடச் செய்ததும்,
சிதம்பரம் சென்றவண் சேர்த்துப் பலரை
இதம்பெறும் வழிகளை இயம்பிய ஒன்றும்,
தந்தைக் குழுவினைச் சார்ந்துநின் றவரின்
நெஞ்சம் திரும்பிட நிகழ்த்திய ஒன்றும்,
கொழும்பிற் கப்பல் பங்குகள் கொண்டதும்,
அழும்படி வந்த* வதன் ஆபத் தறுத்ததும்,
தேசம் மதித்திடும் சிவசிதம் பரந்தை
ஏஜண் டாக ஏற்படுத் தினதும்,
அவண்சில வணிகரை அடுத்துக் கொண்டதும்,
அவண்சில இடங்களில் அறைந்தபிர சங்கமும்,
† சூரற்றுச் சென்றதும், தொன்னெறிக் காங்கிரஸ்
வீரமற் றழிந்ததும், ‡ வேறொன் றுயதும்,
திலகர் முதலிய தேசபக் தர்கள்
பலமுறை என்னொடு பகர்ந்து நின்றதும்,
§ சென்னைக் கிளையின் செக்கிரட் டேரியா
மன்னி யிருக்க வரமெனக் கீந்ததும்,
“ சிவமொடு சேர்ந்து செப்பிய பலவும்
தவமுயர் பாரதத் தாயைத் தொழுததும்.
|| நாங்கு நேறிக்கு நானே சென்று
தேன்கனி என்னவென் சிந்தையுள் நிற்கும்
§§ குருநாத நண்பனைக் கொணர்ந்ததும், கப்பலின்
வருமான வழிகளை வளர்த்ததும், பிறவும்.
தேய ஆட்சியைத் திருப்பிடச் செய்யும்
மாயச் செயலென மதித்து மயங்கித்

---

* அதன்-கப்பல் கம்பெனியின்.

† சூரற்-சூரத் காங்கிரஸ்.

‡ வேறொன்று-இந்தியன் நேஷனலிஸ்டு காங்கிரஸ்.

§ நேஷனிலிஸ்ட் காங்கிரஸின் சென்னை மாகாணக் காரியதரிசி.

|| திருநெல்வேலிக்கு அருகிலுள்ள நாங்குநேரி எனும் ஊர்.

§§ குருநாதன்-எட்டுக் குருநாதய்யர்.

## வெள்ளையர் வெருண்டனர் !

திருமந் திரநகர் சேர்ந்த வெள்ளையர்
பெருமந் திரவா லோசனை செய்தனர்
கோரல் மில்லின் கூலி யாட்கள்
" வார தில்லை ; வயிற்றினி லென்றும்
அடிப்பத னாலும் அளவறத் துன்பம்
தடிப்பத னாலும் சம்பளங் கூட்டித்
துன்பம் நீப்பின் தொடருவோம்." என்று
பின்பகல் நின்றனர் : பெருமிடி யுற்றனர்.
சினேகித ரிடத்துச் செப்பினேன். அவரும்
அநேக ரிடத்து அரும்பொருள் பெற்றுப்
பெய்தற் கரிய பெருமழை போன்று
செய்தற் கரிய செய்தவர்க் காத்தனர்
சிலநாள் முன்னர்ச் சென்னைஜன சங்கத்தின்
பலமான கிளையெனப் பகரத் தக்கதா
தூற்றுக் குடியின் சுதேசிகட் குள்ளே
தோற்றக் கூடிய சொல்லரு வழக்கில்
சமாதான மாகத் தக்கன வற்றை
எமாலாம் பஞ்சாயத் திருக்கவும், ஆங்கு
கைத்தொழில் அனேகம் கற்பிக்கத் தக்க
கைத்தொழிற் பள்ளி கடிதினில் அமைக்கவும்,
ஜனங்கள் வருந்திச் சம்பாதித் துள்ள
தனங்கள் யாவையும் தாங்களேற் படுத்தும்
காவலைக் கொண்டு காத்து வரவும்,

---

* கோரல் மில்-தூற்றுக்குடியில் உள்ள கோரல் மில்ஸ். ஏ அன்டு எப் ஹார்வி மில் என்றும் வழங்கப்படும்.

பிறரின் கப்பலைப் பேணிய சிலரும்
அறவதை விடுத்தன் றடைந்தனர் எம்மை.
இச்செயல் கண்டதும் எழுந்§தவர் ஆர்த்தனர் :
“ நிச்சய மாயிவன் நினைத்தது முடிப்பன் ;
விரைவினில் இவனை ‡வெளிவர விடாது
கரையச் செய்து களிப்போம் ” என்று
சூட்சியிற் பலரும் துணிந்தனர் ; அதன்பின்
காட்சிகள் யாவும் களிக்கத் தக்கவே.
|| வெளுத்தவ ரெல்லாம் வெளிக்குப் பயத்தால்
கொளுத்தப் பட்டதாக் கூத்தாடித் திரிந்தனர்.

---

* ஜனசங்கம்-சென்னை ஜனசங்கத்தின் தூற்றுக்குடிக் கிளைச்சங்கம்.

§ அவர்-வெள்ளையர்.

‡ வெளிவரவிடாது-சிறையுள் இட்டு.

|| வெளுத்தவர்-வெள்ளையர்.

## வெள்ளையரும் வெளியேறினர் !

ஆழியிற் கிடந்த அருங்கலம் நண்ணிப்
பாழெனச் செய்யப் பலவும் எண்ணிப்
பயந்தவண் சென்று படுத்த தாக
நயந்து மொழிந்தனர் : நாளும் வெளியில்
வண்டியிற் செல்கையில் "வந்தே மாதரம்"
அண்டி அடிப்பதா அலறி அழுதனர் ;

## தூற்றுக்குடியில் சுதந்திர முழக்கம்

பிரேக்கன் எனும்சப் கலெக்டரிடத்தே.
இரக்கம் உற்றவன் எழுதினன் மேலே.
வந்த பதில்படி மறுபிர சங்கம்
சந்தித் தெருவிலும் ஜனங்கள் கூடும்
பொதுவிடங் களிலும் புகறலா காது
சிதம்பரம் பிள்ளையும், சிவமும் என்றனன்.
அந்த எழுத்தினை அழித்திட மறுதினம்
"சந்தித் தெருவும் ஜனங்கள் கூடும்
பொதுவிட முந்தினம் புகன்ற விடமும்
எதுவோ அதனில் என்றும் போலப்
‡ பத்ம நாபன் பகர்வன் பிரசங்கம் ;
சித்தம் பரமும் சிவமும் பின்னர்த்
தரும சங்க நெசவுச் சாலையில்
பெருமைச் சுதேசியம் பேசுவர்" என்றும்,
அவ்விடத் தாள்வோர் அணுகல் என்றும்
செவ்விதில் விளம்பரம் தெருவெலாம் பரப்பினன்
உரைத்த 3 சண்முக சுந்தர உத்தமன்.
குரைத்தனர்: ஆட்சி குறைந்த தென்றனர்.
தந்தியிற் பற்பல சாற்றினர் ‡விஞ்சுக்கு
வந்தனன் விஞ்சு மறுநாள் மாலையில்
பிரேக்க னெடுநாள் பேசி நிற்கையில்,

---

‡ பத்மநாபன்-நெல்லை ஜாமீன் வழக்கு எதிரிகளில் ஒருவரான பத்மநாப ஐயங்கார்.

3 சண்முகசுந்தரம்-பாலி. சு. ஷண்முகசுந்தரம் பிள்ளை.

‡ விஞ்சு-நெல்லை ஜில்லா கலெக்டர் விஞ்சுதுரை.

இரக்கம் உற்றவன் கீழ்மேல் பார்த்தெனே
"ஆள்கை இங்குநீ அழிந்திடச் செய்ததென்?
வாள்கை எடுப்பேம்; வன்கண் புரிவேம்"
எனசில இயம்பி எடுத்துத் தந்தான்
தனதிட மிருந்த சண்முகன் விளம்பரம்.
வாசித் தவற்கு "மறுமொழி ஐய!
பேசிய பின்னர்ப் பிழையிலேன் என்பீர்;
பொறுமையொடு கேட்டுப் புவியிற் செல்மின்;
சிறுமைச் சொற்களைச் செப்பன்மின்" என்று
"முந்திய ஆர்டரை இந்த விளம்பரம்
எந்த வகையில் இகழ்ந்த" தென்றேன்.
டிப்டி சூப்பரின் டெண்டோ "இங்கிவன்
கசியச் சொல்வதைக் கவனிக்க வேண்டா,"
"சாலைக் குள்ளே சர்க்கார் வந்தால்
மேலைக் கலகம் விளையும்" என்றனன்;
நெருநல் ஆர்டரை நிகழ்த்திய பின்னவன்
பெருக நடாத்தினன் பிரசங்கம்: அன்றியும்
இன்றும் திரும்ப இங்கும் அங்கும்
நின்று புகல்வதா நிகழ்த்தினன்" என்றான்.
தருமசாலை தனித்ததொரு கட்டிடம்
ஒருவன் சொந்த வுடைமையா யுள்ளது
போலீஸ் வரலெனப் புகன்றது குற்றமோ?
போலீஸ் வரலவன் புகைச்சலைச் செய்யும்
எனவவன் நினைந்தனன். இங்கியான் பேசேன்.
எனதகம் பேசுதல் இழுக்கோ?" என்றேன்.
சொல்லிய டிப்டி சூப்பரின் டெண்டு "நீ
சொல்லிய இடத்தில் தோன்றிப் படையொடு
நடப்பதைப் பார்ப்போம் நாமே" என்றான்.
நடப்பதைப் பாரும் நன்று" என்றேன்.
"சொந்த இடத்தினில் தோன்றுவன் என்றுநீ
எந்த மதியினால் இயம்பினை?" "ஏகேல்"

எனசில உரைத்தவற் கென்னிடம் விஞ்சு
“ கனதயை செய்துநீ கடற்கரைப் பிரசங்கம்
ஒன்றனை மட்டும் ஒழியென ” வேண்டினன்.
“ இன்றவண் பேசுவன் ஏதிலன் ” என்றேன்.
நடந்தான் விஞ்சு நன்றெனப் பிரேக்கனொடு.
நடந்தேன் நானும் ; நண்ணினேன் கடற்கரை.
போலீஸ் வைரவர் பொழுதுபடு முன்னர்
காலி நிலத்திற் கடற்கரை யோரம்
வெடிகள்கைக் கொண்டு வேண்டிய மட்டும்
கடிகள் தரல்போற் கழறி நின்றனர்.
பத்ம நாபன் பகர்ந்திட எழுந்தான்.
சத்தம் மிகுந்தது ஜனத்திரள் பெருக்கால்.

## போலீஸ் பயமுறுத்தலும் - தோல்வியும்.

உடனுன் எழுந்தே "உத்தம நண்பரே !
திடனே டிருந்து செப்புவ கேண்மின் ;
சத்தம் மிகுந்தால் தாக்குவர் போலீஸார் :
மெத்த விளையும் விரும்பாத" என்றவர்க்
குரைத்த வுடன்கீழ் உட்கார்ந் தனைவரும்
உரைத்தன வெல்லாம் உவப்பொடு கேட்டனர்.
பின்புநான் எழுந்தேன். பேச எழுந்ததா
முன்பு ‡டிரிலை முடித்து நின்ற
வயிரவர் வெடியொடு மயங்கி விழித்தனர்.
"அயிரன்மின் ! நானிவண் அறைந்திட வந்திலேன்:
உத்தர வழிப்பனே ? உம்முரை கடப்பேனே ?
சித்தம் மயங்கித் திகையன்மின்" என்று,
குழுவினைப் பார்த்துக் "கூறிய வெல்லாம்
பழுதறக் கேட்டீர் ; பண்பொடு நின்றீர் :
சாற்றிய தரும சாலையில் இனிமேல்
நேற்றுப் பேசிய நேயனும் நானும்
சுதேசியம் சிற்சில சொல்லுவோம் : வருக.
இதேவழி" என்றுநான் எட்டி நடந்தேன்.
வந்தனர் அனைவரும் ; வந்திலர் போலீஸார்.
தந்தனன் என்பின் தக்கன நஞ்சிவம்
மறுதினம் * பள்ளி வாசற் பேட்டையில்
செறிவுறப் பிரசங்கம் செய்வர் இருவரும்"

---

‡ டிரில்-கவாத்து.

* பள்ளிவாசற்பேட்டை - தூற்றுக்குடி பள்ளிவாசலைச் சேர்ந்த வண்டிப்பேட்டை.

என்றொரு விளம்பரம் எங்கும் பரப்பினன்,
நன்றுறும் உலக நாத பிள்ளை.
விளம்பரம் கண்டதும் விஞ்சுக் கலெக்டர்
"வளம்பெறச் சொல்லுவர் வாசலைப் பூட்டிச்
சொல்லுவ எழுதலும் தொலைந்ததே" என்று
சொல்லிய ஆர்டரைத் தொலைத்துப் பின்னர்
அவனைக் கண்டிட அன்பொடு வருகென
அவனொரு கடிதம் அனுப்பினன் சிலர்க்கு.
நானும் ஒருவனு நண்ணினேன். நிகழ்ந்தன
தேனும் சீயும் சேர்ந்த தொக்கும்.
விளம்பரப் படிக்கும் விரும்பிய படிக்கும்
வளம்படப் பிரசங்கம் வார்த்தனன் சிவமே.
உத்தர வொழிந்ததால் ஊர்ப்பொது விடமெலாம்
சித்தப் படுத்தித் தினமும் சென்று
பிரசங்க மாரி பெய்தனன் நஞ்சிவம்
கரசிங்க மென்றிடக் கர்ச்சித்து நின்றே.
ஊரா ரெல்லாம் ஒருங்கு கூடினர் :
சீரார் சுதேசியம் சிறப்புற நாடினர் :
சுதேசியக் கப்பலும் சுகமா நடந்தது.

## விபினர் விடுதலை விமரிசை.

எதோவொரு தினத்தில் இயம்பிய சிவம்தான்,
" வங்கதேச சத்து மாணிறை ‡பாலர்
தங்கடுஞ் சிறையின் தவத்தினை முடித்து
வெளிவரும் தினத்தில் விமரிசை சிற்சில
கனிவொடு செய்யக் கருதி என்னொடு
பாலர் படத்தைப் பட்டணப் பிரவேசம்
சீலர் பலரொடு செய்யவும், அன்று
தரும வைத்திய சாலை யொன்றும்
தருமப் புத்தக சாலை யொன்றும்
பண்பொடு பேசப் பழகும் நமது
நண்பர் சேர்ந்து நவிலும் முறைகளைப்
பயிலத் தக்க †பள்ளி யொன்றும்,
" சுயராச் சியம் " எனச் சொலும்பத் திரிகையும்,
தோன்றிடச் செய்யவும் துணிந்துபத் திரிகை
தோன்றிடும் தினந்தான் தொடுத்து நின்றதால்,
நகருளா ரிடத்ததை நவின்றவர் ஒப்பம்
தகவொடு வாங்கல் சரிப்படா தாதலால்
பத்திரிகை வேண்டுவோர் பரிந்தவர் மனைமுன்
பத்திரிகைப் பெயரைப் பருக்க எழுதிடின்
கொடுத்தல் எளிதெனக் குறித்த இவற்றை
எடுத்துச் சொல்ல எண்ணி இனிமையா,
"பாலர் மீள்தினம் பாரும் மீள்தினம்
சீலர் யாவரும் சேர்வோம் அத்தினம்

‡ பாலர்-விபின சந்திர பாலா
† பள்ளி-Academic School

*" சுயராச் சிய"முந் தோன்றும் அத்தினம்
சுயராச் சியக்கொடி தூக்குவோம்" என்றனன்.
செப்பிய "சுயராச் சிய"ப்பத் திரிகைக்
கொப்பந் தருபவர் உயர்த்துக கொடியினை
அவர்மனை முன்பியாம் அறிதற் பொருட்டென
அவர்முன் பகர்ந்ததை யான்பின் விளக்கினேன்.
ஆயினும் அந்நாள் அறைந்தசங் கத்தைத்
தாயெனப் பலரும் தம்முளங் கருதி
விரும்பிச் சேர்ந்து வேலைகள் செய்ய
அரும்பிச் சங்கம் அளித்தநன் மணமும்
நன்மைதீ மைக்கு நாளு முதவும்
தன்மைகொள் பண்டிதச் சகோதரர் மற்றுமச்
செயலெலாம் பார்த்தியான் [3] திருநகர் பயனுல்
சுயவர சாமெனச் சொன்னதும் கொண்டு
சொன்னஅவ் வுரையினைத் துரர்த்தம் செய்து
மன்னிய வெள்ளையர் வரைந்தனர் மேலே.

---

* "சுயராச்சியம்"- பரலி சு. ஷண்முகம் சுந்தரம் பிள்ளையை ஆசிரியராகக்கொண்டு விபின சந்திர பாலர் விடுதலை தினத்தன்று வெளிவர இருந்த பத்திரிகை. சர்க்கார் தடையால் அது வெளிவரவே இல்லை.

3 திருநகர்-தூற்றுக்குடி.

## வெள்ளையரின் விடாத சூழ்ச்சி.

"உரைத்த தினத்தெம் முயிரெலாம் போக்கி
உரைத்த கொடியினை உயர்த்துவர்" என்றே
அத்தைச் செய்தபின் அவர்தினம் கூடி
"எத்தைச் செய்தியாம் இவரை அழிப்பேம்;
பிரசங்க சமையம் பெருஞ்சத்த மானால்
விரைவினிற் சுட்டவர் மேனியைத் தொலைக்கலாம்
என்றியாம் நினைத்தோம்! எதற்கும் அவரிடம்
ஒன்றும் தந்திலர்; உரங்கொடு நிற்கிறார்"
எனப்பல பேசி ஏங்கும் பொழுதவர்
மனப்படி செய்ய வந்தனன் †ஆசு
ஜாயின்று மேஜிஸ்டிரேட்டா எனகர்.
காயிதம் தந்"தெனைக் காண்க,வா" என்றனன்
உயிரனைய என்னன்பர் ஓட்டத்தில் வந்து "நின்
உயிரினை நீக்குதற் குபாயம் செய்துளன்;
காண்கநீ போகேல். காலையிற் கேட்டேம்:
வீண்கதை யென்றுநீ விளம்பலொழி" என்றார்.
"செயிரறு நண்பரே! செப்பிய கேட்டேன்.
உயிரினை நீக்கும் ஊழ்வலி வந்திடின்
நம்மால் தடுக்கவும் நண்ணுமோ? செல்லாது
சும்மா இருந்திடின் சுகமோ" என்று
புறப்பட்டேன் என்னுயிர் போன்ற * மகாதேவன்
திறப்பட் டென்னுடன் சென்றனன் றுணையா.

---

† ஆசு-மணியாச்சியில பின்னர் சுட்டுக் கொல்லப்பட்ட கலெக்டர் ஆஷ்துரை.

* மகாதேவன் - ஸ்ரீ வைகுண்டம் வக்கீல் T. R. மகாதேவய்யர்.

*

## தொழிலாளர் வேலைநிறுத்தம் : துரைகள் நடுக்கம்.

ஆசுவைக் கண்டதும், " அழகிய மில்லினை
மோசம் செய்ததென் மொழிகுவா " என்றான்.
" கொடியபல செய்து கூலி யாட்களை
மடியும் விதத்தினில் வருத்திவந் ததனால்
வேலையை நிறுத்தினர் ; வேண்டுவ கேட்டுளேன் :
நாலு தினத்தினில் நன்மையாம் " என்றேன்.
படையின் செருக்கைப் பகர்ந்தான். எழுந்தேன்
"படையிலா ரிடத்ததைப் பகர்தல்நன் றன்" றென்றே!

## தொழிலாளர் வெற்றி.

மில்லின் ஏஜண்டு மிகவும் கெஞ்சிச்
சொல்லி யனுப்பிய *சுப்பிர மணியன்பால்
அவரவர் சம்பளத் தரைப்பங் கதிகமா
அவரவர்க் கதுமுதல் அளிப்ப தாகவும்
ஞாயிறும், மற்ற நாட்களில் வெளியே
போயிருந் தருந்தற்குப் போதிய நேரமும்,
விடுதி யாக விடுவ தாகவும்,
நடுவில் அவசரம் நண்ணுறின் லீவு
கூலி யின்றிக் கொடுப்ப தாகவும்,
நாலைந்து நிபந்தனை நயமாப் பேசி
திரும்ப அனுப்பினேன்; திருத்தி யாட்களை
அரும்பல மதியவர்க் கன்பொடு சொல்லி.
மாலையில் விஞ்சும் வக்கீல் சிலரும்
சாலவும் நெருங்கிச் சார்ந்தனர் என்னகர்.
குருசாமி யையன் கூப்பிட் டனுப்பி
வருநாள் புறப்பட்டு மாதம் இன்று
பம்பாய் சென்றிடப் பகர்ந்தான் அவனுடை
தம்பி மூலமாய்ச் சாற்றிப் பற்பல.
குருநாதன் சிவம்பால் கூறினேன் நிகழ்ந்ததை.
"ஒருநாளும் நீயதற் குடன்படேல்" என்றனர்.
அந்த வுரையினை ஐயற் கறைந்தேன்.
வந்தனர் எமனவர் மறுநாட் காலையில்
"அறைந்ததைச் செய்குவாய், அன்றேல் பெருந்துயர்

---

* மில்லாபீஸ் டைரக்டர்களில் ஒருவரும் 'மில்லாபீஸ் பிள்ளை' என்று வழங்கப்படுபவருமான சுப்பிரமணிய பிள்ளை.

சிறந்தநம் கப்பற்கும் சேரும்"* என்றனர்,
" ஈசன் செயலை எவரே தடுப்பவர்?
நாசம் வந்திடின், நானோ நீரோ
தடுக்க இயலுமோ சாற்றரும் ஐயரே!
கொடுக்க *இராஜி கூறிய கப்பலின்
வேலையைப் பின்னரே விளங்கச் சொல்லுவேன்,
ஓலையைப் போடினும் ஓடினும் நீவிர்
எனக்கொரு தடையும் இலை"என் றுரைத்தேன்,
மனக்குறை யுடனே வந்தவர் சென்று
'மீற்றிங்' கூட்டி "வேருடன் ஒழித்தவன்
காற்றும் படாமற் கப்பலைக் காப்பதே
கடன்"எனப் பேசினர் †கழறிய நண்பரோ
"திடனிலா துரையீர்: சிந்தனை செய்வீர்:
அன்னவன் நீங்கிடின் அழிந்திடும் கப்பல்
பின்னர்நம் பணமும் பெயரும் அழிந்திடும்"
எனவுரை செய்தனர். எமனவர் "அரசியல்
இனியவன் விடுதலெம் இச்சை"என் றெழுதினர்
அவ்வுரை ஏந்துக் கறைந்தனர். எனக்கும்
செவ்வி தில் எழுதிச் சீக்கிரம் அனுப்பினர்.
திருமந் திரநகர்ச் சேவகம் பூண்டநான்
அருமந் திரத்திற் கனைவரும் ‡பேட்டைக்கு
மாலையில் வருகென வழங்கினேன் அறிக்கை.

* இராஜி - ராஜினமா.
† கழறிய நண்பர் - முன்சொன்ன அருணசலம் பிள்ளை முதலியோர்
‡ பேட்டை - பள்ளி வாசற் பேட்டை.

## மூவர்மீது ஜாமீன் வழக்கு.

பாலர்கொண் டாட்டப் பண்பெலாம் தடுத்துமியாம்
இராஜ நிந்தனை இயம்பலால் ஜாமீன்
தராததற் கேது சாற்றிட மறுதினம்
காலையில் விந்துவைக் காணும் படிக்கும்
மாலையில் எமக்கு வந்தன ஆர்டர்கள்.
அறிக்கைப் படியே அனேகர் பேட்டையில்
செறிக்கவந் திருந்தனர். செப்பினன் சிவஞ்சில.
கேட்டதும் நம்மவர் கிளம்பினர் : ஆர்த்தனர் :
ஓட்டம் பிடித்திட வுன்னி எழுந்தனர்
பெரியஇன்ஸ் பெக்டரும் பேசிய எழுதிய
அரிய †கிராம முன்சீபு நண்பனும்.
பார்த்தேன் : ஆபத்துப் பலத்ததென் றுன்னினேன்.
வார்த்தேன் : சிலசொல் மனவலி கொண்டே.
"உயிரினும் இனியவென் உத்தம நண்பரே !
செயிரெமக் குற்றதாச் செப்பினன் சிவம்தான்
நாளைச் சென்றியாம் நன்மையைப் பெற்று
நாளைக் கழித்திவண் நண்ணுவோம் ; பின்னர்
இயம்பிய வேலைகள் யாவையும் செய்வோம்
நயம்பட வென்றே நவின்றனன்" என்றேன்.
அம்மொழி கேட்டதும் அடங்கினர் ; இருந்தனர் ;
விம்மி அழுதனர் : வெஞ்செயல் என்றனர்.
விரைவினில் ஆர்டரை விளக்கி, "இதுதான்

---

†கிராமமுனிசிபு - கிராமமுன்சீப் முத்துக்கிருஷ்ண நாயுடு.

* தரையினை இழந்தவர்ச் சார்பயன் " என்று
"விஞ்சுத் தீயோன் விடுத்தஅவ் ஆர்டர்
நஞ்சினை யொத்தே நல்லோர் மனத்தை
வருத்திய தாகவும் மாண்பா லருக்குத்
திருத்திய வெல்லாம் செய்தல்பின் " என்றும்
தீர்மான மெழுதித் தீர்ந்தேன் குழுவினை
ஓர்மான மின்றி உயிரொடு வாழ்வேன்.
மறுதின மாகிய **மார்ச்சு ஒன்பதில்
குறுகிய விஞ்சுமுன் கோக்குறை குளத்தில்
ஆஜ ரானேன், ஆர்டர்கள் கொண்ட
நேசர் சிவமொடும் நிகழ்த்திய பத்மனொடும்.
நியாயம் திறந்திடும் நிலைதனில் நின்று
தயாளம் வளர்த்திடும் ‡சாது கணபதி
செப்பிய †மகாதேவன் சிவராம கிருஷ்ணன்
ஒப்பம் பெற்றெமக் குதவியா நின்றனர்.
மதியம் திரும்ப வழக்கினை எடுப்பதாச்
சதியுரை விஞ்சு சாற்றிப் பின்னர்
"பாலர்கொண் டாட்டப் பண்புகள் இந்நகர்
சிலரும் நடாத்துவர்; சேர்தல் அதனில்நீ
உசிதமோ அன்றோவென் றுன்னிச் செய் "யெனக்
கசியும் மொழியிலென் காதில் ஓதினான்.
"நல்ல தங்ஙனம் நன்றாவுன்னியே
நல்லதைச் செய்கிறேன் நானிவண் " என்றேன்
மதியம் திரும்ப வழக்கினை எடுத்தான்.

---

* தரையினை இழந்தவர்-சொந்த நாட்டில் பார்க் கடிமை செய்வோர்.

** மார்ச்சு ஒன்பது - 9—3—1908.

‡ சாது கணபதி-நெல்லை வக்கீல் சாது கணபதி பந்துலு (இவர் சமீபத்தில் காலம் சென்றார்.)

† மகாதேவன், சிவராம கிருஷ்ணன்-வக்கீல்கள்.

3 மதியொன்று வழக்கை மாற்றுதற் காக
வாயிதாக் கொடுவென வாக்கால் கேட்டுக்
காயித மெழுதிக் கடிதினிற் கொடுத்தேம்.
"திருமந் திரநகர் சென்றிடேன் என்றுநீ
ஒருமொழி தந்திடின் உன்னிய தளிக்கிறேன்."
என்றான்: வக்கீல் என்முகம் பார்த்தனர்.
"நன்றே அவனுரை! நாவாய்ச் சங்கமும்
மனைவி மக்களும் மற்றும் பலவும்
நினையா தொழியென நிகழ்த்திய நோக்கும்"
என்றுநான் கூறிட இயம்பினர் அதனை.
"நன்று, வாயிதா நாளை" என்றான்.
இயம்பிய சிலரோ டேகி இறுதியில்
இயம்பினேன் சிற்சில இருந்தவர் இயம்பென.
காலையில் என்னகர் கருதிச் சென்றேன்.
சிலர் அனேகர் ஸ்டேஷனில் நின்றனர்.

3 மதி-பதினைந்து நாட்கள்.

# வெள்ளையனுக்கு அபயம்!

அவரையொரு வெள்ளையன் அகங்கொடு தள்ளினான்.
அவனைத் தள்ளிடற் காரவா ரித்தனர்.
என்னொடு சென்ற இன்ஸ்பெக்டர் சாய்பு
முன்னாள் விழித்த முகத்தினைக் காட்டி
இரந்தெனை வேண்டினன். "யாவரும் செல்க:
உரந்தனை அடக்கலே உத்தமம்" என்றேன்.
செப்பிய வெள்ளையன் சென்றதற் கிரங்கினான்.
தப்பிலர் யாரெனச் சாற்றிவெளி வந்தேன்
பலபல நண்பர் பட்சமொடு தொடர்ந்ததால்
நலமன்று வண்டியை நண்ணுதல் என்றியான்
காலால் நடந்து கடுகினேன் என்னகம்.
சாலவும் கூட்டம் சார்ந்தவண் நின்றது.
"சுதேசியம் வளர்க்குக, தொல்லுயிர் நீங்கினும்
இதேயென் பிரார்த்தனை" என்றவர்க் குரைத்தேன்.
சிலர் பலரும் "செப்புக ஐயா!
பலர்கொண் டாட்டப் பண்புக்" கென்றனர்.
"மறுத்த அதிகாரிகள் மாய்ந்தன வாயினும்
பொறுத்துச் செய்தலே பொறுத்த"மென்
[றுரைத்தேன்.
"செய்தன வெல்லாம் சீரழி வதனால்
மெய்தவன் படமின்று வெளிவரும் படிக்கும்
செறித்த பிறவெலாம் செய்தல்பின் னென்றும்
குறித்த படிநீர் கூறுக" என்றனர்.

*

# பிள்ளைக் கனியமுது !

நன்றென மொழிந்து நானகம் புகவெதிர்
நின்றனன் முதல்மகன். 'நேற்றெனை விட்டுநீ
பிரிந்தனை யன்றோ? பேசேல்!'' என்றான்.
'' பரிந்தெனைப் பொறுப்பாய், பாலா '' என்றேன்.
'' இன்றுநீ கொண்டெனை ஏகுவ தாக
ஒன்றுநீ மொழிந்தால் உன்னிடம் வருவேன் ''
எனப்புகன் றோடினான். எடுத்தேன்; முத்தினேன்!
மனப்படி செய்வதா வாக்கும் அளித்தேன்.
உண்டேன் அவனுடன்; ஒளித்துப்பின் சென்றேன்.
கண்டேன் பாலரின் கருணை வடிவினை.
வணங்கினேன்; அன்பர்கள் வரிசைகள் செய்தனர்.
இணங்கினேன் சிலருடன் ஏகினேன் விருந்துமுன்
இன்ஸ்பெக்டர் சாம்பை இரண்டொன்று கேட்டு
வன்புரை வாக்கால். ''வாயுதா நாளை''
எனவுரை செய்யவும் எய்தினேன் என்னகர்
சினவுரை பெற்றிடச் செப்பிய மகன்பால்.
'பொய்யன்' என்றான், 'போபோ' என்றான்.
'மெய்யன் என்றுனை வேண்டினேன் வாக்கினை'
எனசில மொழிந்தான்: எடுத்தேன்; அடித்தான்.
மனமகிழ் உடனவை மாண்புறப் பெற்றேன்.
பின்னாள் அவனொடு பேசிய விருந்துமுன்
மன்னா நின்றேன், வழக்கினை எடுக்குமுன்

# கோர்ட்டுக்குள்ளே 'வந்தேமாதரம்!'

எதிரே பார்த்தான் எதிர்த்த சுவரினில்
கதிரே எனுமவன் கண்ணுற் கண்டான்
"வந்தே மாதரம்" வார்த்தைகள் தம்மை.
"அந்தோ! அந்தோ! அழி! அழி! என்றான்.
விரைந்தின் ஸ்பெக்டரை வினவினான். அவன்தன்
கரந்தனில் ஏதோ காயிதம் வைத்து
வாசித் தான்அதை மறுத்தேன்; பார்த்தான்.
வாசித்தேன் சட்டம்; மயங்கி விழித்தான்.
மறுநாள் வரும்படி வாயுதாச் சொன்னான்
தெறுவாள் போன்ற சினந்த முகத்தொடு
வாசல் கடந்தேன் 'வந்தே மாதரம்"
பூசல் எங்கும் பொங்கி எழுந்தது!
மிரண்டேன் என்ன விளையுமோ என்று
திரண்ட பலரைத் தெருவினிற் கண்டேன்.
விஞ்சு வந்தால் வீண்போ ராகுமென்
றஞ்சி அவரை அழைத்துத் திருப்பி
குறுக்கு வழியைக் கூடி நடந்து
வெறுக்க வெறுக்க விளையுளை நல்கும்
தாம்பிர வருணித் தண்ணீர் கடந்து
இம்பல பேசிச் செறிவுற விருந்தேம்
"சுதேசியம் கொஞ்சம் சொல்லுக" என்றனர்
"அதேஜயம் கொடுப்ப"தென் றறைந்தேன்
[சிலசொல்.

பின்னர் நடந்தேன் பேணிய * சாதுபால்

---

* சாது—சாது கணபதி பந்துலு.

அன்னம் அளித்தான்; அருந்தினேன் மகனுடன்.
அடுத்த மாடியில் அன்பரொடு படுத்தேன்.
அடுத்தது காலை அருஞ்சில கொண்டு.
பன்னிரு மணிக்குப் பாலகனைக் கொண்டியான்
முன்னிரு நண்பரொடும் மூன்றுவக்கீலொடும்
குறித்தபடி சென்றேன் குறித்த விருந்துமுன்.

## சட்டம் தெரியாத கலெக்டர்!

குறித்ததொன் றெடுத்ததைக் கூற்றெனப் படித்தான்.
"தேசநன் னிலையினைச் சிதைவுறச் செய்தீர்;
மோசம் வருதலை முகர்ந்தேன் இன்றிவண்
தயாரோ கொடுக்க ஜாமீன்" என்றே.
"பெயாரோ இவ்வுரை பெருமிதம் உற்றால்"
என்றுநான் நண்பர்க் கியம்பிஎழுத் தீந்தேன்:—
"இன்றுநீர் எம்மை இருட்சிறை யிட்டிட
மனத்தினில் உன்னிஇம் மாற்றம் உரைத்ததால்,
தனத்தினில் உயர்ந்த ஜாமீன் கொடுக்கிறோம்.
ஆனால் வழக்கினை அடுத்த கோர்ட்டில்
மேனாள் மாற்றிட விரும்பினோம்" என்றே.
குறித்த பிரிவரை குறைவழக் கொன்றினே
மறித்த சிறையினை வழங்கலாம் என்றதால்,
"வாயுதாப் போட்டுளேன்: மன்சிறை தந்துளேன்:
போயவண் இரும்" எனப் புகன்றனன் விஞ்சு.
"கொடுத்த ஜாமினைக் கொள்ளிரோ?" என்றேன்.
"கொடுத்த எழுத்தும் குற்றத்தை மறுத்ததால்
ஜாமினை ஏற்றிடேன்; ஜல்தீபோம்" என்றான்.
தாமதம் இலாது சாற்றிய நிபந்தனை
இலாது ஜாமினை யீந்ததா எழுதிப்
பொலாதவன் கரத்திற் பொள்ளெனக் கொடுத்தேன்
இந்த மத்தியில் எண்ணிலாப் போலிஸார்
வந்தனர் மேடை. வந்ததும் எம்மை
"நடங்கள்" என்றனர். நானுடன் விஞ்சுவை
"திடங்கொடு பதிலெதும் செப்புக" என்றேன்.

திருநெல் வேலி டிவிஷன் போலீஸ்
பெரிய இன்ஸ் பெக்டர் "பேசா தொன்றும்
செல்லுக" என்றனன். சேர்ந்தவண் இருந்த
நல்லவர் பலரையும் நானுடன் பார்த்துக்
'கொடுத்த மனுவிற்குக் கூறிலன் விடையினம்;
அடுத்தனர் போலீஸார் அதன்முன். ஆதலால்
செல்கின்றேம் சிறைக்''கெனச் செப்பினேன். அவருள்
நல்லியல் சுந்தர ராஜன் என்பவன்
"சிதம்பரம் முகத்தின் தேஜசைப் பாரென''ப்
பதம்சில வழங்கினன் பக்க நின்றூர்க்கு.
தெற்கே நோக்கினன் செப்பிய இன்ஸ்பெக்டர்
தெற்குள ‡எமனூர் செல்லுக என்றல்போல்.
குருநாதன் இடத்துக் கொண்டுபோய்ப் பாலனைத்
''தருவாய் அவனுடை தாயிடம்'' என்று
சென்றேம் மூவரும்; தெற்கொரு தீவழி
அன்றே கண்டேம்: அதன்வழி இறங்கினேம்.
புவியினைத் தொடவும் பொள்ளென அழைத்தான்
கவியின் செயலெலாம் கைக்கொண்ட விந்து.
வந்தேம் மேடை "மறுபடி நீர்மனுத்
தந்தது வாயிதாச் சாற்றிய பின்னரே.
அதனால் ஜாமீனை அங்கீ கரித்திலேன்.

---

‡ எமனூர்-சாவு
* கவி-குரங்கு.

## சிங்கங்கள் சென்றன சிறைக்குள்.

இதுவே யென்பதில் என்றனன். பின்னர்
சப்ஜயில் † வராந்தாச் சார்ந்துநன் கிருந்தோம்.
பப்ளிக் ரோட்டினும் பப்ளிக் கோர்ட்டினும்
நிரம்பிய குழுவையென் நெறியினின் றகற்றி
வரம்பெற வருவர்போல் வண்டி இரண்டொடு
போலிஸார் வந்தமைப் "போவமா" என்றனர்.
சாலவும் நன்றெனச் சார்ந்தேம் வண்டியை.
இருநான்கு பாகம் ஏகவும் வண்டிகள்
இருநான்கு திசையின் றெண்ணிலார் வந்து
முன்னும் பின்னும் மொய்த்தனர் எம்மை.
"இன்னுமென் பின்னர் ஏகன்மின்' எனப்பதில்
கொடுத்தே பாளையங் கோட்டைச் சிறையினை
அடுத்தேம். பின்செயல் அறைவேன் இனியே :

† வராந்தா-தார்சா, Verandah-

## சிறைச்சாலைக்குள்ளே......

மார்ச்சுவீ ராறு மாலைமணி மூன்றுக்குத்
தேர்ச்சியில் மிக்க சிவமொடு பத்மனொடும்
சிறையுள் நுழையவும் ஜெயிலர் வந்தெம்
மறைமுதல் யாவும் மயக்குறப் பார்த்தென்
ஐவிரல் களுமொன் றாகும் வகையிலென்
கைவிரல் மோதிரம் கழற்றி வாங்கி
"கதிர்பார்த்த கணமுதல் கருதிநும் வரவினை
எதிர்பார்த் திருக்கிறோம் இவ்விடம் நாங்கள்
தந்தையும் மகனும் சாத்தனும் என்றிட
வந்தீர் மூவரும் மதியுடன் இருமின்
எனமொழிந் தான்.யான் " இயம்பிய தழகே
மனமொழி ஒத்துநீர் வந்திடின்" என்று
"சொந்த உணவிற்கென் சொல்கிறீர்?" என்றேன்.
"அந்த உரையினை அறைந்திடும் மேலுள
சிறை சூப்பரிண் டெண்டிடம்" என்றான்
அறையச் சென்றேன். அவனென்னைக் கண்டதும்
"கைதி யாகநீர் காணப் படவிலை ;
கைதி யாகநீர் கருதவிலை" என்றான்.
" உரைத்த நும்முறை உண்மையே யாகுக ;
உரைத்திட வந்ததை உளங்கொளும்" என்றேன்;

## சொந்த உணவும், சோறும் பிறவும்.

என்னென்ன இயம்பி ஏறவும் இறங்கவும்
தின்னும் எமனெனச் சிறியனைப் பார்த்தான்.
அவனையும் நானுடன் அங்ஙனம் பார்த்தேன்.
அவனதன் பின்னர் அடங்கி விழித்தான்
"சொந்த உணவுக்குச் சொல்லுக விரைவில்
வந்திவண் நிற்கும் மனிதற்" கென்றேன்
"சரி" எனச் சொன்னான். சண்முக சுந்தரம்
பரிவுடன் உணவவன் பார்த்திடக் கொணர்ந்தான்
உண்டேன்; சிவமோ உண்டனன் சிறிது;
உண்டிலன் பத்மன் உணர்ச்சி பேதத்தால்.
படுக்கை வராததால் படுத்தேம் தார்ப்பாய்
மடிக்கண் அங்குள மாப்பிளைத் தலையணை
கொண்டு நன்குகண் கூட உறங்கிக்
கண்டேன் விழிக்கவும் காலையை முன்போல்
பலகாரம் என்றிவண் பகர்ந்திடும் தோசையில்
சிலகாரப் பொடிநெய் சேர்த்தத னோடு
காப்பி கொணர்ந்தான். களிப்புடன் உண்டேம்
ஏப்பம் வந்திட இம்மியும் விடாது
குருநாதன் படுக்கைகள் கொணர்ந்தான். கவிஞனை
ஒரு நாளும் இலாத உளத்தொடு கண்டேன்.
‡ ஞான சிகாமணி நண்பனுள் வந்து
ஞான மொழிசில நவின்று போயினன்.
அறுசுவை மதியம் அருந்தவும் வார்டர்கள்

---

‡ ஞானசிகாமணி—நெல்லை ஞானசிகாமணி முதலியார்.

# திருநெல்வேலியில் புரட்சித் தீ.

"தெறுகள மாயது திருநெல் வேலி" எனக்
கைதிகளை அடைத்துக் கதவைப் பூட்டினர்.
செய்தி யாவும் தெரிந்தோம் பிற்பகல்
ஜனங்கள் திரண்டு ஸர்க்கார் தலங்களை
மனங்கொள் வண்ணம் மாய்த்தனர் தீயால்;
பின்னர் விஞ்சு பிழையிலாச் சிலரை
உன்றுது சுட்டுயிர் உண்டனன் கேண்மோ
மறுதினம் குருநாதன் வந்தனன் எம்மொடு
செறிவுற விருக்க செப்பினன் இஃதே
"நீவிர் மூவரும் நிசிசிறை இருமெனப்
* பாவி மொழிந்தபின் பாலகனைக் கொண்டுயான்
திருமந்திரநகர் சென்றேன்; விடுத்தேன்,
"கருமம் தொடர்ந்தது; கலங்கற்க" என்றே
வெள்ளிக் கிழமை வீராரா கவபுரம்
பள்ளிச் சிறுவர் பலத்தொடு கூடி
"அடைமின் கடைகளை அன்பர் சிறையுள்
அடைபட நின்றதன் அறிகுறி யாக"
என்று மொழிந்தனர். யானும் அவருடன்
நன்றென மொழிந்தேன் நாலைந் தடைத்தனர்.
திருமந்திரநகர் சென்றேன் அங்கெமக்
கருமைகள் செய்ய அநேகர் கூடினர்.

---

* விஞ்சு

## தூத்துக்குடியில் கலகம் :
## ஆஷ் அட்டகாசம்.

ஆசு படையுடன் அணுகி அவரை
மோசம் செய்திட மூட்டிக் கலகம்
தடியால் அடிப்பித்தான் சார்ந்தநம் மவரை ;
வெடியால் சுட்டான் வெளிவர விடாது.
ஆசுவின் குதிரையை அடித்தவர் தள்ளினார்,
நாசமென் றுயிர்க்கென நவின்றவன் ஓடினான் !
தடித்த கொழுத்த சப்பின்ஸ் பெக்டரை
அடித்தும் மிதித்தும் அளவில புரிந்தனர்.
சுட்ட வெடிகளைத் தூள்தூ ளாக்கி
எட்டிய இடங்களில் எறிந்து தொலைத்தனர்.
தெருவெலாம் நம்மவர் சிரித்துத் திரிகிறார்
மருவிலேம் என்றவர் மனத்தினில் உன்னியே.
வெள்ளையர் சகலரும் மிகமிக நடுங்கிக்
கள்ளரைப் போன்றவண் கரந்து மறைந்தனர்.
நமதுநன் மனையுளார் நன்றா யிருக்கிறார்
நுமதுநற் றுணைக்கு நோக்கியிவண் வந்தேன்.
எண்ணிய படியான் இச்சிறையை விஞ்சு
நண்ணி இருவென நவின்றனன் என்றான்

## கலெக்டர் கலக்கம் : கவர்னருக்குத் தந்தி.

"நடந்தன எல்லாம் நஞ்செயல் அல்ல ;
கடந்து நிற்கும் கடவுளின் செயலே"
என்றவர்க் குரைத்தும் இனியசில மொழிந்தும்.
நன்றெனை இருந்தேம் நால்வரும் அங்கண்
பொழுதுபடு சமயம் போர்தரும் சிப்பாய்
பழுதற எம்முடல் பாது காத்திட
வந்தனர். வந்ததும் "மதராஸ் கவர்னர்க்குத்
தந்திபோ யுளது சர்க்காரை நீவிர்
அழிப்பீர் என்றே ; அந்நிய தேயம்
விழிப்பீர் விரைவில் மீளீர்" என்றனர்.
அந்த உரையினை அளித்ததற் காக
வந்தனம் அளித்து மறுமொழி யாக
"வருவன வெல்லாம் மாணிறை யீசன்
தருவன வென்றே தகவொடு கொள்வேம்.
ஆட்சியை இழந்தவர் அன்னியர் கையில்
மாட்சியைப் பெற்றிட மறந்தும் நினைப்பரோ?"
எனவுரை செய்தேம். ஏற்றதை மெய்யென
மனமகிழ் வுடனே மதித்தெமை நின்றனர்.
பின்னர் ஞாயிறு பிற்பகல் திடீரெனப்
பன்னிய ஜயிலர் பன்னிரு பருத்த
தடிகள்கைக் கொண்ட தடியர்கள் சகிதம்
மடமட வென்று வந்தனன் எம்மறை.
காலனோவெனக் கருதி அயிர்த்தேம்.
நான்கு பக்கமும் நன்கு வளைந்துபின்
அறைக்குள் நுழைந்தனன் ; யாவையும் பார்த்தனன்,

## சிறையதிகாரிகள் மூடத்தனம்.

அறைக்குள் திண்ணைமேல் அலுத்தியான் இருந்தேன்.
"நின்றிட இங்கியான் நீவிர் இருப்பதென்"
என்றனன் ஜயிலர். "ஏகுதற் காய
விதிவர விலை" என விளம்பினேன் அவனுடன்
"பதிலுரை தருவதைப் பார். இவர் உடுத்திய
ஆடையை அவிழென அறைந்தனன் : தடியரென்
ஆடையை அவிழ்த்தனர். "அரைஞாண்" என்றனர்.
"அரைஞாண் எங்ஙனம் அங்குற்ற" தென்றான்
"அரைஞாண் என்றும் அங்குள" தென்றேன்.
சென்றான் அத்துடன்; சிரித்தேம் நாங்கள்.
நின்றான் :பார்த்தான் : நினைந்தான் : போயினான்.
பிறகெமை நெருங்கிப் பேணிப் பணிந்தெம்
சிறகென நின்று செய்தனன் உதவிகள்.

# உணவு கொடுத்தற்காகச் சிறை.

சண்முக சுந்தரம் சாற்றிய படிக்கங்
கன்பொடு நின்றநம் அரிகர புத்திரன்
கொடுத்தனன் உணவு கொஞ்சநாள். அதனைத்
தடுத்திட அவனைத் தள்ளினன் சிறையுள்
நாளைக் கழித்திட நாய்த்தொழில் புரியும்
பாளையங் கோட்டைப் பாவி இன்ஸ்பெக்டர்.
சிலநா ழிகைக்குள் திருமந் திரம்நின்று
பலநாள் எனக்குப் பண்பொடு நின்று
நன்றி புரிந்து நானுளம் கொண்டிட
இன்றுமென் மக்களை இயல்பொடு புரக்கும்
குலமொடு நலமுயர் குலமகள் ஒருத்தியும்
குலமது வளர்க்கநான் கொண்டநன் மனையுமென்
மக்களொடு வந்துநம் மாண்ட சண்முகன்
தக்க மனையைச் சார்ந்தவண் நின்று
பலபல வுணவும் பாலும் பழமும்
பலபல பண்டமும் பதத்துடன் அனுப்பினர்.
என்னுடை மைத்துனன் இளையவன் *பிச்சன்
நன்னய முடனவை நாளும் கொணர்ந்தான்
மணமக ராக மதித்தெமை அங்கண்
மணமொடும் சுவையொடும் வளனுற வுண்டேம்..

---

* பிச்சன்-நூலாசிரியர் மைத்துனர் பிச்சையா பிள்ளை.

# சிங்கக் குருளை பிரசங்கம்.

வாரம் ஒருமுறை வந்தவர் ஒருமணி
நேரம் என்னோடு நிகழ்ந்தன பேசினர்
தினமும் என்னொடு சென்றுபிர சங்கம்
மனமொடு கேட்டவென் மகன் உலக நாதன்
ஐந்து வயதுள அறியாப் பாலகன்,
மைந்தர் பலரை வலனொடு கூட்டி
" இதுநம் தேயம் ; இதிலியாம் காணும்
எதுவும் நம்பொருள் ' இனிவெள் ளையரை
வெருட்டுவீ ரென்று வியம்பி விளையாட
" பாரீர் சிறுவனை ; பலகர்தைக் கேளீர் "
எனப்பல பெரியரும் இயம்பிக் கூடிடத்
தினப்படி பிரசங்கம் செய்தனன் அவனும்
போலீஸ் ஸாரதைப் புகலவும் இன்ஸ்பெக்டர்
" மேலே அவரை நும் வீட்டினுள் வைத்தால்
அவருக் கடுத்தன அடுக்கும் உமக்கும்
சுவருக்கு வெளியே தொலைத்திடும் " என்றனர்.
சண்முகம் மனைவி சரீரம் நடுங்கியென்
பெண்முகம் பார்த்துப் பேசவும் என்னவர்
* தலமா ணிக்கபுரம் கோவிலை நண்ணிக்
குலமா ணிக்கமெனக் கூறிட நின்றனர்.

---

* பாளையங்கோட்டைக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூர். இப்பொழுதும் அங்குதான் சிறையுளது. முன்னர் அவ்வூரில் கொலைக்குற்ற வாளிகள் தூக்கப்பட்டதால்,'மாணிக்கபுரம்' கொலை மாணிக்க புரம் ஆயிற்று.

## சிறை நீக்கப் படலம்!

† சௌரத்திற் கென்னூர் ‡ சங்கனுள் இருந்தான்.
கௌரவப் படியெனைக் கண்டு வணங்கினான்.
நயமுள கத்தியை நல்கினான் டிரசர்.
பயமொடு பணிந்தெம் பணிகளைச் செய்தான்.
தாடியை யெடுத்திடச் சாற்றிய சிவம்தான்
§ "வாடி" என்றிடும் வண்ணம் ஆயினான்.
மறுநாட் காலையில் வந்தசூப் பிரண்டெண்டு
குறுகிய மொழிசில கூறினான். 'நும்மின்
சொல்லின் பின்னரே தொலைத்தனன் மயிரினை ;
எல்லையில் லாமல்நீர் இயம்பலென் ' என்றேன்.
" இனந்தெரிய விலை"யென ஏங்கினான். "என்றும்
இனந்தனை மறப்பவர் ஈங்கிலை" என்றேன்.
* வாலேசுக் கெழுதஅவன் வாக்குமூலம் கேட்டான்
' சாலவும் பிரசங்கம் சாற்றிய சிவம்நான்"
எனமொழி தந்தனன் என்றும் உண்மையே
மனமொழி ஒத்திட வரையுமென் நண்பன்.
எண்ணெய்க் குளிக்கெமக் கீந்திட அனுமதிக்
கண்ணில் சிறையினன் கடமைப்பட் டிருந்தும்
மறுத்தனன் சிலநாள். வருத்தி அவன்பின்
குறித்த தினங்களில் குளித்தியாம் நின்றேம்

---

† சௌரம்-சவரம்.

§ வாடி என்றிடும் வண்ணம்-பெண்போன்ற தோற்றம்.

‡ தூத்துக்குடிக் கலகம் சம்பந்தமாக கைதியான சங்கன் என்னும் நாவிதச் சகோதரன்.

* நூலாசிரியர் சிறையினின்றும் வந்தபின் மீட்டும் வக்கீல் வேலை வாங்கித் தந்த ஹைகோர்ட் ஜட்ஜ் வாலெஸ்துரை. நூலாசிரியர் தம் கடைசி மகற்கு 'வாலேசுவரன்' எனப் பெயரிட்டுள்ளார்.

## சிறையில் பெற்ற அறிவுச் செல்வம்.

பேப்பர் படித்திடப் பெருமயல் உற்றியாம்
சூப்பரின் டெண்டிடம் சொன்னேம். அவனுடன்
மறுத்தான். அதன்பின் வலனுடன் அவன்பின்
செறித்த பலவும் செப்பும் "ஹிந்து"வும்
வந்தே மாதர மாட்சி பெற்றவெம்
சொந்தப் பேப்பரும், "சுதேசமித் திர"னும்
தினமும் வருத்தித் தெரியாது படித்தேம்.
அனுமதி கொண்டெமக் கரும்பொருள் கொண்டநம்
வள்ளுவர் மறையும் மாண்புயர் நல்லாப்
பிள்ளைபா ரதமும் பெரும்பொருள் நிரம்பிய
பகவற் கீதையும் படித்தேம். பிந்திய
தகவல் தெரிந்திட ஜாதகம் பார்த்தேம்.
ஜோசியம் பலவும் தொகுத்துள நூல்சில
வாசித் துரைத்தோம். வந்த கைதிகள்
மதுரை வீரனின் வலனிறை சரிதமும்
சதுர மாகச் சர்க்கா ரோடுபல
சண்டைகள் புரிந்து தன்திறம் நாட்டி
எண்டிசை யும்புகழ் இயம்பிட நிற்கும்
நமது * பாஞ் சால நாயகன் சரிதமும்
எமதுளம் களித்திட இன்பொடு கேட்டேம்
"நாயும் புலியும்"என நவிலும் ஆட்டமும்
தாயமும் ஆடினேம் : சட்டமும் பார்த்தேம்.

---

* பாஞ்சால நாயகன் சரிதம்-கட்டபொம்மு நாயக்கர் சரிதம்.

கசரத்து பஸ்கி காலை மாலைஎம்
வசத்தில் எம்முடல் வந்திடச் செய்தேம்
வார்டர் ஒரு சிலர் வந்தெம் அரங்கில்
பாடினர் : மற்றும் பலபணி செய்தனர் ;
எமக்குற்ற தமவென எண்ணிச்சில இயம்பினர்.
எமக்கொணாச் செயல்களை இடித்து நிறுத்தினேம்.
* காண்விக்டு வார்டரும், † காண்விக் டோவர்சும்
காண்விக் டுகளைக் கடூர மாக

---

* காண்விக்கு வார்டரும்-Convict warder.
† காண்விக்டோவர்சு- Con vict overseer.

# சிறையில் செய்த சீர்திருத்தம்

அடித்து வருத்தினர். அவரை வருத்தியாம்
இடித்துக் கூறினேம். இறுத்தனர் அச்செயல்.
மந்திர நகரில் வரைந்த வெள்ளியில்
வந்த கலகத்தின் மறுதினம் பலரைப்
பிடித்துத் தண்டித்தும் பின்விசா ரணையென்றும்
அடுத்தடுத் தனுப்ப அனேகரெமைச் சார்ந்தனர்.
தச்சநல் லூரினும் சாற்றிய நெல்லையினும்
வைத்தனர் தீயென வரையிலா தெனகரைக்
கொணர்ந்தனர். நாங்கள் கூடிய வழிகளில்
உணர்ந்தேம் நிகழ்ந்தன. உவப்புடன் அந்நாள்
சாது கலெக்டர் தலத்து ஜட்ஜிபால்
ஓதினன் ஜாமீனுக் குரையினும் வரையினும்
அவனும் மறுத்தனன். அதன்பின் என்னிடம்
இவனும் வந்தனன்: இன்புறப் பேசினன்
சென்னை சென்றனன் சிநேகிதர் சிலருடன்.
நன்னய வுரையில் நல்கினன் மனுவைப்
பெரியஜக் கோர்ட்டில் பேசத் தகுந்த
பெரியவொரு வக்கிலைப் பேணி அமர்த்தி
வெள்ளிக் கிழமை விரிவுறப் பேசித்
தெள்ளிய ஜட்ஜிபால் சிறையினின் றெம்மை
விரைந்து ஜாமினில் விடும்படி யாக
வரைந்தநல் ஆர்டரை வாங்கி அனுப்பினன்.
திங்கட் கிழமை செஷன்ஸ் ஜட்ஜ்முன்
எங்கள் வக்கீல் ஈந்தனர் ஜாமீன்,
உடனெனை விடும்படி உத்தர வடுத்தது.
உடனதை இயம்பா தொளித்தனர் சிறையினர்.

# கலெக்டரின் கடும் சூழ்ச்சி.

இந்த மத்தியில் எமனெனும் விஞ்சு
தந்தி மூலமாச் சாற்றிப் பற்பல
மதுராஸ் கவர்னரின் மனத்தைத் திருப்பிச்
சதுர மாக ஜனங்களைக் கூட்டியாம்
தூற்றுக் குடியினும் சொல்லிய நெல்லையினும்
சாற்றிய பிரசங்கம் தம்மிற் பற்பல
இராஜ நிந்தனை இருப்ப தாகப்
பிராது கொடுக்கப் பெற்றார் அநுமதி.
எங்களில் பத்மனை இணையாது விட்டு
திங்களில் பிராதைச் சிவமீதும் என்மீதும்
கொடுக்கும் படிசெய்து கொடுத்தனன் வாரண்டு.
அடுத்தனர் போலிஸார் அதனுடன் சிறையினை.
அஞ்சலை மணிக்கியான் அவர்தலை கண்டிடன்.
நஞ்சினைக் கொணர்ந்தனர் நமக்கென உன்னினேன்.
சிறையின் சூப்பரிண் டெண்"டிது வரையும்
சிறையினின் றும்மைத் தீர்த்திட ஆர்டர்
வந்திட வில்லை : வந்திடும் காலையில் :
வந்ததும் நும்மிடம் வாங்கியே ஒப்பம்
விடுதலை செய்கிறேன் ; வீடுபோம்" என்றான்.
கெடுதலை செய்வதே கிட்டிய நெஞ்சொடு.
செவ்வாயில் யாவும் சித்தப் படுத்திப்பின்
செவ்வாய் திறந்து செப்பிய சிறையினன்
"நடந்து நும் வீட்டை நண்ணலாம்" என்றான்.
நடந்தன வெல்லாம் நான்முன் முகர்ந்ததால்
"ஒப்பம் இடற்கியான் யோசிக்க வேண்டும் :
இப்பம் இடற்கெனக் கிஷ்டமில்லை" என்றேன்.

பதினொரு மணிக்குப் * பர்தர் ரிமாண்டு
விதியினைப் பெற்றிட விஞ்சுமுன் சென்றோம்.
சென்ற வழிகொண்ட சிறப்புகள் பற்பல
அன்றவை கொண்டுயாம் அரசெனல் உணர்ந்தோம்.
குடுகுடென் றோடும் குதிரைகள் பூட்டிய
நெடுமிரு வண்டிகள் நேர்ந்தனர் எமக்கு.
நானொரு வண்டியை நண்ணினேன். நண்பர்
தாமொரு வண்டியைச் சார்ந்தனர். முன்பின்
உடலினைக் காக்கும் உத்தியோ கஸ்தர்
திடமுள நால்வர் சிறப்புற இருந்தனர்.
முன்பிரு டிப்டி சூப்பரின் டெண்டுகள்.
பின்புறு இன்ஸ்பெக்டர் || பெய்சிக்கிள் வண்டியில்
இடவல பக்கம் ஈராறு ஏட்டுகள்
நடையினிற் சூழ்ந்திட நாலிரு ரிவால்வர்
நாலைந்து வெடியொடு நகன்றன வண்டிகள் ;
நாலைந்து பாகம் நண்ணினேம் ரோட்டினை
ஜனங்கள் திரளாச் சார்ந்தவண் நின்று
மனங்கள் கலங்குற வந்தனை செய்தனர்.
பன்னிரு கான்ஸ்டபிள் பைனட் வெடியொடும்
முன்னொரு ஏட்டு முகந்தெரி வாளொடும்
தாயாராய் நின்று சலியூட்டுச் செய்தனர்
தாயாராய் நாங்கள் சலியூட்டை ஏற்றோம் !
அப்படி யாக அடுத்தடுத்துக் கோர்ட்டுவரை
செப்பமொடு போலீஸ் சேனைகள் நின்று

---

* பர்தர்—Further. || பெய்சிக்கள் வண்டி-சைகிள் வண்டி.

சலியூட்டுச் செய்தனர் சர்க்கார் மனிதரின்
* கிலியூட்டைக் காட்டவேபோல். கிட்டினேம் [கோர்ட்டினை
எண்ணிலா மனிதர் எங்கெங்கும் நின்றனர்.
எண்ணிலாப் போலிஸார் இங்கங் குலாவினர்.
இறங்கவும் வண்டிவிட் டெதிர்வந்து சைக்கிளார்
உறங்கி விழித்தவர்போல் உற்றெமைப் பார்த்து
முன்னே நடந்தனர் ; மூவரும் பின்னடைந்தேம்.
சொன்னேரத் துள்ளே தோன்றினேம் விஞ்சுமுன்.
சிலநாள் சிறையிருக்கத் திரும்பிவரம் கொடுத்தான்
பலநாள் சிறைவைக்கப் பாவியுள் நினைத்தே
சென்றேம் சிறைக்குள் செப்பிய சிறப்பொடு ;
அன்றே நண்பர் அறைந்தனர் ஒப்பமிட.
மறுநாட் காலையில் வைத்தென தொப்பம்
குறுகவும் உட்† கேற்றைக் கூடியங் கிருந்தாருள்
டிப்டிசூப் பிரண்டெண்டு திடீரென வந்துமுன்
" இப்படியோர் வாரண் டிருக்கிற"தென் றளித்தான்.
"தெரிந்தே தான்வந்தேன்:செல்லுவோம்"என்றேன்,
எரிந்தேபோம் விஞ்சுக்க் எதிர்சென்று நின்றேன்.
பேயிச்சை போன்ற பெருவாய் திறந்தவன்
* " ஈயைச்சு வாலேஸ் இவ்விடம் வந்துளன்
அடிஷனல் டிஸ்டிரிக்த மேஜிஸ்திரேட்டாக.
அடுமவன் கோர்ட்டென்" றறைந்தான். பின்னர்
வாலேஸ் வந்தான் : வாயுதாப் போட்டான் :
மேலொரு பிராதை வேண்டினான் சிவத்தின்
பிரசங்கத் திற்கியான் பெருமுதவி செய்ததாவென்
பிரசங்கப் பொய்க்குறிப்பும் பெரும்பிழை [காட்டாதால்.

---

* கிலியூட்டு-பீதியடைதல்.

† கேற்று-gate.

* ஈயைச்சு வாலேஸ்—E. H. WALLACE.

சொன்னால் மூவரும் தொடர்ந்தெம் வக்கிலா
மன்னி நின்றனர் மதுராசி லிருந்து
† பவலும் ‡ ரிச்சும ண்டும் பிராசிக்கு ஷன்பக்கம்
தவலறும் வக்கிலாச் சார்ந்து நின்றனர்.
இந்த மத்தியில் எமக்குச் சிறையினைத்
தந்த விந்துவின் தகாத ஆர்டரை
அளித்திட அவனுக் கதிகாரம் இலையென
வெளிச்சமாக விளம்பஜக் கோர்ட்டார்

---

† பவுல் M. BOWEL.
‡ ரிச்மண்டு - Mr. RICHMAND.
|| பிராசிக்குஷன் - சர்க்கார் தரப்பு.

# பத்மநாப ஐயங்கார் விடுதலை

பத்மன் அவன்மனை பார்க்கச் சென்றனன்
சித்தம் களித்தேம். சிறைஅவன் நீங்கவும்
குருநாத நண்பனைக் கொளுவினர் பொய்யாகத்
திருநெல் வேலியில் தீயிட்ட கேசினில்.
மந்திர நகரில் வக்கீல் பலரைத்
தொந்தரை செய்திடத் துணிந்தவர் தம்மைநல்
நடக்கை ஜாமீன் நல்கிடக் கேட்டனன்
* நடக்கை யென்பதே நண்ணிடா ஆகு.
சென்னைஐக் கோர்ட்டில் † டிரான்ஸ்பர் செய்திடப்
பன்னிய வக்கீல்கள் பலத்தொடு பகர்ந்தனர்
ஜாமீன் தொலைந்தது. நின்றது நிந்தனை.
மறுத்தனன் ஜட்ஜி. வந்த உப சப் கலெக்டர்
இறுத்தனன் கேசை இலாததால் சாட்சியம்.
என்னுடை கேசுக் கேகையில் வருகையில்
என்னுடை குடிலினுள் இயல்பொடு சென்றியான்
நலந்தனை மொழிந்தும் நல்கிய உண்டும்
கலந்து பேசியும் ‡ கண்களை யெடுத்தும்
இன்பமாக் கழித்தேன் என்றும் அங்கண்.
துன்பம் சிறையுள் தொடரா தெம்மை
செயல்நலம் அளித்த டிப்டிஜெயி லர்க்கும்
நயமிகு டிரசர்க்கும் நன்றியான் அறிந்துளேன்

---

* நடக்கை - ஒழுக்கம்.

† டிரான்ஸ்பர் - Tranfer : மாற்றம்.

‡ கண்கள் - மக்கள்.



7

## வழக்கு நடந்த வரலாறு

சொன்ன வாலேஸ் தொடர்ந்தெம் கேஸ்களை
பன்னாள் விசாரித்துப் பகர்ந்தான் * கமிற்றல்
† அடிஷனல் ஜட்ஜா அணுகினான் ‡ பின்னி
சடகோபா சாரியார், நரசிம்மா சாரியார்,
வேங்கடா சாரியார் விரும்புமென் வக்கீல்கள்.
தங்கக் || கௌடலும், சாதுவும், § பீற்றரும்
சிவத்தின் வக்கீல்கள். செப்பிய சென்னை
பவலும், ரிச்சுமண்டும் பிராஸிகுஷன் வக்கீல்கள்
வாலேசு முன்பும், வலுபின்னி முன்பும்
சால நடந்தன சாற்றிடேன் இங்கு.
முகாந்திரம் பற்பல. மொழிவேன் இரண்டொன்று
| "யுகாந்திரம்" முன்பே யுரைத்துளது காண்க.
வாதி கவர்ன் மெண்டார். வழக்கை விசாரித்தோர்
வாதியின் காலுகிர் மயிரினும் தாழ்ந்தோர்.
நியாயமாக் கேட்குதல், நியாயமா எழுதுதல்,
தயாளமாச் சிட்சித்தல், தர்மமாக் காத்தல்
எங்ஙனம் காணலாம் இக்கலி யுகத்தில்?
இங்ஙனம் விசாரித்தோர் இருந்ததும் அன்றி,

---

* கமிற்றல் - Committal ; மேலகோர்ட்டுக்கு மாற்றும் உத்தரவு.

† அடிஷனல் ஜட்ஜ்-அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ்.

‡ பின்னி-A. F. Phinhey.

|| கௌடல் - Mr. Cowdell.

§ சாது - சாது கணபதி பந்துலு.

| யுகாந்திரம் - கல்கத்தாவில் நடந்த ஒரு வங்காளிப் பத்திரிகை.

‖ பீற்றர் - Mr. Petex

இருதிறக் கட்சியும் இருதிறச் சான்றும்
பெருதிறப் பொய்களைப் பேசின. ஏனெனின்
முற்கால நீதி முறையெலாம் நீங்கத்
தற்காலம் வந்துள சட்டங்கள் பொய்களை
உரைத்திடத் தூண்டும் உதவியே தந்துள.
உரைத்திடப் பொய்களை உன்னினேன் என்னெனின்;
தீயன வற்றைச் செப்பலும் தீதென
ஆயும் அறிவினர் அறைந்திவண் நின்றனர்.
முடிவினில் பின்னி முடிவிலா எமக்கு
முடிவிலும் தீர்ப்பை மொழிந்திடவாயுதா
ஜூலை ஏழெனச் சொல்லினன். அன்று
காலையில் பிச்சன் காப்பி கொணர்ந்தான்
நகையும் உவகையும் நண்ணிலன். என்னிரு
* நகையை உவகையோடு நல்கினேன். அழுதான்
"தெய்வச் செயற்கென் செய்யலாம் மைத்துன?
தெய்வச் செயலால் சீக்கிரம் திரும்புவேன்.
வருத்தப் படாதே மற்றுமுன் தங்கையும்
வருத்தப் படாத மாற்றமே சொல்"லென்
றென்னுடை புத்தக மெல்லாம் கொடுத்தேன்.
தன்னுடை மனத்தொடு தாழ்கரங் கொண்டான்.
மதிய வுணவினை †மயக்கொடு கொணர்ந்தான்
கதியினை நினைந்தும் கழறியும் உண்டேம்
என்னுயிர் முதல்மகன் ஏகினன் கேற்றுள்.
என்னுயிர் பதைத்தது: என்னுளம் அழிந்தது;
எடுத்தேன்: முத்தினேன்; என்மடியில் வைத்தேன்;
கொடுத்தேன் தின்பன; கூறினேன் சிலசொல்.

---

* நகை-ஆபரணம் எனச் சொலத்தக்க மகனை (குழந்தையை.)

† மயக்கொடு - மயங்கிய மனத்தொடு.

## குழந்தையின் குறுக்கு விசாரணை

"ஐயா, அம்மையின் றழுகிருள்" என்ருன்.
"ஐயா, நீயும் அழுதையோ?' என்றேன்.
"அழவிலே; உன்னை அயலூர்க் கின்று
பொழுதடையக் கொண்டு போவதா மாமா
சொன்னுன்; நிசந்தானு? சொல்"லெனக் கேட்டான்.
"அன்னேன் உன்னை அழச்செயச் சொல்லினன்
"அஃதிருக் கட்டும், யா னயலூர் சென்றிடின்
தகுமதி கொண்டுநீ தைரியமா இருப்பையா?"
என்றேன், அவனுடன் என்முகம் பார்த்து "நீ
சென்ருல் அழமாட்டேன். செல்லுவையோ என்னைப்
பிரிந்துநீ?' என்ருன். பெருகிய தென்கணீர்
பரிந்தவன் என்முகம் பார்த்துப் பார்த்துக்
கண்ணீர் சோர்ந்திடக் கைத்துணி கொண்டென்
கண்ணீர் துடைத்தான் கருத்தழிந் தேன்பின்
மடமையை உணர்ந்தேன்: மதியுடன் வந்தது.
திடமுடன் என்முகம் திருத்தி அவன்கண்
நீரைத் துடைத்து நெஞ்சொடு சேர்த்து
"யாரழு தாலுநீ அழாதே" என்றேன்
"இலே" என் றுரைத்தான் எழில்முகம் முத்தி "நீ
நலமாத் தம்பியை நண்ணியிரு" என்றென்
மைத்துனனைப் பார்த்தேன். வாங்கிஅவன் சென்ருன்.
அத்துணையும் என்பக்கம் அழுகையில் மூழ்கிய
சிவம், குரு நாதன், சிற்சில வார்டர்க்குத்
"தவத்தின் பயனிது தளரற்க" என்றேன்.
எண்ணிலாப் போலிஸார் ஏகிவெளி நின்றனர்

எண்ணிலா வெடியுடன் எம்மை அழைத்திட்டு
வழக்கப் படிஇரு வண்டியில் ஏறினேம்.
கிழக்கு, தெற்கு, மேற்கு வடக்கெனும்
நான்கு திசையினும் நன்கவர் வளைந்தனர்
வான்கதிர் மதியினை வல்லர வடுத்தல்போல்
நடந்தன வண்டிகள் நாலா பக்கமும்
நடந்தனர் நம்மவர் நண்ணினேம் கோவில். என்
மாதுலன் என்பின் மகனொடு நின்றான்.

# சிவ-சிதம்பரத்திற்குத் தண்டனை

“ஏதிவண் நிகழினும் இளைத்திடேல்” என்றுபின்
இயம்பிய *பின்னிமுன் ஏகினோம். அவன்தான்
நயம்படப் பற்பல நாளாஃ வெழுதி
வந்த தீர்ப்பினை மனங்கொண் டெடுத்துச்
சிந்தை மகிழ்ந்திடச் சிலமணி படித்துச்
சிவம்பிர சங்கம் செய்ததற் காகத்
தவம்புரி யும்படி தசநல் வருடம்
தீவென வியம்பினான். தீங்கிலேன் அவற்குத்
தரவில் உதவியைத் தந்ததற் காக
இருபது வருடமும், இயம்பிய நெல்லையில்
ஒருபிர சங்கம் உரைத்ததற் காக
மற்றோர் இருபது வருடமும் தீவெனக்
கற்றோர் மனமும் கலங்கிடச் சொன்னான்.
இறையும் கலங்கா தென்னுளம் கவர்ந்துள
இறையின் கொடையென ஏற்றேன். ஆயினும்
நீதியை நினைந்து நெஞ்சொடு நகைத்தேன்.
ஆதியிற் செய்ததின் றடுத்ததென் றுன்னினேன்.
கனமணி மாடியில் காத்திருந் தோம்.பின்
ஜனமெலாங் குலைத்துச் சார்ந்தனர் போலிஸார்.

---

* பின்னி - A. F. Phinhey

## மனைவி மக்கள் மனவருத்தம்

சென்றோம் சிறைக்கு, செல்வழி கோவில்முன்
நின்றார் என்பிதா நேர்பெரிய மைத்துனன்.
"கவலற்க" என்றேன். "கடவுள் இருக்கிறார்.
கவலற்க" நீயெனக் கழறினன் * தந்தை.
என்முன் மகனை என்முன் கண்டிலேன்.
என்பின் மகனை என்பெரிய மைத்துனன்
எடுத்துவைத் திருக்க என்கண் கண்டதும்
அடுத்தது கண்ணீர் அடக்கினேன் வலியால்.
என்குடி லின்மேல்நின் றியம்பிய மாது
தன்கணீர் உகுத்துத் தலையிற்கை வைத்து
மிகமிக அழுதனள். 'வேண்டாம் அழுகை;
மகவைப் பேணென வண்டியில் இருந்தயான்
கையால் பேசினேன். கண்டனள் அவளும்
மையால்† என்னுயிர் மனைவி குடிலினுள்
விழுந்து வருந்தி மிகவும் துயரினுள்
அழுந்திய தாக அறைந்தனன் ஒருவன்.
சென்றோம் சிறைக்குள். டிப்டி ஜயிலரும்
நின்றார் சிலரும் நெருங்கிவந் தழுதனர்.
"நினைத்த படியே நிகழ்த்தினன் தீர்ப்பு;
மனத்துயர் நீக்குமின் வலியினால்" என்றேன்.
செப்பிய ஜெயிலரும் சிந்திமிகக் கண்ணீர்
"அப்பா! நீ இனி அயரேல்" என்றான்.
"அயர்தல் என்றும் அணுகா தென்னை;
உயர்தல் ஒன்றே ஒன்றும்" என்றேன்

---

* தந்தை-நூலாசிரியர் தந்தை உலகநாத பிள்ளை.

† மையால் - மதிமயக்கத்தால்.

நன்றென நடந்தான், நாங்களும் அவனொடு
சென்று டிட்டி ஜெயிலர் ஆபீசிலெம்
உடையினைக் களைந்தங் குவப்பொடு வைத்தெம்
எடையினைப் பார்த்ததில் * ஈரொட் டெட்டும்
ஒன்றும் இருந்தேன்; ஒழிந்த இருபவுண்
இன்றி சிவத்தின் எடையை நினைந்திலேன்.
ஜெயிலர் திரும்பினான். சிலவுடை சகிதம்
அயலில் ஒருவன் ஆஜரில் வந்தான்.
வாங்கி அவற்றை வழங்கவும் எமக்கே
ஏங்கினன் அவனும் எதிர்நின் றவரும்.

---

* ஈரொட்டெட்டு - 128 பவுண்டு.

## சிறை உடையின் சிறப்பு !

உடையின் பெருமையை உரைப்பேன் நினக்கு
இடனுட னிருந்து சிரிப்பொடு கேட்பாய்
மரத்தின் பட்டையென வரையத் தக்க
உரத்த துணியில் உருப்படுத் தியநல்
கால்களில் லாத கைகளில் லாத
கால்சட்டை யொன்றும் கைச்சட்டை யொன்றும்
அத்திறத் துணியில் அமைக்கப் பட்ட
மெத்தச் சிவந்த மேனியைக் கொண்ட
தலைக்குல் லாவெனச் சாற்றுவ தொன்றும்
தலைக்கொரு மூன்றுத் தந்தன கண்டேம்
மூன்றையும் அணிந்திடின், முண்டமே யாகத்
தோன்றுவ தல்லது சொரூபம் தோன்றாத்
திறத்தன்வ அமைந்தும் திறத்துடன் அமர்ந்து
மறத்துடன் ஆள்வோர் வழங்கிய கொள்ளல்
எம்போ லியற்கியல் என்றுளம் கருதி
எம்பெயர் உயரவும் எம்முருத் தாழவும்
உடுத்தேம் அவற்றை உளங்கொடு. பின்னர்
அடுத்தேம் அங்குள அகன்றவொரு கட்டிடம்.
வந்தான் ஒருவன் வல்லரக்கன் போல

## காலுக்குக் கரும்பொற் கழலணி!

தந்தான் வலதுகால் தண்டைகள் எமக்கே:
அரும்பொன் காலிடல் அபசார மாதலால்
இரும்பினை அணியுமென் றீந்ததைப் போன்றே.
கொண்டதும் அதனைக் கூறு தொன்றும்
அண்டைத் திண்ணையில் அமர்ந்தென் நண்பன்
படுத்தான். யான்சுயம் பாடிக்கொண் டுலாவினேன்.
அடுத்திட மாலை அவனெழுந் திருந்து
"சித்தம் மயங்கித் திடீரெனப் படுத்தேன்.
இத்துணை நேரமும் எதையும் அறிந்திலேன்."
எனவுரை செய்தான் என்மனங் கலங்கிட
"கனவுரை போன்றோய்! காணு ததனைச்
சும்மா இருந்தேன் சுகமா உறங்குதல்
உம்மாண் உடற்களை ஒழிக்குமென் றெண்ணியே.
மயங்கா நின்னுளம் மயங்கிய தென்னில்,
மயங்கிய என்னுளம் மாயுமே" என்றேன்
அக்கணம் ஜெயிலர் அவ்விடம் வந்தெமை
இக்கணம் *ஆஸ்பிற்றல் ஏகுவோம்"என்றான்.
நடந்தேம் மூவரும் நலனிறை டாக்டர்
நடந்ததற் கிரங்கி நன்மொழி கூறி
எம்மின் எடையை எடுத்தனன். பின்னவர்
தம்மாண் மனத்தொடு "தக்கோய்! பாலுமக்
கனுப்புவேம் நன்று அருந்துக" என்றுபின்
அனுப்பினர். பால்மிக அருந்தினேம் இருவரும்.

---

* ஆஸ்பிற்றல் - ஆஸ்பத்திரி.

## சாப்பிடுவதற்குச் சட்டியும் கலயமும் !

திட்டப் படிக்குத் தெரிந்தவன் ஒருவன்
சட்டியும் கலயமும் தயாராக் கொணர்ந்தான்:
குருநாத நண்பன் கோவென் றலறிப்
பருகாது துயருட் பட்டதாக் கேட்டேம்.
செய்தி தெரியவும் தினமெமைக் கண்ட
கைதிகள் ஒருசிலர் கதறி அழுதனர்.
படுத்தியாம் உறங்கினேம். பந்தனை மனைக்கெமை
அடுத்துவந் தெழுப்பி அன்புள இருவர்
நல்கினர் வடைபழம்: நாங்கள் இருவரும்
நல்கிச் சிலர்க்கு நவின்றுகொண் டுண்டேம்.
விடிந்ததும் எமக்கு வேளாளன் ஒருவன்
மடிந்தகேழ் வரகை மண்ணோடு காய்ச்சிய
கூழைக் கொணர்ந்தான். குடியாது கொட்டினேம்.
ஏழைஇரு வர்க்கும் எங்குரு நாதன்
பலகாரம் அனுப்பினன். பருகினேம் நன்று
சிலநே ரத்துள்ளே ஜெயிலர்வந் தழைத்தான்.

## கோயம்புத்தூர்ச் சிறை செல்லல்

கோயமுத்தூர் கொண்டு போவதாச்
சாயங் காலமே சாற்றிடக் கேட்டதால்,
சிவத்தை வணங்கிச் செப்பியும் வழியில்
தவத்துயர் நாதனைத் தரிசனை செய்தும்
கோட்டண்டை வரவும் கோட்டைத் திறந்தனர்.
ஏட்டுமுதல் பெரியவர் எண்ணிலார் வந்தனர்,
வெடிகள் கைக்கொண்டு மிகமிக நெருங்கி
கடிதில்யான் வண்டியில் காலெடுத்து வைக்கவும்.
நண்ணினேன் கோவில்முன். நவின்றவென் மாதுலன்
கண்ணீர் பெருக்கிக் "காண்பதென்" றென்று
'நெருநல் நுமக்குநீர் நிகழ்த்திய படிஅவர்
நெருநலே இவ்விடம் நீத்தனர்" என்றான்.
நன்றென வணங்கி நானவர் விடுத்தேன்.
அன்றுவழி யெங்கும் அழுகையே கண்டேன்.
சடகோபாசாரியார் தங்கிய இடத்தின்முன்
திடனெலாம் நீங்கச் சென்றுகொண் டிருந்தவென்
மைத்துனனைக் கண்டேன். "மயங்கிடேல்"
என்றேன்.

அத்தருணம் வெங்கு வையர் ஆதியோர்
"விரைவினில் உம்மை மீட்டுவோம்" என்றனர்.
விரைவிலென் வண்டி வெகுதூரம் சென்றது.
பாலம் கடக்கவும் பழகியோர் அநேகர்
சாலவும் நெருங்கிச் சார்ந்தனர் என்பின்

## "விடாதீர்! சுதேசியம்"

"விரைவினில் திரும்புவேன்; விடாதீர் சுதேசியம்;
தரை மிசை எதுவும் தருவ ததுவே"
என்றுநான் மொழிந்தேன். எல்லாரும் ஒன்று
"நன்" றெனமொழிந்தனர். நானவர் நீங்கி
ரயிலடிப் போலிஸ் ஸ்டேஷனை நண்ணினேன்.
மெயிலினைப் போலிஸார் விரும்பிஎதிர் பார்த்தனர்.
அங்கும் கூட்டம் அளவற நின்றது.
எங்கும் போலிஸார் இடைவிடா துலவினர்.
ரயில்வண்டி வரவும் நானதில் ஏறி
அயலில்நின் றோரிடம் அனுப்பிவழி இருந்தேன்.
என்னொடு வெள்ளை இன்ஸ்பெக்டர் ஒருவனும்
முன்னர்நான் கண்ட மூன்றுகான்ஸ் டபிளும்
இருந்தனர். என்பின் எட்டிய வண்டியில்
பெருந்திர ளாகப் பெருவுடை மாற்றி
எண்ணிலாப் போலிஸார் இயம்பி இன்பொடு
கண்ணெலாம் என்பின் காட்டி யிருந்தனர்.
புறப்படவும் வண்டி போந்தவன் ஒருவன்
திறப்பட நின்றெற்குச் சில்லரை நல்கினன்.
கங்கைகோண் டானைக் கண்டதும் அங்குளர்
தங்கை குவித்தனர். என்கை குவித்தேன்
மணியாச்சி வந்ததும் வந்தென் நண்பர்
பணியா தென்றனர். "பாரும்நம் சுதேசியக்
கப்பல் என்றும் கதியொடு நடந்திடச்
செப்புவ திஃதே செல்கிறேன்" என்றேன்.
வருந்தினர் மிகவும். "வருந்துதல் விட்டுத்
திருந்திய செயல்களே செய்கஎந் நாளும்"

என்றுநான் வண்டியில் ஏறினேன். நண்பர்
நன்றென மொழிந்தனர் நனைந்தகண் ணுடனே.
மதுரை வந்ததும் வந்தனர் அநேகர்
மதுரக் கவிகள் வந்திடக் கண்டிலேன்.
என்னூர்த் திரவியம் என்னண்டை வந்துநின்
றென்னயாம் செய்வோம் இனியென் றழுதான்.
"அழுதாற் பயனென்? ஆவதே ஆகும்
பழுதுன் காலிற் பட்டதென்?" என்றேன்.
நேர்ந்ததைக் கூறினன். நின்றவர் தமக்கு
நேர்ந்ததைக் கூறியான் நெறியினைத் தொடர்ந்தேன்.
திருச்சி ஜங்ஷனில் திருப்தியா உண்டு
அடுத்த போலிஸ் டேஷனில் அமர்ந்துபின்

## திருச்சியில் மாணவர் வரவேற்பு

வண்டியில் ஏறவும் மாணவர் அநேகர்
அண்டிவந் தென்னுடன் அன்பொடு பேசினர்.
பதிலுரை கூறியான் படுத்துநன் குறங்கிக்
கதியுடன் ஈரோட்டில் கால்சுத்தி செய்து
போத னூரில் புதியன உண்டு
கோதிலாக் கோய முத்தூர் கூடவும்
அநேகர் ஸ்டேஷனில் அவாவியெனை நின்றனர்.
அநேக போலிஸார் அணைநின்று வந்தெனை
வண்டியின் மறுபுறம் வாவென் றிறக்கியோர்
வண்டியில் ஏற்றி வலவெனொடு *சென்றால்
சிறைக்குட் சேர்த்தனர். செப்புவேன் பின்னர்ச்
சிறைக்குள் நிகழ்ந்தவும் தெரிந்தவும் யாவுமே.

* சென்றால்-Central.

## வ. உ. சிதம்பரம் பிள்ளை தற்சரிதம்.

## இரண்டாம் பாகம்

### தோற்றுவாய்.

உலகெலாம் புகழும் நலனெலாம் அமைந்த
காந்திமா முனிவன் ஏந்திய கொள்கையை
நிலனெலாம் பரப்புதற் கவனற் பெயரால்
பத்திரிகை யொன்றை எத்திசையும் செலுத்தும்
† சோக்க லிங்கத் தூயோய், கேண்மோ!

---

* காந்தி-மகாத்மா காந்தி

† சொக்கலிங்கம்-"தினசரி" ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம்

# கோயம்புத்தூர்ச் சிறைவாசம்

கோயமுத் தூர்சார் மாயும் சிறையுள்
சென்றதும் வந்தனன் டிப்டி ஜெயிலர்.
பாளையங் கோட்டைப் பாழ்சிறை யுடைகளை
வாங்கிக் கொண்டு வழங்கினன் அவன்சிறை
மேலுடை யிரண்டும், கீழுடை யிரண்டும்,
குல்லா ஒன்றும் கோவணம் ஒன்றும்,
கயிற்றுப்பாய் ஒன்றும், கம்பளி இரண்டும்.
உடையினை உடுத்தி நடையினில் அவனுடன்
மாதக் கைதிகள் வாழும் நான்காம்
* பிளாக்குச் சிறைக்குப் பெருமையொடு சென்றேன்.
கோணையன் என்ற கோணக்கால் வார்டர் பால்
என்னை ஒப் பித்தே ஏகினன் டிப்டி
அவன் எனைச் சணல்கிழி யந்திரம் சுற்றெனச்
சுற்றினேன். என்கைத் தோலுரிந் திரத்தம்
கசிந்தது. என்னருங் கண்ணீர் பெருகவே.

---

* பிளாக்-அறைத்தொகுதி

# வார்டர் வள்ளல்கள்.

மதியம் சட்டியும் கலசமும் வந்தன ;
உணவினை அளிப்பவன் உவப்பொடு வந்தான்.
* கேப்பை ரொட்டியும் கீழதன் வைத்தோர்
கோதுமை ரொட்டியும் குழம்பும் தந்தே
" உண்மின் கோதுமை ; ஒழிமின் கேப்பை "
என்றவன் சொல்லி ஏகினான். யானும்
அவ்வா றுண்டேன். யந்திரம் சுற்றினேன்.
இரவில் இரண்டாம் †யாமம் சிவகாசி
ஆறுமுகம் பிள்ளையும், அவனொடு சேர்ந்து
சிவகாசிக் கலகத்தில் தெண்டனை அடைந்த
வடுகு ராமனெனும் மாண்பல நிறைந்த
சீனியர் கான்விக்டு வார்டரும் சிலரும்
வந்தனர் ; வணங்கினர் : வடைபழம் வழங்கினர்.
"உம்முடைய ஆள்கள் ஒருசிலர் ஈங்குளோம்
இந்த பிளாக்கிற் கேகற்க என்று
செப்பி யுள்ளான் ‡ஜெயிலர் மிஞ்சேல்
ஒவ்வோர் இரவினும் உம்மையாம் காண்பேம்
விடியற் காலம் ரவை உப்பு மாவும்
மதியமும் மாலையும் ரவைநற் றோசையும்
அனுப்புவோம் அருந்துமின் அறியா மால்பிறர் "

* கேப்பை - கேழ்வரகு.
† யாமம் - சாமம், நடுநிசி.
‡ Jailer Mr. Minchel.

## சிறையில் செக்கிழுத்த வைபவம்!

என்றுசில சொல்லி ஏகினர் அவர்தாம்.
சொல்லிய வண்ணமே செய்தனர் அவரும்.
அவருரைப் படியே அருந்தினேன் யானும்.
இரவில் வந்தவர் இன்புறப் பேசுவர்;
பண்டம் வழங்குவர்; பாரதம் பாடுவர்
திங்கட் கிழமை ஜெயிலர் என் கைத்தோல்
உரிந்ததைப் பார்த்தான். உடன் அவன் எண்ணெய்
ஆட்டும் செக்கினை மாட்டிற்குப் பதிலாப்
பகலெலாம் வெயிலில் நடந்து தள்ளிட
அனுப்பினன், அவனுடை அன்புதான் என்னே!

## கைதிகளின் கரையிலாக் கருணை.

செக்கினை என்னொடு சேர்ந்து தள்ளியோர்
“நாங்களே தள்ளுவோம். நமன்கள் போன்ற
சூப்பிரண் டெண்டு காட்ஸனும் ஜெயிலரும்
வருங்கால் எம்முடன் வந்திது தள்ளுமின் ;
போய்நிழல் இருந்து புசிமின் எள்ளும்
வெல்லமும் ” என்றே விளம்பினர் அன்பொடு.
செய்தேன் யான்அவர் செப்பிய வண்ணம்.
ஒருநாள் டாக்டர்பால் சிலகை திகளுடன்
போய்வா என்றான் ; தீநிகர் ஜெயிலர்.
“சிரிக்கிறாய். என் ? ” னெனச் செப்பினான் டாக்டர்.

## சிரித்தால்கூடச் சிறை.

"அழச்சொலு கிருயா? அதுசெயேன்" என்றேன்.
சூப்பிரன் டென்டுக்குச் சொல்லிய டாக்டர்
பேப்பரில் எழுதிப் பிழையென அனுப்பினான்.
அவனெனை விளித்துத் "தவறுநீ செய்தது;
இருமுழு வாரம் அபராதம்" என்றான்.
* திங்கள் ஒன்றில் சென்னைஜக் கோர்ட்டில்
செய்த அப்பிலில் திருத்தமும் ஒழுக்கமும்
தேசாபி மானமும் சேர்ந்தநல் ஜட்ஜ்
சங்கர நாயர் தகுதியில் †பின்னியின்
தீர்ப்பினை ‡சஸ்பென்டு செய்தறி வித்தார்.
தொலைந்தது வேலை. சொந்த உணவும்,
சொந்த உடையும், சொந்தப் படுக்கையும்
வந்தன. கொண்டவை மகிழ்வுடன் இருந்தேன்;
விசாரணைக் கைதிகள் மேவும் பிளாக்கில்
ஜெயிலர் வந்து "நும் தேக நிலைக்கு
வேலை செய்தல் மிகநலம். ஆதலால்
வேலை செய்யநீர் விரும்புகின் றீரா?"
என்று வினவினன். "யானிவண் வேலை
செய்திட வந்திலேன்; செய்திட விரும்பிலேன்"
என்றேன். என்அறை பூட்டியவன் ஏகினன்.

---

* திங்கள்-மாதம்
† பின்னி. A. H. Phinhey.
‡ சஸ்பெண்டு-நீக்கி. Suspend.

# தமிழ்த் தொண்டு.

தீய ஜெயிலர் செய்ததைத் திங்கட்
பார்வையில் டாக்டர்பால் பகர்ந்தேன். அவன்என்
அரங்கினைப் பூட்டல் ஆகா தென்றும் என்
உரந்தனைக் காத்தற் கொவ்வொரு காலையும்
மாலையும் ஒவ்வொரு மணிநடந் துலாவும்
வேலையைச் செய்திட வெளிவிடல் வேண்டும்
என்றுமோர் உத்தர வீந்தான். ஜெயிலர்
பொன்றி யதுபோல் குன்றி அடங்கினன்.
தினம்போ துதித்துமேல் திசைசெலும் வரையில்
* "மனம்போல வாழ்வு" வரைந்து முடித்தேன்
என்மனை வியும்அவட் கிளையவன் பிச்சனும்
என்னிரு மகாருடன் என்சிறை வந்தே
ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மணிதான்
செவ்விதில் என்னை டிபுடி ஜெயிலர்
ஆபீஸ் அரங்கினில் அன்பொடு கண்டு
பேசிஇன் புற்றனர் பேசிய பொழுதென்
மக்களை எடுத்துயான் முத்தி முகர்ந்தும்,
மடியினில் வைத்தவர் மழலைச்சொற் கேட்டும்,
பிச்சன் கொடுத்த பிஸ்கத் கொடுத்தவர்
உண்டிடக் கண்டும் உவந்திருந் தேனே

---

* "மனம்போல வாழ்வு"—ஆங்கில அறிஞர் ஜேம்ஸ் ஆலன் எழுதிய "As a man thinketh" என்ற நூலின் மொழிபெயர்ப்பு.

## ஜெயிலர் குத்தப்பட்டது.

* டவர்எனும் ஆபீஸ்க் கொருநாட் காலையில்
சென்றேன். அங்கெனை ஸீனியர் கான்விக்டு
வார்டர்முன் சொல்லிய வடுகு ராமன்
சிரமேல் இரண்டு கரங்களைக் கூப்பி
வணங்கினான். கேற்றில் வந்த ஜெயிலர்
அச்செயல் கண்டு மிக்கக் கனன்று
டவர்வந் ததுவும் சாற்றிய ராமன்பால்
''எவரை நீஇவண் இறைஞ்சினை?'' என்றான்.
''எவரையும் யான்இவண் இறைஞ்சிலேன்'' என்று
தவறிலா ராமன் சாற்றினன். ஜெயிலர்
என்னை அழைத்தான். மன்னினேன் யானும்.
''இவன்தான் நின்னை இறைஞ்சி னனா?''
என்றெனை வினவினன். ''எல்லாரும் என்னை
என்றும் இறைஞ்சு கின்றனர். யானோ
இவன்இறைஞ் சினதைக் கவனித்த தில்லை''
என்று மொழிந்தேன். நின்றஅச் ஜெயிலர்
''சென்றிடு நின்னறை'' என்று கூறினன்.
''நன்''றெனச் சொல்லிச் சென்றேன் என்னறை.
பின்னர் ஜெயிலர் மன்னிய ராமன்
முன்னர் அனேகர்வான் மன்னிடச் செய்தவன்
என்பதை மறந்தும், வன்பொறை இழந்தும்,
''அவனைஎக் கைதியும் மதியா வண்ணம்
தவறுளன் என்று தனிஅறை வைத்துளேன்
அவனைநீ இங்ஙனம் அடுத்துநின் றிறைஞ்சின்

---

* டவர் ஆபீசு - சிறைக்காரியாலயம்.

எவனினி அவனை இறைஞ்சா தொழிவன் ?
அவனை இனிநீ அவ்விதம் இறைஞ்சிடின்
தவறு துனக்குச் சப்பாத் தடிதான் ''
என்று மொழிந்தான்! இம்மொழி கேட்டதும்
' நன்றுநன்'' றென நவின்றுநம் ராமன்
சென்றனன் உள்ளம் கன்றியே மிகவும்.
சிறைசார் கைதியுள் திறமிகு மூவரை
மறைவினில் விளித்து மற்றவர் தம்பால்
நடந்ததைக் கூறி விடந்தனை ஒத்தபாழ்
ஜெயிலர், சூப்பிரண் டெண்டு, டாக்டர்
இவர்மூ வரையும் மறுநாட் பார்வையில்
கொன்றிட வேண்டும் என்றனன் ராமன்.
சரியெனக் கூறினர் சார்ந்தஅம் மூவரும்.
அரிவாள் மூன்றவர்க் களைத்துக் கொடுத்தான்
அந்தச் செய்தியை ஆறுமுகம் பிள்ளை
அந்த இரவினில் அறிந்தான் ; ராமனை
விளித்துப் '' பிள்ளையை மேவா தெதுவும்
இயற்றல் பிழை''யென் றியம்பிஅது நிறுத்தினான்.
அடுத்த ஞாயிறில் அறைந்த மூவரும்
அடுத்தனர் என்னறை, அனைத்தும் கூறினர்.
'' அனுமதி தருக ஐயா '' என்றனர்.
மறுமொழி சொலாது '' மற்றவர் தம்பால்
சூப்பிரண் டெண்டும் சொல்லிய டாக்டரும்
கைதிகள் தம்மைக் காப்ப தல்லது
செய்த துண்டோ தீங்குகள் '' என்றேன்.
செய்த தின்றெனச் செப்பினர் மூவரும்.

## சிறைக்குள் கலகம்

'' அப்படி யானால் அவரைக் கொல்வதேன் ?
செப்பிய தீய ஜெயிலர் வேலைவிட்
டேகும் படிசெயல் போதுமே '' என்றேன்.
'' ஆமெனக் கூறி மூவரும் போயினர்.
அடுத்த ஞாயிற்றில் அடுத்ததும் இருமணி
ஜெயிலர் அரங்கு தெறுகள மாயது ;
டேஞ்சர் பிகிலும் டேஞ்சர் பெல்லும்
ஒலித்தன. கைதிகள் உடைத்தனர் பூட்டை.
ரிஸர்வ் போலீசார் நிமிஷம் வந்தனர்.
சுவர்மேல் ஏறிய துட்டரைச் சுட்டனர்.
ஒருவன் உயிர்நீத் துடன்கீழ் வீழ்ந்தான்.
பலரைப் பிடித்துச் சிறையுள் அடைத்தனர்.
பிரேதம் போல ஜெயிலரைத் தூக்கி
அனேகர் சென்றனர் ஆஸ்பத் திரிக்கே.
கண்டேன் யானும் கொண்டேன் உவகை.
அன்றிர வினில்அச் சென்ட்ரல் ஜெயிலின்
கைதிகட் கெல்லாம் கற்கண்டும் பழமும்
வழங்கினர் கான்விக்டு வார்டர் மகிழ்ந்தே.
எலாரும் கொண்டுண் டின்புற் றிருந்தனர்
பொலாத ஜெயிலர் போயினன் என்றே.

---

டேஞ்சர் பிகில்-அபாயச்சீழ்க்கை:
டேஞ்சர் பெல் - அபாயமணி.

# கலகஞ் செய்ததாகக் கைதிகட்கு சிறை!

ஜெயிலர்ஆஸ் பத்திரி சிகிச்சையில் இருந்தான்,
ஜெயிலர் ஆயினன் டிப்டி ஜெயிலர்.
ஜெயிலை உடைத்துச் சென்றதால் பலரும்
ஜெயிலரைக் குத்திய தாக மூவரும்
போலீ ஸாரால் சார்ஜ்செயப் பட்டனர்.
சிறையுள் இருந்துயான் மறைவிலென் நண்பன்
தப்பறி யாதநற் *சுப்பிர மணிய
வள்ளல் தனக்கு வரைந்தெடுத் தனுப்பி
எதிரிகள் †டிபன்ஸை ஏற்று வக்கீலாய்
நடாத்தச் செய்தேன். நண்பனும் ஸ்ரீநி
வாஸ வள்ளலும் வக்கிலாய் நடாத்தினர்.
சிறையினை விடுத்த எதிரிகள் பலர்க்கும்
ஒன்றுமுதல் இரண்டு வருஷக் கடுங்காவல்
மேஜிஸ் டிரேட்டு விருப்பொடு வழங்கினன்
அப்பீல் செய்திட செப்பிய நண்பர்க்
கெழுதினேன். அவரும் ஈந்தனர் அப்பீல்
செஷன்ஸ் ஜட்ஜி சிரித்தத் தீர்ப்பினை
ஒன்றிரண்டு மாதமா உறுதி செய்தனன்.
ஜெயிலரைத் தாக்கிய மூவரும் செஷன்ஸ்குக்
கமிற்று செய்தே அனுப்பப் பட்டனர்

---

* சுப்பிரமணியன்-கோயமுத்தூர் நகரசபை அங்கத்தினரும், தமி
ழறிஞரும் வக்கீலுமான சீ. கே. சுப்பிரமணிய முதலியார்.

† டிபன்ஸ் - எதிர் தரப்பு வாதம்.

## அப்பீலில் தண்டனை குறைவு

சென்னைனையைக் கோர்ட்டில் என்னுடை அப்பீலில்
தரமுயர் வெள்ளை ஜட்ஜுகள் இருவர்
பின்னி தண்டனை மன்னுக என்றும்
ஆனல் சிவத்தைத் தூண்டிய தற்கோர்
ஆறு வருஷம் அந்தமான் தீவும்
நான்மொழிந் ததற்கு நான்கு வருஷம்
அந்தமான் தீவும் அருளுடன் அளித்தனர்.
உடனே ஜெயிலர் திடனுறச் செக்கினைத்
தள்ள அனுப்பினன். தள்ளினேன் சிலநாள்
முன்னர்யான் மொழிந்த தன்மைப் படியே.

# சிறைக்கலகம்பற்றி சிதம்பரம் சாட்சியம்

செஷன்ஸில் மூவரின் டிவன்ஸை நடாத்தினன்
செப்பிய நண்பன் ஸ்ரீனி வாஸன்.
பங்கமில் யானும் அங்கவர் பக்கம்
சாக்ஷியாச் சென்று "ஸூப்பிரண் டெண்டு
படமே பிடிக்கும் கடமையே பூண்டுளன் ;
ஜெயிலரோ நாளும் ஜெயிலை ஆள் கின்றனன்,
அவன்கொடுஞ் செயல்கள் அறையவொண் ணாதவை;
பழுத்த இலையும் புழுத்த காயும்வெந்
நீரிற் சேர்த்து வார்க்கிறான் குழம்பென ;
கைதிகள் மொளிகளில் கம்பால் அடிக்கிறான் ;
அதனாற் கலகம் ஆயிற்" றென்றேன்.

# சர்க்கார் வக்கீலுக்குச் சாட்டை !

பப்ளிக் ப்ராஸிக் கூட்டர் "சிறைநுமக்
கெப்படி யிருக்கிற" தென்று வினவினன்.
"சிலநாள் நீயவண் சென்றமர்ந் திருந்தால்
நலமெலாம் காண்பாய் நன்று" யென்றேன்.
கோர்ட்டில் இருந்தவர் குலுங்கச் சிரித்தனர்.
கோர்ட்டி லிருந்தியான் கொடுஞ்சிறை சென்றேன்.
சூப்பிரண்டெண்டு, "சொன்னாய் சாக்ஷியம்;
ஏற்படு வனவெலாம் இனிக்காண்" என்றான்.
"காணவே வந்துளேன்; காண்கிறேன்" என்றேன்
அடுத்த திங்கட் பார்வையில் "இவற்குக்
கடுத்த தனிச்சிறை கொடுத்துவை என்று
சிகிச்சை முடிந்து திரும்பிய ஜெயிலர்பால்
துடித்துச் சொன்னான் சூப்பிரண்டெண்டு;
அவன்எனைத் தனிச்சிறை அனுப்பினன். பின்னர்,
செக்குவே லைக்கிவன் செல்வதால் அங்குள
கொடியகை திகளிவன் மொழிகளைக் கேட்டுமுன்
போலக் கலகம் புரியினும் புரிவர்
ஆதலால் இவன்தன் அரங்கினில் இருந்தே
நூலை முறுக்கும் வேலையைச் செயும்படி
செய்" எனக் காட்ஸன் செப்பினன் மிச்செல்பால்.
அவன்யான் தங்கிய அரங்கிற் கடுத்த
தனியரங் கொன்று தந்ததிற் பகலில்
ராட்டினம் வைத்து நூல்முறுக் கென்றான்.
மூன்றுநூல் சேர்த்து முறுக்கிக் கொடுத்தேன்.
அத்தனி அரங்கில்யான் அமர்ந்தகா லத்தில்
"அமிர்த பஸா"ரும் தமிழ்"மித் திர"னும்
'ஹிந்து"வும் நாள்தொறும் வந்தன மறைவில்.
அவையும் தமிழ்நூல் ஆங்கில நூல்களும்
நவையறக் கற்றேன்: நற்றவம் புரிந்தேன்

## ‘செய்யேன், தோட்டிவேலை கொல்லினும்’

அந்நாள் ஜெயிலர் அழைத்தெனைத் தனது
வெந்நா கொண்டு விளம்பினன் “ வார்டர்
இரவிலுன் அரங்கில்நீ தருகிற உன்னுடை
மூத்திரம் சேர்ந்தமண் பாத்திர மதனை
காலையில் எடுக்கும் வேலையைச் செய்யநீ
மறுக்கிற தாகவும் மற்றவ ரும்மதால்
மறுக்கிற தாகவும் வழுத்தினன் ” என்றான்.
“ செக்கு வேலை செய்தல்போ தாதெனக்
கக்கூஸ் வேலையும் செயச்சொலு கிறாயா ?
செய்யேன் எதுநீ செய்யினும்” என்றேன்
நள்ளிர வொன்றில் ஜமேதார் வார்டர்
‘கள்ளத் தனத்தில் கழறிய ‘ஹிந்து’’வும்
என்மனை கடிதமும் இனியதின் பண்டமும்
என்னிடம் கொடுக்க எடுத்து வருகையில்
வழியில் ஓர்ஹெட் வார்டரை வைத்து
பழியுறப் பிடித்திடப் பண்ணினான் ஜெயிலர்
மறுநாட் காலையில் வந்தான் என்னிடம்
தெறுவாள் போலச் சிவந்த கண்ணொடு
சூப்பிரண் டெண்டு கூப்பிட் டென்னிடம்
ஈந்தான் படியென என்மனை கடிதம்
ஈந்ததும் படித்தேன்; “ இதுஉன் மனைவியின்
கடிதம் ; இதிலுன் கடிதம் வந்ததா
எழுதி யிருக்கிற தேநீ கடிதம்
எழுதிய தென்னோ எனக்கறி வியாமல் ”
என்றெனை வினவினான் “ நன்று, நீ சொன்னாய்;

என்னுடை நிருபம் மன்னிய தாக
என்மனை பெயரால் எவனும் எழுதலாம்.
எப்படி யான் இதற் குத்தர வாதி ?
செப்புக ஐயா, தெளிந்துநீ' என்றேன்
" உன்னைத் தூக்கலிஃ தொன்றே போதும் ;
என்னுடை முடிவிதே'' என்று மொழிந்தான்.

* ஹெட்வார்டர் - தலைமைவார்டர்.

## வார்டருக்குத் தண்டனை

"பாக்கிய வசத்தால் தூக்கலீ ஜட்ஜிலை"
என்று மொழிந்தேன்: நின்றவன் போயினான்.
"ஹிந்து" முதலிய கொண்டு வந்த
வார்டர்மேல் தொடர்ந்த கேஸ்தனில் மூன்று
மாதம் கடுங்காவல் வழங்கப் பட்டது.
வெயிலில் கல்லுடை வேலையை அவற்கு
ஜெயிலர் நல்கினான்; செய்தான் அவனும்.
பெருந்தொகை யொன்று பேணி அளித்தேன்;
கருந்தனம் கொண்டவன் கடைவைத்துப் பிழைத்
ஓர்தினம் ஜெயிலர் சூபிரன்டெண்டுடன் [தான்
வந்தான் என்அறை வந்ததும் அவன்பால்
"வேலை படிக்க வாரம் ஒன்றுநாம்
தருதலும் கைதிபின் *டாஸ்கு தருதலும்
வழக்கே இவன்ஒரு மாத மாகியும்
டாஸ்குப் படிநூல் தரவிலை" என்றான்.
"தீர்ப்பிங் கெனக்கு ‡டிரான்ஸ்போர்ட் டேஷன்
கடுங்காவல் அன்று; கடுந்தொழில் செய்யேன்"
என்றேன்: ஜெயிலர்பால் "இனிநீ அவனிடம்
ஒன்றும் சொல்லேலென உரைத்தனன் காட்ஸன்.
ஜெயில்-இன்ஸ் பெக்டர் ஜெனரல் வந்தான்
ஜெயிலரைக் குத்திய செயற்கும் அன்று
ஜெயிலை உடைத்த செயற்கும் காரணம்

---

* டாஸ்கு-வேலை. Task.

‡ டிரான்ஸ் போர்ட்டேஷன்-தீவாந்திர தண்டனை. Transportation.

என்னிடம் வினவினன். இயம்பினேன் தெரிந்ததை.
அவன் உயர் புத்திசாலி யாகையால்
ஜெயிலர் எனக்குச் சிறுமை விளைத்ததே
கலககா ரணமெனக் கண்டனன்: காட்ஸன்பால்
ராஜியக் கைதியை நயமா நடாத்தின்
ராஜியாய் நம்மொடு நன்று நடப்பர்.

அவர்க்குச் சிறுமை அளிப்பின் அவரும்
நமக்குச் சிறுமை நல்குவர். நம்மால்
ஜெயிலை நடாத்த முடியா மற்போம்.
ஆகலான் அவனைநீ அன்பொடு நடாத்து.
வேலை யென்ற பேருக் குன்னுடை
ஆபீஸ்க்கு வேண்டும் *பாரங் களையே
†கம்போஸ் செய்யக் கழறுக" என்று
சொல்லி ஏகினன். சூப்பிரண்டெண்டுயான்
நூற்கும் வேலையை நொடித்தச் செழுத்துக்
கோக்கும் வேலையைக் கொடுத்தான் அன்புடன்.
அதுமுதல் ஜெயிலுக் கரசன் நானே!

---

* பாரங்கள்-அச்சிட்ட விண்ணப்பததாட்கள். Forms.

† கம்போஸ்-அச்சுக்கோத்தல்.

*

# ஜெயிலர் செய்த அக்கிரமம்.

ஒவ்வொரு காலையும் ஒவ்வொரு மாலையும்
என்னுடை அரங்கிற் கேகி அன்புடன்
என்னுடை உணவும் இதரகா ரியங்களும்
விசாரித்து வந்தனன் வெள்ளை காட்ஸன்.
அந்நாள் தனில்அவன் சென்னைமா காணச்
சிறைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாய்ச் சென்றனன்.
சிறையின் டாக்டர் சிறையின் சூப்பிரண்
டெண்டாய் *ஆக்டிங் செய்தான். ஜெயிலர்
தன்னைக் குத்தமுன் மன்னிய மூவரில்
இருவரை அடித்தான் மருசிறை கைதியால்.
உடனென் தந்தைக் குடனவண் வரும்படி
தந்தி அனுப்பிச் சாற்றினேன் மறைவில்.
எந்தை வந்தனன்; என்னைக் கண்டனன்.
ஜெயிலர் செயலெலாம் செப்பி அவன்எனை
ஜெயிலின் கைதிகள் சிலரைத் தூண்டி
அடிக்க முயல்வ தாகவும் அதற்குப்
பெரிய கலெக்டர்பால் பிராது கொடுக்கவும்
உரிய தந்தைபால் உரைத்தேன். அதனைச்
செவியுட் கொண்ட படி ஜெயிலர்
நொடியில் ஜெயிலர்பால் நுவன்றனன். அவன்தான்
சூப்பிரண் டெண்டா ஆக்டிங் செய்த
டாக்டர் இடத்தே சாற்றினன். அவன்எனை
விளித்து, "நின தந்தைபால் விளம்பிய துண்மையா?

* ஆக்டிங்-பதிலாக வேலைப் பார்த்தல்.

ஒளித்திடா துரை" என, "உண்மை அஃ" தென்
றேன்.

"யானிவண் இருக்கிறேன்; எதற்கும்நீ அஞ்சேல்;
பாலுஞ் சோறும் பரிந்துனக் களிக்கிறேன்;
பிராதுவேண் டாமெ"னப் பிதாவிடம் சொல்லிப்
பிராதை நிறுத்தெனப் பேசினான் அவனும்.
தந்தைஊர் சென்றனன் தைரியம் சொல்லி.
மாலைமுதல் டாக்டர் வழங்கினன் சோறுபால்;
மாலையான் உண்ணுங்கால வந்துதன் மனையுடன்
என்னிடம் பலபல இன்புறப் பேசினான்.
பின்னவன் என்னைப் பேணியே காத்தான்.
ஆக்டிங் விட்டு காட்ஸனும் வந்தான்.
தனியே சமைத்தெற்குச் சாப்பா டளித்த
பார்ப்பனக் கைதிதன் ஊர்ப்புறம் சென்றான்.
செய்தி அறிந்ததும் ஜெயிலர் மிர்ரேல்
கைதி ஒருவனைக் கால்முகம் கழுவச்
செய்து *விபூதி சென்னியில் அணிந்து

விபூதி-திருநீறு' சைவ மதச்சின்னம்.

# சிறையில் ஓர் வேடிக்கை

மெய்யில் வெளுத்த வேஷ்டி உடுத்துக்
கஞ்சியும் உணவும் கொண்டுவரச் செய்தான்.
ஜாதியே தங்கள் பாரேன் எனினும்,
தனியே சமைத்த *புனித உணவைக்
கொள்ளயான் விரும்பிக் கொண்டுவந் தவன்பால்
"விள்ளடா உன்னூர்; விளம்படா உன்குலம்"
என்றேன். அவன்தான், "என்னூர் மதுரை;
என்குலம் சைவம்" என்றான். "ஜாதி
என்னடா? என்றேன். என்றான் 'முதலி.'"
"என்னடா முதலிநீ" என்றேன். விழித்தான்.
"பார்ப்பான் அல்லது பாண்டிவேளாளன்
சாப்பா டாக்கித் தந்தால் உண்பேன்
என்று ஜெயிலர்பால் இயம்"பெனச் சொன்னேன்.
நன்றெனச் சென்றான். நான்உணா திருந்தேன்
மூன்றுநாள் இங்ஙனம் முடிந்தன. காட்ஸன்
தோன்றினன் என்முன்; சொன்னேன் நடந்ததை.
"ஆறுமுகம் பிள்ளை யாரிடமும் உண்கிறான்.
கூறுக நின்னுடை குலந்தான் மேலோ?"
என்றான் காட்ஸன். நன்று அவன்சொல்
கேளாத தாலவன் கிட்ட நெருங்கினேன்
ஓடினன் அப்ஸ்டெயர்ஸ். "உடனே வெளிநின்று
பார்ப்பான் ஒருவனைக் கூப்பிட் டுணவினை
ஆக்கி அளித்தவன் சாப்பிட்ட பின்னர்க் .

‡ புனித உணவு-சைவ உணவு.

கூறெ’’னக் கூறினான்; காட்ஸன் ஜெயிலர்பால்.
அரைமணிக்குள்ளே அந்தணன் ஒருவன்
புரையிலா உணவு பொள்ளெனக் கொணர்ந்தான்.
உண்டேன். அவன்பால் உண்டேன் சிலநாள்.
பின்னர் வந்த பிராமணக் கான்விக்டு
மன்னி நின்றே வழங்கினான் உணவு.
நன்றா உண்டு நின்றேன் அங்ஙண்

'உன்வேலை செய்யவோ உள்ளேவந்தேன்?'

காலை ஒன்றில் காட்ஸன் விளித்து''நீ
கான்விக் டாபிசர் வேலை பார்ப்பின்
வருஷம் ஒன்றிற்கு மாதம் மூன்று
கழியும் ; உறவினர் காண்டலும், கடிதம்
எழுதலும், பெறுதலும் அனுமதிக்கப்படும்
மாதம் ஒருமுறை வேலையும் இல்லை;நல்
உடையும் அரிசி உணவும் பெறுவாய்.
கான்விக் டாபீசர் ஆகின் ருயா ?''
என்று வினவினன். ''நன்றுநீ சொன்னது ;
ஆனால் யான்சிறை ஆள்கைக் குதவிட

## புலிக்கு பூனை புத்தி சொல்வதா ?

வந்திலேன் இங்கு; மற்றவ் வாள்கைக்
கிடையூறு செய்திட இங்கியான் வந்தேன்;
ஆதலால் கான்விக் டாபீசர் ஆகேன் ''
என்று மொழிந்தேன். என்னவும் காட்ஸன்
'' நன்று மொழிந்தாய் '' என்றான் சிரித்தே.
ஒருநாள் மாலையான் மருவிய பின்சிறை
மிச்சேல் வந்து விளம்பினான் புத்திகள் !
மிஞ்சி வளர்ந்தது வெகுளி என்பால்.
'' நீயோ புத்தி நிகழ்த்து கின்றவன் ?
வாயை மூடடா மதியிலி. உனக்கும்
உன்னப் பனுக்கும் உன்சூப் பிரண்டெண்டு
உன்னையாள் கவர்னர் மன்னா தியர்க்கும்
புத்திகள் கூறும் பெற்றிமை யுடையேன் ''
என்றுபல பகர்ந்தேன். சென்றனன் அவனும்;
சூப்பிரண் டெண்டுபால் சொல்லினன் எல்லாம்.
மறுநாள் அவனெனை வருத்தி ஜெயிலராச்
சிறுவார்த் தைகள்நீ செப்பிய தற்கா
இரு *நெடு வாரம் அபராதம் என்றான்.
ஒரு ‡சிறு வாரத் துத்தர வடுத்தது
கண்ணனூர்ச் சிறையையான் மன்னும் படிக்கே.

---

* நெடு வாரம்-பக்ஷம்-பதினைந்து நாள்

‡ சிறு வாரம்-வாரம்-ஏழு நாள்.

## கண்ணனூர்ச் சிறை வாசம்.

காலை யொன்றில் கழறிய ஜெயிலர்
சாலவும் வேகமாச் சார்ந்தென் அரங்கினை
"வா"வென் றழைத்தான். காவென் றிறைவனைத்
தொழுதவன் பின்னே துரிதமா நடந்தேன்.
பழுதிலா கேற்றுப் பக்கம் சென்றதும்
வெளியில் ரிசர்வுப் போலீஸ் வெள்ளை
ஒளி இன்ஸ் பெக்டர் ஒருவனும் கறுப்புக்
கான்ஸ்டபின் இருவரும் தோன்றினர் என்முன்.
இட்டுச் செல்லலாம் என்றனன் ஜெயிலர்
தொட்டு விலங்கினை இட்டனர் என்கை.
நடந்தேன் ரயில்வே ஸ்டேஷன் நண்ணினேம்;
கடந்தே கேற்றினை அடைந்தேம் டிரெயினை.
கண்ணனூர்ச் சிறையினை நண்ணுதற் காக
என்னை அழைத்தங் கேகுவ தாகக்
கூறினர் மூன்று போலீ ஸார்களும்.
கண்ணனூர்ச் சிறையினை நண்ணினேம் மாலையில்.
கோரன் டைன்பிளாக் கோரமோர் அரங்குதான்
அளிக்கப் பட்டதென் வசிப்பிற் காக.
அந்த பிளாக்கின் அழகெஜ் ஜெயிலின்
எந்த பிளாக்கிலும் இல்லையென் றறையலாம்.
நடுவில் தோட்டம்; நான்கு பக்கமும்
தொடுமரங் கொவ்வொரு டஜனும்; அவைமுன்
நன்னெடு விராந்தா நான்கும் பின்புறம்

‡ கோரன்டைன் பிளாக்-Quarantine Bloc

நாலு பக்கமும் காலி நிலமும்
மூலை யொன்றில்நீர் மொள்ளும் கிணறும்,
மூலைமற் றொன்றில் மொய்ம்பார் வழியும்,
காலிநிலம் ஒன்றில் கக்கூஸ்கள் பலவும்,
வேலைசெய் கைதிக்கு வேம்பின் நிழலும்,
நடுத்தோட் டத்தில் வடிவிலாக் குரோட்டன்
செடிகளும் நன்மணம் தேனொடு வீசும்
முல்லை பிச்சி மல்லிகை ரோஜா
அல்லும் பகலும் அலரும் செடிகளும்
நிறைந்திருந் தனகாண், நிலவுல கத்திலே
சுவர்க்கம் இதுவெனச் சொல்லும் படியே.
அந்த பிளாக்கை அடைந்ததும் எனக்கு
வந்த அதிர்ஷ்டம் என்றுளம் கருதினேன்.
நஞ்சினை ஒத்த விஞ்சுக் கலெக்டர்
சிறைக்கெனை அனுப்பிக் குறைத்த மறுநாள்
திருநெல் வேலியில் தீயிட்ட கேஸ்களில்
வருஷத் தீர்ப்புகள் வழங்கப் பெற்ற
நலமார் சங்கர நாராய ணன்முதல்
பலரவண் இருக்கும் பான்மையும், அவர்அச்
சிறையிற் புகுந்த தினத்தில் டிப்டி
ஜெயிலர் கைதிகள் சிலரால் அவரைக்
கம்புகொண் டடித்த வம்புகள் பலவும்
கேட்டுளம் கொண்டு வாட்டமிக வுற்றேன்.
சைஸ்எனும் ஜெயிலர் நல்கினன் தும்பு
‡ சைஸ்செயும் வேலையைத் தங்களற் களித்த
அரங்குகள் ளிருந்தே உரங்கொள அந்த
வேலையைச் செய்தேன். மேலைநாள் கோவைச்

‡ சைஸ்செய்தல்-ஒழுங்கு படுத்தல், Size.

## சிறையதிகாரிகள் செய்த சிறப்பு.

சிறையில்யான் இருந்த இரண்டரை வருஷமும்
மறைவிலூரர் நின்றெல்லாம் மகிழ்ந்தெனக் களித்த
இளையான் என்னும் †இலக்கு மணன்தான்
களையாது வந்தான் கண்ணனூர் தனக்கு.
குணபதி யாகிய கணபதி பிள்ளைபால்
வேண்டிய வெல்லாம் வேண்டி எற்களிக்க
ஏற்பாடு செய்தெனக் கெழுதிச் சென்றான்.
பேப்பரும் பிறவும் பெற்றேன் பின்னர்.
பலநல் வார்டரும் டவர்ஆபிஸரும்
பழக்க மாயினர்; பண்டங்கள் நல்கினர்
வழக்கப் படிநிதம் மரியாதை செய்தனர்.
தும்பு வேலையைத் தொலைத்தச் செழுத்துக்
கோக்கும் வேலை கொடுக்கப் பட்டது.
ஓரிர வினிலே ஆறிரு மணிக்கென்
அரங்குள் யான்நன் குறங்குங் காலவண்
செறிந்து மிஸ்டர் சிதம்பரம் பிள்ளையென்
றறைந்த சத்தமொன் றனேக தடவை
கேட்டு விளித்துப் பார்த்தேன். அரங்குமுன்
சிறையின் ஜூனியர் சப்அஸிஸ்டெண்டு
சர்ஜன் நின்று சௌக்கியம் உசாவிக்

---

† இலக்குமணன்-கோ. அ. இலக்குமண பிள்ளை.

கலெக்டர் ஆஷைவைத் தெரியுமா? என்றான்.
" நன்றாத் தெரியும்" என்றேன். "எப்படி?"
என்றான். "யான் இவண் ஏகிய தற்கும்
தூத்துக் குடியில் தோன்றிய "சுதேசிக்
கப்பல் கம்பெனி" செத்தொழிந் ததற்கும்
அவன்கா ரண"மென் றறைந்தேன்." ஒருவன்
அவனை நேற்று மணியாச்சி ஜங்ஷனில்
சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டுச்
செத்தான்" என்றான். "நல்லதோர் செய்தி
நவின்றாய் நீநலம் பெறுவாய்" என்றேன்
உனக்கிவ் வருஷக் * கரோனேஷனில்
விடுதலை இலையெனப் பகர்ந்தான், "விடுதலை
என்றுமில் லெனினும் நன்றே" என்றேன்.
தூத்துக் குடியின் றோட்டிய கப்பல்
எனது சொந்தம் எனவும், யான் ஒரு
கோடி ரூபா தேடிவைத் திருப்ப
தாகவும் எவனோ டவர்ஆ பீஸர்பால்
சாற்றினன், அதனைக் கேட்டதும் அவன்தான்
என்னிட மிருந்து பொன்னிதம் பறிக்க
ஆசை கொண்டே வேசைபோல் என்பால்

* கரோனேஷன்—பட்டாபிஷேகம் (முடிசூட்டு விழா)

## டவர் ஆபீஸரின் எச்சில் ஆசை.

தினமும் வந்து சிரித்துப் பேசி
தின்பன கொடுத்துப் பண்புகள் செய்தான்.
சிறிது சிறிதாச் சிலநாள் கொடுத்தேன்.
பெரிது பெரிதாப் பெறஅவன் விரும்பி
ஜெயிலர்பால் கோள்கள் செப்பிடத் துணிந்தான்.
என்பால் வந்தெற் கினியன செய்த
வார்டர்க ளெல்லாம் வராமற் செய்தான்;
சைவக் * கிச்சனில் தனிப்பட எனக்குச்
சமைத்த உணவினை ஜாதியில் பார்ப்பான்
ஒருவன் கொண்டுவந் துதவிடச் செய்தான்;
ஒருநாள் மாலையான் உறங்கும் அரங்கினை
யானே பெருக்க வேணும் என்றான்.
" அந்த வேலையை எந்த நாளிலும்
செய்த தில்லையான் செய்யேன் என்றும்,
அரங்கினைப் பெருக்கினால் அன்றி அரங்குளே
போகேன் " என்றும் புகன்றேன். பின்னர்ப்
பக்கத் தரங்கின் தீக்கறுப்பு கைதியை
விளித்தென் அரங்கினைப் பெருக்கச் செய்தான்.
களித்தங் கிருந்தேன் கண்டவன் செயலெலாம்.
சிறைஇன்ஸ் பெக்டர் ஜெனரல் வந்து
சிறையின் கைதிகள் சீரினைப் பார்த்தான்.
அப்போ தவன்பால் செப்பினேன் நிகழ்ந்தவை,

---

* கிச்சன்—சமையலறை. Kitchen.

தப்பிலா அவன்தான் சைவக் கிர்சனில்
தீயுள தன்மையைப் போயவண் பார்த்தே
என்னை விளித்து ' நின்னுடை கையை
அடுப்புச் சாம்பருள் அமிழ்த்துக '' என்றான்.
அடுப்புச் சாம்பருள் அக்கினி இருந்தது.
"ஜெயிலா தந்திரச் செயலிது '' வென்றேன்.
சூப்பிர [illegible]டுபால் சொல்லினன் ஏதோ ?

## சிறையில் செய்யும் சித்திரவதைகள்.

அதுமுதல் சைவர் ஆக்குப் பறையில்
தனியா எனக்குச் சமைத்துணவு வந்தது.
ஆனால் அங்குள அந்தணர் சைவர்க்
கேனோ அவ்வுண வீயப் படவிலை ;
மாப்பிளை மார்கள் மாம்ஸக் கிச்சனில்
ஆக்கிய உணவே அளிக்கப் பட்டது.
அந்தோ ! பாவம் ! அவர்என் செய்வார் !
எந்தச் செய்தியும் இயம்பினால் அடிவிழும்.
அடியும் வெற்றடி அன்று ;கம் பளம்போர்த்
தடியும் மிதியும் அனேகர் தருவது.
கம்பளம் போர்த்துமெய் வெம்பிட அடிப்பது
இச்சிறை யன்றிவே றெச்சிறை யிலுமிலை.
அடிப்பவர் கைதிகள் ; அடிக்கச் சொல்லுவோர்
ஜெயிலினை ஆளும் ஜெயிலர் ஆதியோர்.
எவன்தான் அஞ்சான் இக்கம் பளஅடி ?
எவன்தான் கண்டதை இயம்பத் துணிவன் ?
பிரிட்டிஷ் இந்தியப் பெரியதே சத்தில்
இருக்கும் ஜெயில்களின் இயல்புதான் இஃதே !
ஆயிரம் பேர்முன் அடித்துக் கொல்லினும்
போயொரு வன்கரி புகலான் உண்மை.
இத்தகை நிலைமை இயைந்துள ஜெயிலில்
எத்தகை யாக இருந்துநாள் கழிக்கலாம் ?
கைதிகள் உள்ளும் இராஜியக் கைதிகள்
செய்திகள் இங்கே செப்பும் தரமல.
தவறில ராயினும் அவரை ஜெயிலர்

பகைவர் என்றே பகைப்பன் வெறுப்பன்.
ஜெயிலின் சூப்பிரண்ட் டெண்டும் டாக்டரும்
ஜெயிலர் சொற்படி செய்யும் பொம்மைகள்.
வார்டர் முதலிய மற்றையோர் ஜெயிலர்
ஆர்டர்க் கென்றும் அஞ்சும் அடிமைகள்
ஜெயிலர் செய்ததீச் செயல்களுக் கஞ்சா
ஜெயில்இன்ஸ் பெக்டர் ஜெனரல் இடம்யான்
பிராது சொல்லிய பிழைக்குத் தெண்டனை
தராது விடுவனோ சாற்றிய ஜெயிலர்?
கூறிய அழகிய கோர்ன் டையின் அரங்
கேறியே வந்து" நீ இன்ஸ்பெக்டர் ஜெனரல்பால்
என்மேல் பிராதுதான் இயம்பினை அன்றோ?
என்மேல் செயலெலாம் இனிநீ காண்பாய்.
என்னொடு வா" என் றியம்பினன் சென்றேன்.
மன்னினேம் சிறையுள் மன்னிய மூன்றும்
பிளாக்கின் ஹாலுள் "* பிரிண்டிங் போர்மனை
எழுத்தின் † ஸ்டாண்டுடன் இங்கு வரச்சொல்"
என்றொரு வார்டர்பால் இயம்பினன் ஜெயிலர்
நன்றெனச் சென்றான். நவின்றவன் வந்தான்
அச்செழுத் துக்கள் வைக்கப் பட்டுள
பெட்டிகள் கொண்டு நிற்கும் ஸ்டாண்டோடு.
" தினந்தொறும் காலையில் ஸ்டாண்டிவண்
[கொண்டுவை;
தினந்தொறும் மாலையில் ஸ்டாண்டினைக்
[கொண்டுபோ
காலை முதல்இவன் மாலை வரையில்
கம்போஸ் செய்வதை எம்பால் காட்டுக"

* பிரிண்டிங் போர்மன்—அச்சாலை மேஸ்திரி.
† ஸ்டாண்டு—எழுத்துக்கள் வைக்கப்படும் ஸ்டாண்டு.

10

# அற நூல்கள் இயற்றியமை.

என்றுவந் தவன்பால் இயம்பினான் ஜெயிலர்
நன்றெனக் கூறி வந்தவன் போனான்.
வேலையான் செய்ததாப் பேரே யன்றி
வேலையே செய்திலேன். மெய்ப்பொருள் கண்டு
"மெய்யறி" வியற்றியும் † "மெய்யறம்" இயற்றியும்
சொந்த வேலையே எந்த வேளையும்
செய்து நின்றேன். தீய ஜெயிலர்
செய்தான் ஒன்று செப்புவல் கேண்மோ.
இரவிலப் பிளாக்கில் என்னுடை திண்ணைக்
கயலுள திண்ணையில் அனேக கொலைகள்
செய்தோர் ஆயுள் தீவாந் தரத்தீர்ப்
பெய்தி அச் சிறையுள் ஏகி ஜெயிலர்
ஆதியோர் சொற்படி அனேக கைதிகள்
வேதனை அடைய மேன்மேல் அடித்துப்
பேர்மிகப் படைத்தோர் ‡ ஓவர்சீய ராகி
மாபோல் திரியும் மாப்பிளை ஒருவனைப்
படுக்கச் செய்தனன் பாவி அஜ் ஜெயிலர்.
நடுக்கம் கொண்டு நண்ணிலேன் உறக்கம்;
கம்பளம் போர்த்துக் கைதிக ளாலே
கம்படி கொடுப்பனோ, கால்மிதி கொடுப்பனோ,
குத்திக் கொல்வனோ, கொடுந்துன பிழைப்பனோ,
எத்தைச் செய்வனோ? என்றுளம் கலங்கினேன்,

‡ ஓவர்ஸியர்—மேற்பார்வை பார்ப்போன். Overseer.

† நூலாசிரியர் இயற்றியுள்ள நூல்கள்.

இப்படிச் சிலநாள் ஏகின. அந்நாள்
தப்பிலென் மைத்துனன் சாற்றிய பிச்சனும்
கண்ணனூர் வந்து * கணபதி சார்பில்
நண்ணி யிருந்தனர். நாள்தொறும் அவர்க்கு
ஜெயிலுள் நிகழ்ந்தன தெரிவித்து நின்றேன்.
ஜெயிலுள் வந்தெனைத் தெரிசித் தனர்அவர்.
செப்பிய மாப்பிளை சிலதினம் கழிந்தபின்
எப்படி யோதான் என்வசம் ஆயினன் ;
சொன்னது கேட்டனன் ; தொண்டுகள் செய்தனன்.
பின்னிர வினில்யான் மன்னினேன் உறக்கம்.
ஜெயிலின் சூப்பிரண் டெண்டாம் ஸாமியார்
அளவிலா தென்மேல் அன்புகொண் டிருந்தனன்.
அரிசி உணவே அளித்து வந்தனன் ;
அனுமதி தந்தனன் அன்புடன் யான்அவண்
நூல்கள் படிக்கவும் நூல்கள் எழுதவும்.
சரீரப் பயிற்சிகள் தக்கபடி செய்தென்
சரீரப் பலமும் சரீர நலனும்

* கணபதி—கண்ணனூர் ரயில்வே கண்டிராக்டர் கணபதியா பிள்ளை.

வளர்த்து நின்றேன். மதிக்கவும் கண்டவர்,
கிழத்தனம் என்றுமென் கிட்ட வராமலும்.
குவிந்த மனத்தினக் கொடுஞ்சிறை இருந்த
நவின்ற சங்கர நாரா யணன்முதல்
பலர்க்கு முரிய * புரொக்களமேஷன்
† ரிமிஷனும் எட்வர்டு ரிமிஷனும் ஜார்ஜ்
ரிமிஷனும் கொடாமல் அவரைவைத் திருந்ததை
அறிந்தேன். "ஹிந்து"வுக் கறைந்தேன். அதுபிர
சுரித்ததும் அவரைத் துரிதமா விடுதலை
செய்தனர். என்னிலம் சென்றனர். அவர்க்குக்
செய்தனன் விருந்தென் செப்பிய மைத்துனன்.
திருநெல் வேலிக் குடனவர் போயினர்.
சாற்றிய சூப்பிரன் டெண்டு ஸாமியார்
மேற்றிசை சென்றனன். வேறொரு வெள்ளை
டாக்டர் சிறையின் சூப்பிரண் டாயினன்.
ஒருநாட் காலை ஒன்பது மணிக்கு
மருவரு கடவுளை மருவியான் மகிழ்ந்து
பாடிக் கொண்டிரு பக்கமும் உலாவி
ஓடிக் கொண்டியான் உவகையுற் றிருந்தேன்.
அப்பொழுது தென்னுடை ஹாலின் இரும்பளிக்
கதவின் வெளியே கழறிய சூப்பிரன்
டெண்டும் ஜெயிலரும் சிலவார் டர்களும்
கண்டென் செயலை நின்றுகொண் டிருந்தனர்.

---

* புரொக்கிளமேஷன் ரிமிஷன்—தண்டனை ரத்துப் பிரகடன
ரிமிஷன்—தண்டனை ரத்து உத்தரவு.

கடவுளின் இனிய காட்சியில் ஆழ்ந்து
உடலுளம் மறந்தவன் ஒளியுளே நின்றதால்,
அவர்அவண் வந்ததும் அவரெனை விளித்ததும்
கண்டிலேன் கேட்டிலன் கால்மணி, அவரை
அண்டினேன் பின்னர் அவருரை கேட்டு
“என்ன செய்கிறாய்?” என்றான் சூப்பிர[illegible]ட்
“என்னுடை கடவுளை இறைஞ்சினேன்” என்றேன்

## உண்ணாவிரதம் : உள்விளக்கெண்ணெய்.

"திடமொடு வேலையைச் செயவேண் டுங்கால்
கடவுளைத் தொழுதகென் கழறுக" என்றான்.
"பொறுத்தருள்" என்றேன். மறுத்தவன்
[போயினன்,
அரிசி உணவை அன்றே நிறுத்தினன் ;
வரிசைப் படிகேழ் வரகுண வடுத்தது.
விடுதலைக் காலம் நெருங்கினின் றமையால்
அதன்முன் இவனிடம் அரிசி உணவு
பெறுதல்வேண் டும்மென உளமொடு நினைத்தனே.
உணவினை நிறுத்தினேன் ; உள்விளக் கெண்ணெய்
தினமொடு கொண்டேன் ; செலஒரு வாரம்
பத்துப் பவுண்டெடை குறைந்தேன் நிறுவையில்
அத்தைத் தெரிந்ததும் அளித்தனன் எனக்குச்
செப்பிய சூப்பிரண் டெண்டுநெல் சோறுபால்.
என்னுடை எண்ணம் இனிதுநிறை வேறினும்
என்னுடை உடம்புதான் இழந்த பலத்தினை
இன்னும் அடைந்தில தென்றியான் சொலினது
மன்னும் உண்மையாம் ; மற்றதா காது.
மெலிந்த உடம்பொடும் நலிந்த மனமொடும்
மெய்ப்பொருன் தொழுது மெய்ப்பொருள் கண்டு
மெய்ப்பொருள் ஆகி விளங்கினேன் சிலநாள்.
செப்பிய எனது அப்பிலில் அளித்த
ஆறு வருஷ நாடு கடத்தல்
சிட்சையில் அரசி விக்டோரியாதான்
ஆயிரத் தெண்ணூற் றைம்பத் தேழாம்

வருடம் வெளியிட்ட பு
பாரான் எட்வர்ட் பார்லி மெண்டில்
வாசித்த காலையில் வழங்கிய ரிமிஷன்
இறந்த காலையில் ஈந்த ரிமிஷன்
சிறந்த ஜார்ஜ்தான் ஸிம்மா ஸனத்தில்
ஏறிய காலத் தீந்த ரிமிஷன்
ஆக மூன்றும் கூடிய வருஷம்
ஒன்றரை போக நின்ற நாலரையில்
சிறைவா ஸத்தில் சென்றது நீக்கி
சிலசில நாளே செல்லநின் றமையால்
வள்ளி நாயகனை வரும்படி எழுதினேன்.
அவனும் வந்து தவம்நனி புரிந்தென்
மனைவி மக்கள் மைத்துனன் சொல்லிய
கணபதி அவர்தம் மனைவி மக்கள்
உடனெம் வரவைத் திடமொடு நோக்கி
கண்ணனூர் நகரில் நண்ணிநின் றனர்காண்

## விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

ஆயிரத் துத்தோள் ளாயிரத் துப்பன்
னிரண்டாம் வருஷம் டிஸம்பர் மாதம்
ஒருநன் மாலையென் உடம்பில் எண்ணெய்
சிறிது தடவி முழுக நிற்கையில்
ஒருவன் வந்தெனை ஜெயிலர் விளிப்பதா
அழைத்தான். சிறையுடை அணிந்துடன் சென்றேன்.
"விடுதலை ஆர்டர் அடுத்தது. நீவிர்
வீடுற லாமென விளம்பினன் ஜெயிலர்
மைத்துனன் அனுப்பிய பட்டுடை உடுத்தியான்
வீடடைந் தேன்மாண் வீடடைந் தேனே!

Printed at Haddon & Co., 49, Badrian St, G. T. Madras
for Kamala Prachuralayam. Q. H. M. S. 197. 30—11—1946.